www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

දිනමුරසු වාරමලර

பக்கம் 20 ரூபா 12/00

ஏப்.18-24,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 305

## பெர்னாண்டசும் புலிகளும்

### கிளம்பும் புகார்கள்





## அரசின் அடுத்தகட்ட வியூகம்

### ரஜினியோடு நடித்தது ஏன்? அப்பாஸ் விளக்கம்



## விஜய்க்கு எதிராகச் சதி



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## குண்டு விதைப்பு

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

யூகோசுலாவியாமீது
அமெரிக்கா குண்டுகளை
விதைத்து விளையாடியிருக்கிறது!

ஐ.நா.சபையின்
பெயரைக் கூறிக்கொண்டு
அத்துமீறல்களில்
ஈடுபட்டுவருகிறது அமெரிக்கா!

நேற்று ஈராக்...!
இன்று யூகோசுலாவியா!

உலகப் பொலிஸ்காரனாக
தன்னைத்தானே
நியமித்துக் கொண்டு
அமெரிக்க அரசு
வாலாட்டி வருகிறது!

"கீரைக் கடைக்கும்
எதிர்க்கடை வேண்டும்!"
என்பது அமெரிக்காவுக்கும்
சாலப் பொருந்தும்!

சோவியத் யூனியன்
சிதறுண்டு போனதால்,
தட்டிக்கேட்க ஆளில்லாத
சண்டப் பிரசண்டனாக

தலைகால் புரியாமல்
ஆட்டம் போடுகிறது!

இலங்கையில்
இராணுவத் தீர்வுக்கு
ஆசிர்வாதம்!

இந்தியாவில்
உள்நாட்டுப் பிரச்சனைக்கு
ஊக்குவிப்பு!

இவ்வாறு தன் நலனுக்கு
ஏற்பவே கொள்கைகளை
வடிவமைத்து
உலகைக் கட்டியாள
நினைக்கிறது அமெரிக்கா!

அண்மையில் இந்தியாவில்
அமெரிக்க வேவு விமானம்
புகைப்படம் எடுத்ததாக
சந்தேகம் கிளம்பியுள்ளது!

எனவே, போராடும்
மக்களுக்கு உதவுவதோ,
நியாயத்துக்காக வாதிடுவதோ
அமெரிக்காவின் நோக்கமாக
ஒருபோதும் இருந்ததில்லை!

காலம் காலமாய்
அநீதிகளையும், அடக்குமுறைகளையும்
பாலூட்டி வளர்க்கும்
நாசகார வேலையைத்தான்
அமெரிக்கா செய்துவருகிறது!

ஜனாதிபதிகள்
யாராக இருந்தாலும்,
அமெரிக்க நலன்தான்
அவர்களது உயிர்மூச்சு!

நாட்டு நலனில்
நாட்டம் இருப்பது தவறல்ல!
ஏனைய நாடுகளை
கட்டியாளும் நாட்டம்
கொண்டிருப்பதுதான் ஆபத்து!

அமெரிக்க நலன் என்பது,
உலகை
தன் பிடியில் வைத்திருப்பதில்
தங்கியுள்ளது, என்று
நினைக்கிறது அமெரிக்கா!

அதிலிருந்துதான்
அதன் கொள்கைகள்
ஒவ்வொன்றும்
உருவாக்கப்படுகின்றன!

அதனால்தான்
அமெரிக்காவின் கொள்கை
அகில உலகத்துக்கே
ஆபத்தான கொள்கையாகிறது!

யுகோசுலாவியாவில்
இன்றிருக்கும் அரசு
நீதியான அரசு என்று
நாம் கூறவரவில்லை!

ஆனால் அமெரிக்கா
அதனைத் தட்டிக்கேட்பது
பொது நல நோக்கோடு அல்ல!

தன் பொலிஸ்காரத்தனத்தை
ஏற்க மறுத்தால்
இதுதான் கதி என்று
உலகை மிரட்டவே
இந்தக் குண்டு விதைப்பு!

இந்தத் தாக்குதலில்
அமெரிக்க நலனும்
கிளின்ரனின் நலனும்
பிரிக்கமுடியாதபடி
ஒன்று கலந்து கிடக்கின்றன!

மோனிகாவின் நூல்
வெளியாகி
கிளின்ரனை பக்கம் பக்கமாக
கிழித்துப் போடும் தருணத்தில்,
மக்களை திசைத் திருப்ப
யுகோசுலாவியாமீது
குண்டை கொளுத்திப்போட்டு
விளையாடுகிறார் கிளின்ரன்!

கிளின்ரனின் விளையாட்டு
அமெரிக்க நலனுக்கு
ஏற்புடையதாக இருப்பதால்
எதிர்ப்பேதும் எழவில்லை!

உலக ஜனநாயக சக்திகள்
ஓங்கிக் கண்டிக்கும்
அமெரிக்க அத்துமீறலை
நம் நாட்டரசு
மென்மையாக- மேலெழுந்தவாரியாக
நோகாமல் கண்டித்திருக்கிறது!

அதாவது, இங்கு
தமிழ்க் கட்சிகள்
அரசைக் கண்டிக்கும் பாணியில்,
அமெரிக்காவை
அரசு கண்டித்துள்ளது.

உலகெங்கும் எழும்
உறுதியான கண்டனங்கள்மூலமே
அமெரிக்க அத்துமீறல்களை
கட்டுக்குள் கொண்டுவரலாம்!

அமெரிக்க எதிர்ப்பில்
ஊன்றி நிற்கும்
சகல சக்திகளோடும்
இணைந்து
'முரசு'ம் தன் கண்டனத்தை
பதிவு செய்து கொள்கிறது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்



## ஆன்மீகம்

### அன்பும் ஆன்மாவும்

'அன்பே சிவம்' என்பதுதான் சைவத்தின் அடிப்படைத் தத்துவம். ஒருவர் மீது மட்டும் அன்பு செலுத்துவதோ, தன் தாய்-தந்தை-சகோதரர்கள், மனைவி, மக்கள் சுற்றத்தார் மீது அன்பு செலுத்துவதோ மட்டும் உண்மையான அன்பல்ல. பிற மனிதர்களிடத்தில் அன்பு செலுத்துவது மட்டும் உண்மையான அன்பாக முடியாது.

சகல உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே தூய- உண்மையான அன்பாகும். எல்லா உயிரினங்களிலும் ஆன்மா ஒரே அளவில், ஒரே நிலையில்தான் இருக்கிறது. யானையும் திமிங்கிலமும் உருவத்தில் பெரிதாகக் காணப்படுவதால் அவற்றுக்குப் பெரிய பரிமாணத்தில் ஆன்மா உறைந்திருக்கிறது என்று கருதி விடலாகாது. சின்னஞ்சிறு- ஊனக் கண்களுக்கே புலப்படாத- புழுவுக்கும் மனிதனுக்கும் ஆன்மா ஒரே அளவில்தான் அமைந்துள்ளது.

மெய்ஞானிகள்- ஆன்மாவையே ஜீவாத்மா என்றும் இறைவனை பரமாத்மா என்றும் பகுத்துக் கூறுகின்றனர். இவை இருவேறாகக் குறிக்கப்பட்டபோதும், இவை இரண்டும் ஒன்றே. எப்போதும் ஒன்றையொன்று தழுவியேயுள்ளன.

உடலில் ஒளிந்தும் ஒளியாமல் இருக்கும் ஜீவாத்மா எப்போதும் பரமாத்மாவோடு இணைந்து கொள்ளவே நாட்டம் கொண்டுள்ளது. தான் தேர்ந்தெடுத்த உடல் ஈடுபடும் காரியங்களின் தன்மையைப் பொறுத்தே, அவ்வுடலில் ஆன்மா தங்கியிருந்து உடலை ஆட்டிப்படைக்கிறது. உடலுக்கான- விதிக்கப்பட்ட காலக் கெடு தீர்ந்ததும் ஆன்மா வெளியேறுகிறது. இருப்பினும், அந்த ஜீவாத்மா தன் நிலையான பரமாத்மாவுடன் உடன் சென்று இணைந்து விடுவதில்லை. மீண்டும் மீண்டும் வெவ்வேறு உடல்களுக்குள் புகுந்து ஆட்டம் போடுகிறது.

இவ்வாறு ஆன்மா புகும் உடல்களின் துணையுடன், பிற ஜீவராசிகளுக்கு அன்பு காட்டும் அளவினைக் கொண்டே- இறவாமல் பிறவாமல் நிலைத்திருக்கும் பரமாத்மாவுடன் இணைந்து விடுகிறது.

ஞானேந்திரன்.



### பசித்திரு! தனித்திரு! விழித்திரு!

எவரேனும் அல்லாஹ்விடம் அந்தஸ்தையும் பதவியையும் அடைய ஆசைப்பட்டால், அவர் பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து வணக்கங்கள் புரிய வேண்டும்.

ஹஜ்ரத் அப்துல் மஜீது இப்னு ஸல்மா(ரஹ்) அவர்கள் ஹஜ்ரத் முஆத் இப்னு அஷ்ராஸ் (ரஹ்) அவர்களிடம் "எந்த அமலினால் ஒரு மனிதன் அல்லாஹ்வின் அந்தஸ்தையும் பதவியையும் அடைய முடியும்?" எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் "பசித்திருத்தல், தனித்திருத்தல், விழித்திருத்தல், வாய் மூடி மௌனமாயிருத்தல்" என பதிலளித்தார்கள்.

அல்லாஹ்வின் பார்வையில் மூன்றுவித மனிதர்கள் தாம் படைப்புக்களிலேயே மிகவும் வெறுப்புக்குள்ளானவர்கள். அவர்களில் முதலாமவர், பகலில் அதிகம் தூங்குபவனும், இரவில் தொழாதவனுமாவான். இரண்டாமவன், அதிகம் சாப்பிடுபவனும் சாப்பிடும்போது பிஸ்மில்லாஹ்வோ அல்ஹம்துலில்லாவோ கூறாதவனுமாவான். மூன்றாமவன், காரணமின்றி அதிகம் சிரிப்பவனுமாவான். ஏனெனில் அதிகம் சிரிப்பது உள்ளத்தை மரணிக்கச் செய்கிறது. ஏழ்மையை உண்டாக்கி விடுகிறது.

வை.எம். தாஹிர்கரீம்,
கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல. 305




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 24.04.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.305
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல. 302

### பரிசுக்குரிய கவிதை

#### தெரியாதோர் உண்டோ?



மேடுகளாய் இங்கே பாசறைகள்;
குழிகளிலே தேங்கி நிற்கும்
குருதிகளின் உறைவுகள்;
குடி நீர் கிணறுகளில்
குற்றுயிராய் உடல்கள்;
குடிப்பதற்கு நீர்தேடி நாளும்
குடத்தோடு அலைச்சல்...!

ஆர்.அஞ்சனாதேவி- மட்டக்களப்பு.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### தண்டனையோ?

தலையில் கனத்தோடு
தவித்திருக்கும் தூணருகே
தங்கமே-இது உனக்கு
தமிழர் குழு
தந்தத் தண்டனையோ?

ஜி.கே.யோகச்சந்திரன்-
அக்கரைப்பற்று-07.

#### கொடியது எது?

வறுமை கொடியது
அதனிலும் கொடியது
இளமையில் வறுமை!
யுத்தம் கொடியது
அதனிலும் கொடியது
நம் தமிழ்க் கட்சிகள்
குனிந்து கொண்டிருப்பது!

அரவிந்தன் ரவீந்திரநாத்-
அக்கரைப்பற்று-08.

#### தண்ணீரில்லை

மடுறோட்டுக்குளம் அருகே
நான் போனேன் தண்ணீருக்கு!
சுடுறோட்டு... எங்குமே படை...
தண்ணீரில்லை...இன்றெனக்கு!

ரி.லஷ்மிதேவி- மட்டக்களப்பு.

#### வெறும்குடம்

இனவாத ஊற்றுடைந்து
இந்நாட்டில் ஓடுமட்டும்
நான் சுமக்கும் இக்குடமும்
வெறும்குடந்தான்; தண்ணீரில்லை!

கவிஞர் திக்கவயல்-அம்பாறை.

#### நெஞ்சிலே நெருப்பு!

தலையிலே தண்ணீர்
விழியிலே கண்ணீர்
முகத்திலே சோகம்
அகத்திலே நெருப்பு!

செல்வி மதுரா-யோகேந்திரன்,
திருக்கோவில்.

#### தண்ணீரும் கண்ணீரும்!

சிரந்தனிலே
இவள் சுமந்தாள்
தண்ணீர்க்குடம்...!
சிந்தையிலே
தான்சுமந்தாள்
கண்ணீர்க்குடம்...!

வ.ஆ. அதிருபசிங்கம்-
விசுவமடு.

#### ஜனநாயக நீரோட்டம்!

எமக்காகவென்று!
இவர்கள் பறித்த குழிகளுக்குள்
தண்ணீர் இல்லை...;
தலைகள்தான் இருக்கின்றன!

பி.ரதன்- கொழும்பு-13.

#### நாளை நானும்...?

செம்மணிப் புதைகுழியில் அண்ணா;
துரையப்பா அரங்கினில் அப்பா;
நாளை நானும் எவ்விடத்திலோ...?

மேகவாணி- வெள்ளவத்தை.

#### பொதி

நிறைகுடமாதலால்
சுமையாச்சு!!
குறை குடம் போல
பொதி போச்சு!!

கிரிசாந்தி சந்திரகலா-
மட்டக்களப்பு.

## வாசக(ர்)சாலை

### தமிழ்க் கட்சி கடிக்கும் சுடி!

ஆட்டைக் கடித்து
மாட்டைக் கடித்து
தமிழ்க்கட்சிகளையும்
கடிக்கத் தொடங்கிவிட்டது
அவசரகாலச் சட்டம்!
தமிழ்க் கட்சிகள் இதனை
ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும்.
எதிர்த்தால் உடனே
சட்டம் வாபஸாகிவிடாது;
ஆனால், அடக்குமுறைக்கு
எதிர்ப்புத் தெரிவிப்பது
அரசியல் கட்சிகளது கடமையன்றோ?
தமிழ்க் கட்சிகள் அனைத்தும்
எதிர்க்கின்றன என்பதே
அதன் வீரியத்தை சற்றுக் குறைக்கும்.
உலக ரீதியிலும் அச் சட்டத்தின்
இரும்புக்கரத்தைத் தெரியப்படுத்தும்.

த.ராஜசூரியர், கொழும்பு-08.

### கைதும் மௌனமும்

ரெலோவின் முக்கிய தலைவருக்கே சிறை! தடுப்புக்காவல்! புலி என்று சந்தேகம்! நிபந்தனையுடன் பிணை! இந்த வெட்கக் கேட்டை எதிர்த்துக் குரல் கொடுக்கக்கூட தமிழ்க் கட்சிகள் முன்வரவில்லை.

வெட்கம், சூடு, சொரணை எல்லாமே மரத்துப்போய்விட்டனவா? தமது ஆட்களையே இப்படி அபாண்டமாகப் பழி சுமத்துவதை ஜீரணிக்கும் இக் கட்சிகள், தமிழ் மக்களது அவமானங்களையிட்டு மௌனம் சாதிப்பது வியப்பானதல்ல.

அவசரகாலச் சட்டத்தை தமிழ்க் கட்சிகளுக்கு எதிராகவே திருப்பி விடுகிறது அரசு. இப்போதே இந்நிலை என்றால்...?

கே.விக்னேஸ்வரன், வவுனியா.

### ஒத்திவைப்பு



முரசே! உன் கணிப்புக்கள் நிகழ்ச்சிகளால் உறுதி செய்யப்படுவதாக கூறுவது உண்மைதான்! "மாகாணசபை தேர்தலுக்கு முன்னர் செம்மணி தோண்டப்படமாட்டாது" என்று அதிரடியார் அடித்துக் கூறியிருந்தார். அப்படியே நடந்துவிட்டதே! ஜூன் மாதம் ஒத்திப்போட்டு இழுத்தடித்துவிட்டனரே?!

எஸ்.தில்லைநாதன், கொழும்பு-06.

### பேருதவி புரிபவர்கள்

தமிழ்க் கட்சிகள் அரசை அம்பலப படுத்தத் தயங்குவதை இராஜதந்திரியார் சுட்டிக்காட்டியிருந்தார். செம்மணி விவகாரம், களுத்துறை சிறைப் படுகொலை, யாழ் காணி பறிப்பு என்று எத்தனையோ பாரிய பிரச்சனைகளில் இக்கட்சிகள் பிரச்சனைகளை ஆறப்போடவே பேருதவி புரிந்துள்ளன என்பது இரகசியமல்ல. இக் கட்சிகள் ஐக்கியம் பற்றிப் பேசுவது இந்த நூற்றாண்டின் சிறந்த நகைச்சுவைகளில் ஒன்றாக இடம்பிடிக்கத்தக்கது.

ஆர்.போல்ராஜ், மட்டக்களப்பு.

துயர வெளியில் துவண்டு போகும் என் போன்ற உள்ளங்களுக்கு ஒவ்வொரு வாரமும் சந்தோஷ மழையைப் பொழிய வைத்து மனதில் நிம்மதி மலர்களை மலரவைக்கும் முத்தான முரசே! நீ என் கரம் கிடைத்ததும் வானத்தில் லுள்ள நட்சத்திரங்கள் எல்லாம் என் கையில் கிடைத்தது போல் மகிழ்வேன். ஒரு வாரம் உன்னை வாசிக்கத் தவறினால் என் உள்ளம் பதறுகிறது. நீ தரும் அத்தனை அம்சங்களும் அபாரம்.

செல்வி.வாணி மார்க்கண்டு, கிரான்.

### இதுதான் மென்முறையோ?

ரெலோ இயக்க பிரமுகரும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் கைதான செய்திகளை முரசு மூலம் அறிந்தேன். தமிழ்க் கட்சிகள் வாயே திறக்காது இருந்துள்ளன. முன்னர்- அதாவது சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக, தம்மில் ஒருவர் கைதானால்கூட சுவரொட்டி ஒட்டுவர். அநியாயக் கைது, அடக்குமுறை என்பர். இன்று கைதுகள் நியாயம்? மென்முறை என்று நினைத்து விட்டனரோ? இவற்றை வெளியே தெரியப்படுத்தினால் மக்கள் சிரிப்பார்கள் என்று நினைக்கிறார்களா? முன்பெல்லாம் கைதாவது கௌரவமானது என்றனர்.

இப்போது கௌரவக் குறைச்சலாக நினைக்கின்றனர்! ஏனெனில் தமது அரச சார்பு நிலைகளுக்கு இவை கெடுதல் என்று கருதுகின்றனர்.

ச.ஜெயபாலன், கனடா.

அன்பின் முரசுக்கு,

உறவினர்கள் உன்னைப் பார்க்க வரவில்லையா? என்ற கேள்வியை விட்டு, தினமுரசு இன்னும் வரவில்லையா? என்று ஒவ்வொருவரும் ஒவ்வொருவரிடமும் கேட்ட வண்ணம் இருப்பார்கள். நண்பர்கள், உறவினர்களின் ஆறுதல் வார்த்தை இல்லாத அன்னிய நாட்டின் சிறைகளில்கூட எமக்கு நண்பர்களாகவும், உறவினர்களாகவும் ஆறுதல் கூறுவது போன்ற பல்சுவை புதினங்களை வாரி வழங்குவது தினமுரசு ஒன்றே. முரசைப் படித்து முடித்தால் ஒருமுறை தாயகம் வந்து போனது போன்று இருக்கும். முரசின் ஒவ்வொரு பக்கங்களும் பெறுமதி வாய்ந்த தகவல்களுடனேயே இருக்கும். இதை எப்படி விவரிப்பது? திறந்து இருக்கும் வீட்டுக் கதவுகளைத் தாண்டும் பத்திரிகை அல்ல இது. உடைக்க முடியாத சிறைக் கதவுகளை தாண்டி வரும் இனிய இதழ் இது. இது ஒன்றே போதும் முரசின் பெருமையை விவரிப்பதற்கு!

இ.விஜயகுமார், ஹொங்கொங் சிறைச்சாலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# செம்மணி எலும்புகள் மக்கிப்போகும்
# மண்ணியல் நிபுணர்கள் புதிய தகவல்!

செம்மணி புதைகுழிப் பகுதியில் தற்போதும் எலும்புகள் இருக்குமானால், அவை மண்ணோடு மண்ணாக உலுத்துப் போய் விடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மண்ணியல் ஆராய்ச்சி தொடர்பான அனுபவம் உள்ள சிலரே இவ்வாறு கூறியுள்ளனர். அவர்கள் தமது பெயர்களை குறிப்பிட விரும்பவில்லை.

செம்மணிப் பகுதி உப்புநீர் கலந்த சதுப்பு நிலப்பகுதியாகும். எனவே நீண்ட காலம் எலும்புகள் சிதையாமல் இருக்குமா என்பது சந்தேகமே.

துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியின் மண்தன்மை செம்மணிப் பகுதி போன்றதல்ல. அதனால் அங்கு பலகாலமாக எலும்புகள் இருக்க முடிந்துள்ளது. அவ்வாறிருந்தும் பல எலும்புகள் உளுத்துப் போயுள்ளன.

உப்பு நீர் கலந்த சதுப்பு நிலப்பகுதியான செம்மணியில் விரைவாக எலும்புகள் கெட்டுப் போய்விடும்.

இதனை அறிந்துதான் காலம் இழுத்தடிக்கப்படுகிறதோ என்றும் அவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் செம்மணி விவகாரத்தை கொண்டுவந்ததாக காண்பித்துள்ளது மூலம் இழுத்தடிப்புக்கு சட்ட நியாயம் கற்பிக்கப்படுகிறது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

எதிர்வரும் மே மாதத்தில் இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளது மாநாடு பாரிசில் நடைபெற உள்ளது. நீதிமன்றத்தின் முன்னாள் செம்மணி விவகாரம் கொண்டுவரப்பட்டுவிட்டதாக அரசு கூறுவதற்கு இது ஏதுவாகியுள்ளது.

ஆனால், செம்மணி புதைகுழிகளை தோண்டாது மேலும் இழுத்தடிப்பதற்கான முயற்சிகளே நடந்து வருகின்றன என்று தெரிகிறது.

மண் ஆராய்ச்சி முடிந்ததும் தாவர ஆராய்ச்சியில் ஈடுபட்டு மேலும் காலம் தாழ்த்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாம்.

தாவரங்கள் எப்போது முளைக்க ஆரம்பித்தன என்று ஆராய்ந்து,தடயங்கள் அகற்றப்பட்டதா? இல்லையா என்று முடிவுக்கு வர உள்ளதாக கூறப்போகிறார்கள்.

இவ்வாறான அணுகுமுறைகள் சூரிய கந்தையிலோ, துரையப்பா அரங்கிலோ புதைகுழிகள் தோண்டும்போது ஏன் பின்பற்றப்படவில்லை என்று காணாமல் போனோரின் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

### துரையப்பா அரங்கில்

இதேவேளை துரையப்பா அரங்கில் தொடர்ந்தும் எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டும், அப்பகுதிக்கு இச் செய்தி எழுதும்வரை எந்தவொரு தமிழ்க் கட்சியும் சென்று பார்வையிடவில்லை. அபிப்பிராயம் தெரிவிக்கவும் இல்லை.

இலங்கைப் படையினரையும் கண்டிக்க முடியாது. இந்தியாவையும் கண்டிக்க முடியாது. அவ்வாறு கண்டித்தால் இந்திய தூதரகத்துக்கு விருந்துகளுக்கு செல்வதோ, விசாக்கள் பெறுவதோ சிரமமாகிவிடும் என்று தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகர் வெளிப்படையாகவே தெரிவித்தார். தனது பெயரை மட்டும் குறிப்பிட வேண்டாம் என்று கூறிவிட்டார்.

# தமிழ் அகதிகளுக்கு ஆதரவு!
# டென்மார்க்கில் பேரணி!

இலங்கையில் வடக்கு-கிழக்கில் குறிப்பாக வன்னியில் மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து அகதிகளாக மாறியுள்ளனர். அகதிகளின் அவல நிலையை உலகுக்கு எடுத்துக்காட்ட பேரணி ஒன்றை நடத்துகிறோம். இவ்வாறு டென்மார்க் தமிழ் அமைப்புகளது ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 17ம் திகதி சனிக்கிழமை டென்மார்க் கொப்பன்கேகன் நகரில் பிரமாண்டமான அமைதிப் பேரணி நடக்கவுள்ளது.

இப்பேரணியின் முடிவில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது. பேரணி டென்மார்க் பாராளுமன்ற சதுக்கத்தில் முடிவடையும்.

இப் பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் குமார் பொன்னம்பலமும் கலந்து கொள்ள இருக்கிறார்.

ஏப்ரல் 19ம் திகதி டென்மார்க் பாராளுமன்ற கட்டடத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் இலங்கையில் தற்போதைய நிலை தொடர்பாக விளக்கமளிக்கப்பட இருக்கிறது.

இலங்கைத் தமிழர்பாலும், வன்னியில் தமது சொந்த நாட்டிலேயே அகதிகளாகியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள்மீதும் எமக்குள்ள அக்கறையை வெளிப்படுத்துவதே இப் பேரணியினதும், பத்திரிகையாளர் மாநாட்டினதும் நோக்கம் என்று டென்மார்க் தமிழர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை இலங்கை அரசு ஏன் மறுக்கிறது என்பதற்கான விளக்கங்கள், செம்மணி புதைகுழி விவகாரம், தமிழர்களை டென்மார்க்கிலிருந்து திருப்பி அனுப்புவதை நிறுத்தல் போன்ற பல விடயங்கள் பற்றி பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கமளிக்கப் போவதாகவும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# வலிகாமம் வீடுகள் இடிப்பு
# சென்ற ஆட்சிமீது சம்பந்தர் பாய்ச்சல்
## அரசுக்கு வரவேற்பு! எதிரணிக்கு எச்சரிக்கை!

“வலிகாமம் பகுதியில் உள்ள தமிழர்களது வீடுகள் சென்ற ஆட்சிக் காலத்திலேயே இடிக்கப்பட்டன.” இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் இரா.சம்பந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகால சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு 09.04.99 அன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தனது உரையை ஆரம்பித்தபோது மாகாணசபை தேர்தலில் பொதுஜன முன்னணிக்கு கிடைத்த வெற்றிக்கு தனது பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டார்.

அரசாங்கத்தின்மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையையே இது காண்பிக்கிறது என்றும் அவர் கூறினார்.

தமிழ் மக்கள் இம்முறை எதிர்ப்பு வாக்குகளை பிரயோகித்துள்ளனர். ஐ.தே.கட்சிக்கு வாக்களித்துள்ளனர். என்று கூறிய சம்பந்தர், “இந்த வாக்குகள் தொடர்ந்து தமக்கு கிடைக்கும் என்று ஐ.தே.கட்சி கருதக்கூடாது. தமிழ் மக்கள் தொடர்ந்து உங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள்" என்று எச்சரிக்கையும் விடுத்தார்.

இரா. சம்பந்தர் இவ்வாறு எச்சரித்தபோது ஐ.தே.கட்சி தரப்பில் முன்னாள் அமைச்சர் அஸ்வர் உட்பட மூவர் மட்டுமே சமுகமளித்திருந்தனர். அரச தரப்பில் அமைச்சர் அலவி மௌலானா உட்பட ஐந்துபேர்வரை அமர்ந்திருந்தனர். அமைச்சர் அலவி புன்னகையுடன் சம்பந்தரது பேச்சை செவி மடுத்துக் கொண்டிருந்தார்.

அரசோடு ஒத்துழைக்க மறுக்கும் ஐ.தே. கட்சியினர் புலிகளோடு பேசுமாறு அரசிடம் கூறுவதில் அர்த்தமில்லை என்றும் சம்பந்தர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அவர்கள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரப்போவதாக கூறியுள்ளமை வரவேற்கத்தக்கது. சம்பந்தப்பட்டவர்களோடு பேசி யுத்தத்தை நிறுத்த முன்வர வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### எப்போது இடிப்பு?

வலிகாமம் பகுதியில் வீடுகள் இடிக்கப்பட்டது கடந்த கால ஆட்சிக்காலத்தில் என்று கூறிய இரா.சம்பந்தன், இன்றைய ஆட்சியில் சூரியக்கதிர் நடவடிக்கையின்போது பெருமளவு வீடுகள் அங்கு இடிக்கப்பட்டதைப் பற்றி தனது பேச்சில் ஒரு வார்த்தைகூட கூறாதது குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.கட்சி ஆட்சியில் வலிகாமத்தை பிடிக்க முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட பகுதிதான் பலாலி முகாமை சார்ந்து கட்டுப்பாட்டில் இருந்தது.

ஆனால் சூரியக்கதிரின் பின்னரே வலிகாமம் முழுவதும் படையினரின் கட்டுப்பாட்டில் வந்ததுடன், அங்குள்ள வீடுகள் பெருமளவில் புல்டோசரால் இடித்து தகர்க்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.கட்சி ஆட்சியில் ஊர்காவற்துறை போன்ற பகுதிகளிலேயே பெருமளவு வீடுகள் இடிக்கப்பட்டன. இவற்றுக்கு மாறாகவே சம்பந்தர் எம்.பியின் உரை அமைந்திருந்தது.

இரா. சம்பந்தரின் உரைகளை வழக்கமாக வெளியிடும் சில நிறுவனங்கள் இந்த உரையை தவிர்த்துவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# நினைவு தின தாக்குதல்–மினி முகாம்மீது புலிப் பாய்ச்சல்

மட்டக்களப்பு காவத்தமுனை இராணுவ மினி முகாம்மீது புலிகள் அதிரடி தாக்குதல் ஒன்றை 5.4.99 அன்று மேற்கொண்டனர்.

5.3.99 அன்று பலியான தமது 7 போராளிகளது நினைவாகவே இத் தாக்குதலை நடத்தியதாக புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

அதிகாலை 6 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலில் நான்கு படையினர் பலியாகினர். ஆறுபேர் காயமடைந்தனர். ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர், ரி.56 துப்பாக்கிகள்–08 உட்பட ஆயுதங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் கூறியுள்ளனர்.

இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. 05.03.99 அன்று விசேஷ அதிரடிப்படையினரின் தாக்குதலில் 7புலிகள் பலியாகி இருந்தனர். அவர்களது ஒருமாத நினைவுதினத்தை முன்னிட்டே இத் தாக்குதல் புலிகளால் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலை அடுத்து புலிகளும், படையினரும் ஷெல் தாக்குதல்களிலும் ஈடுபட்டனர். இதில் ஆறு படையினர் காயமடைந்தனர். பொதுமக்கள் நான்குபேரும் காயமடைந்தனர்.

# பிணங்களோடு உயிருள்ள உடல்கள்?
## தாக்குதலின் பின்னர் சம்பவம்

(மன்னார் நிருபர்)

கடந்த 17.03.99 அன்று மன்னார்-தள்ளாடி இராணுவ முகாம்மீது புலிகள் மேற்கொண்ட ஆட்டிலறித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஐந்து சிவிலியன்களில் இருவர் உயிருடன் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 08.04.99 அன்று மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பான வழக்கில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

கே.எச். சுமித் சில்வா, ரீ. தர்மசிங்க ஆகிய இருவருமே உயிருடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விருவரும் தற்போது அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மேற்படி சம்பவத்தின்போது தள்ளாடியில் பணிபுரிந்த ஐந்து சிவிலியன்களும் இறந்ததாகக் கருதி உடல்கள் சடலங்களுடன் வைக்கப்பட்டன. பின்னரே இவ்விருவரும் படுகாயமடைந்து, உயிர் பிரியாத நிலையில் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

மீகாதர சுமணசிரி, ரத்ன கம்கே சுனில், டிசிபெண்டா எக்கநாயக ஆகிய மூவருமே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவர்.

இதேவேளை மன்னார் நகரில் மக்களின் நடமாட்டம் பகல் வேளைகளிலும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. பிற்பகல் வேளைகளில் நகரம் வெறிச்சோடுகிறது.

நகரில் ஆங்காங்கே பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

சித்திரைப் புது வருடத்தை முன்னிட்டு தாக்குதல் சம்பவங்கள் ஏதும் ஏற்பட்டுவிடலாம் எனக் கருதியே மக்கள் தம் நடமாட்டத்தைக் குறைத்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

### முக்கிய அறிவித்தல்

அடுத்தவார முரசு 23.04.1999
வெள்ளிக்கிழமையன்றே
உங்கள் கரம் சேரும்!

இனிய வாசகநெஞ்சங்களுக்கு
இதயம் நிறைந்த சித்திரைப்
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# 45 மதகுருமார்கள் உண்ணா நோன்பு!
# இரண்டாயிரம் அகதிகளும் பங்கேற்பு

(நமது நிருபர்)

மாகாணசபைத் தேர்தல்கள் முடிந்துவிட்டதால் மடு தேவாலயப் பகுதியில் இருந்து படையினர் விலக்கிக் கொள்ளப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மடு தேவாலயத்தில் படையினர் நிலைகொண்டிருப்பது பற்றி வத்திகானிலுள்ள பாப்பரசருக்கும் தகவல் அனுப்பப்பட்டது என்று மன்னார் ஆயர் வண.பிதா இராயப்பு யோசப் முரசுக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் பல கிறிஸ்த மத மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளாகும். எனவே தொடர்ந்தும் மடு தேவாலயப் பகுதியில் நிலைகொண்டிருக்க அரசு விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

எனினும் உடனடியாக படைகளை அங்கிருந்து திரும்பப் பெற்றால் தேர்தல் பிரசாரத்திற்காகவே சென்றதாக கருதப்படும் என்பதால் தாமதம் காட்டுவதாக நம்பப்படுகிறது.

09.04.99 அன்று காலை 6.45 மணிமுதல் மடு தேவாலயத்தில் பிரார்த்தனையும், உண்ணா நோன்பும் நடத்தப்பட்டது.

சுமார் இரண்டாயிரம் அகதிகள் கலந்துகொண்டனர். மன்னார் ஆயர், இரத்தினபுரி மாவட்ட ஆயர் உட்பட 45 மதகுருமார்கள் இதில் கலந்துகொண்டனர். மடு தேவாலயப் பகுதியை விட்டு படையினர் வெளியேற வேண்டும் என்று கோரியே இந்த உண்ணா நோன்பு அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் ஆயர் முரசுக்கு தெரிவித்ததாவது: மடு திருப்பதி ஐநூறு வருடங்கள் பழமையானது. மடு திருப்பதியிலும், அதனைச் சூழவுள்ள 400 ஏக்கர் பரப்பளவிலும் நிலை கொண்டுள்ள படையினரின் நடவடிக்கை புனிதப் பிரதேசத்திற்கு ஏற்றதல்ல.

புனிதப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் நடமாடுவது, மது அருந்துவது, சூதாடுவது போன்றவை அனுமதிக்கப்படமாட்டாது என்று அவர் கூறினார்.

# இ.தொ.காவுக்கு வீழ்ச்சி
# ம.மக்கள் முன்னணிக்கு இலாபம்

(கண்டி நிருபர்)

மலையகத்தில் பெரிய தொழிற் சங்கம் எனக் கருதப்படும் இ.தொ.கா. கடந்த முறை ஐ.தே.கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிட்டதன் பேரில் 11 உறுப்பினர்களை சபைக்குத் தெரிவாக்கியது. இம்முறை இந்திய வம்சாவளிப் பேரணி மூலம் போட்டியிட்டதில் அந்த எண்ணிக்கை நுவரெலியா(4), கண்டி(1), மாத்தளை(1) என்ற அடிப்படையில் ஆறாக இறங்கிவிட்டது. ஐ.தே. கட்சி சார்பில் போட்டியிட்ட சி. புத்திரசிகாமணி இம்முறையும் தெரிவாகி இருக்கின்றார்.

முன்னாள் உறுப்பினர்களான அ.கதிரேசன், இரா தங்கவேல் ஆகியோர் கண்டியில் ஐ.தே.கட்சிமூலம் போட்டியிட்டு தோல்வி கண்டுள்ளனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் டி.. அய்யாத்துரை நுரளை மாவட்டத்தில் இருந்து தெரிவாகவில்லை. முன்னாள் உறுப்பினர்களில் எஸ்.ஏ. கந்தசாமி, எம்.நடராஜ பிள்ளை, எஸ்.வெள்ளையன் ஆகியோர் மீண்டும் பேரணி மூலம் சபைக்கு நுழைகிறார்கள்.

மலையக மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட மு.சிவலிங்கம், வி. இராஜகுலேந்திரன் சபைக்கு வருகிறார்கள். கடந்த தேர்தலின்போது ஒருவர் மாத்திரமே தெரிவாகி இருந்தார். எனவே மலையக மக்கள் முன்னணிக்கு இலாபம்.

மலையகத்தில் குறிப்பாக கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் தமிழர்களின் வாக்கு அட்டைகள் பறிக்கப்பட்ட சம்பவங்களினாலும் பேரணிக்கு கிடைக்க வேண்டிய வாக்குகளில் வீழ்ச்சி ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய மாகாண சபையில் கடந்த முறை இடம்பெற்றவாறே இம்முறையும் முஸ்லிம்களின் எண்ணிக்கை ஐந்தாக இருந்து வருகின்றது. ஐ.தே.கட்சி சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட நால்வரும் இம்முறை மீண்டும் தெரிவாகியுள்ளனர்.

# ஈ.பி.டி.பி. வாகனம் தகர்ப்பு
# குண்டுவைத்தது யார்?

மட்டக்களப்பு நகரில் ஈ.பி.டி.பிக்கு சொந்தமான ஜீப் வண்டி ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

கராஜ் ஒன்றில் திருத்த வேலைகளுக்கு கொண்டு சென்று நிறுத்தப்பட்ட வேளையிலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த வாகனம் ஈ.பி.டி.பி பா.உ ஒருவருக்கு சொந்தமானது என்று செய்திகள் வெளியாகின. அது தவறானதாகும். ஈ.பி.டி.பி. எம்.பி. ராசமாணிக்கம் அந்த வாகனத்தை பாவிப்பதுண்டே தவிர ஜீப்வண்டி அவருக்கு சொந்தமானதல்ல.

அவருக்கு குறிவைத்து குண்டு வைக்கப்படவும் சந்தர்ப்பமில்லை. ஏனெனில் ராசமாணிக்கம் பா.உ தற்போது வெளிநாட்டில் உள்ளார்.

ஒருவருக்கு குறி வைப்பதானால், அது தொடர்பான தகவல் எடுக்காது புலிகள் நடவடிக்கையில் ஈடுபட மாட்டார்கள். தவிர இவ்வாறு குண்டுவைக்க வாய்ப்பு இருக்கும் போது குறி இல்லாமல் குண்டு வைக்கவும் மாட்டார்கள்.

அதனால் வேறு குழுக்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் பற்றி மட்டுமல்லாது ஏறாவூரில் 06.04.99இல் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள் தொடர்பாகவும் தமிழ்க் குழு ஒன்றுமீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பொலிசாரோடு குறிப்பிட்ட குழுவுக்கு ஏற்பட்ட தகராறை அடுத்தே குண்டு வெடிப்புக்கள் அப் பகுதியில் நடத்தப்பட்டதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

# அர்ச்சகருக்கு மிரட்டல்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வீரமுனையில் இருக்கும் ஸ்ரீசிந்தாயாத்திரை பிள்ளையார் கோயில் பூசகர் மற்றும் கோயில் காவலாளி ஆகிய இருவரும் முகமூடியணிந்த நபர் ஒருவரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

10.04.99 அன்று அதிகாலை வழக்கம். போல கோயிலில் மணி அடித்து விட்டுத் திரும்பிய பூசகரையும் கோயில் காவலாளியையும் முகமூடியணிந்த நபர் தடுத்து நிறுத்தினார். அவர்களிடம், இனிமேல் அதிகாலையில் கோயிலில் மணி அடிக்கக் கூடாதெனவும், பூசைகளின்போது மேளச் சத்தம் வரக்கூடாதெனவும் மிரட்டியுள்ளனர்.

வீரமுனை ஸ்ரீ சிந்தா யாத்திரை பிள்ளையார் கோயிலுக்கு அருகில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புலிகள் அனுமதி

மட்டக்களப்பு- ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதி முஸ்லிம்கள் சென்ற பெரும் போகத்தின்போது செய்கை பண்ணிய இரண்டாயிரம் ஏக்கர் நெற் காணிகளைவிட மேலும் கூடுதலாக 500 ஏக்கர் செய்கை மேற்கொள்ள புலி இயக்கத்தினர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர். இதனால் முஸ்லிம் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நீண்ட நாள் அகோர வறட்சிக்குப் பின் கிழக்கிலும் நாட்டின் பெரும்பாலான பகுதிகளிலும் பலத்த மழை பெய்துவருகிறது.

# வாகனம் எரிப்பு
# ரெலோமீது தாக்குதல்!

வவுனியாவில் ரெலோ முக்கியஸ்தரும், முன்னாள் பா.உவுமான ராஜகுகனேஸ்வரனின் வேன் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

07.04.99 புதன்கிழமை மாலை 3.30 அளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வவுனியாவில் படையினர் நிலை கொண்டுள்ள நவ்விப் பகுதியிலேயே இச்சம்பவம் நடந்துள்ளது. அதற்கு சில தினங்களுக்கு முன்னரே இங்கிருந்து பஸ் வண்டி ஒன்று புலிகளால் கடத்திச் செல்லப்பட்டது.

07.04.99 அன்று ராஜ குகனேஸ்வரனின் வாகனத்தில் ரெலோ உறுப்பினர்கள் இருவரும், ஆதரவாளர் ஒருவரும் சென்றுள்ளனர். அந்த வாகனத்தை நவாவியில் வைத்து புலிகள் மறித்தனர். வாகனத்தில் இருந்தவர்கள் தாம் இயக்கத்தில் இருந்து விலகிவிட்டதாகக் கூறியுள்ளனர்.

அவர்களை விசாரித்துவிட்டு விடுவித்த புலிகள், அவர்கள் சென்ற வாகனம் ராஜகுகனேஸ்வரனுடையது என்று தெரிந்ததும் தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

வவுனியாவில் பெண்மணி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதை புலிகளே செய்தனர் என்று ரெலோ சமீபத்தில் அறிக்கை விட்ட பின்னரே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

## காத்திருக்கும் வாடிக்கையாளர்கள்

கல்முனை இலங்கை வங்கி இப்பகுதியில் அதிக வாடிக்கையாளர்களை கொண்ட ஒரு வங்கியாக உள்ளது.

இங்கு உள்நாட்டு, வெளிநாட்டு காசோலை பரிமாற்றம், சிறுவர் சேமிப்புக் கணக்கு, மேலதிகப் பற்று கொடுப்பனவுகள், நகை அடகு பிடிப்பு என்பன இடம் பெறுகின்றன.

இவ்வங்கியின் வேலை நாட்களில் அதிக எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் தத்தம் தேவையின் நிமித்தம் இவ் வங்கிக்கு வருகின்றனர்.

கடந்த 27.07.1998 முதல் இவ்வங்கி வாடிக்கையாளர்களின் நலன் கருதி அதன் நடவடிக்கைகளை 'கணனி' மயமாக்கியது. ஆனால் அதன் துரித பிரயோசனத்தை வாடிக்கையாளர்கள் இன்னும் பெற முடியாமல் இருப்பது கவலைக்குரியதே.

இப்போதும் வாடிக்கையாளர்கள் தமது தேவைகளுக்காக நீண்ட கியூ வரிசைகளில் அதிக நேரம் இங்கு காத்து நிற்க வேண்டியுள்ளது. இதனால் சோட் லீவ்களில் இங்கு வரும் அரச ஊழியர்களும், வர்த்தகர்களும் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## ஆசிரியர்கள் போதவில்லை

(புத்தளம் நிருபர்)

புத்தளம் மாவட்டத்தில் உள்ள கல்பிட்டி வண்ணாத்தீவில் முந்தல், ஆன மடு போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருவதாக தெரிய வருகிறது. இந்த மாவட்டத்தில் சுமார் 180 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 400 பேருக்கும் சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் 300 பேருக்கும் வெற்றிடங்கள் இருப்பதாக கூறப்படுகிறது.

இதே வேளை மேற்படி பாடசாலைகளுக்கு பாட கைநூல்கள் மற்றும் மாணவர்களுக்கான புத்தகங்களும் கிடைக்கவில்லை என அறியப்படுகிறது. போதியளவு ஆசிரியர்கள் இல்லாமையினால் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்றுக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதிபர்கள் பலர் தினமுரசுக்கு கருத்துக்களை தெரிவித்தனர். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என பெற்றோர்கள் கேட்கின்றனர்.

## நீதிமன்றத்தின் முன்னால் திருட்டு!

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்திப் பூட்டி வைக்கப்படும் மோட்டார் சைக்கிள்கள் கன கச்சிதமாகத் திருடப்படுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தரின் 135-1141 இலக்க மோட்டார் சைக்கிள் திருடப்பட்டு விட்டது.

நீதி மன்றத்தில் வழக்கு அலுவல் ஒன்றுக்காக மோட்டார் சைக்கிளை நிறுத்திப் பூட்டி வைத்து விட்டுச் சிறிது நேரம் கழித்து வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

இதற்கு முன்னரும் சில மோட்டார் சைக்கிள்கள் இதே இடத்தில் இதே பாணியில் திருட்டுப் போயுள்ளதாக அறிய வருகிறது.

அவ்விடத்திலேயே சோதனைச் சாவடியிலுள்ள பொலிஸாரும் 3வது படைத்தலைமையகமும் சில யார் தூரத்தின் முன்னால் கண்காணிப்பில் இருக்க, மேற்படி திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடும் கும்பலின் நடவடிக்கைகள் வியப்பாக உள்ளன.

நீதிமன்ற அலுவல்களுக்காக மோட்டார் சைக்கிள்களிலும், சைக்கிள்களிலும் வருபவர்களின் வாகனங்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

## அகதிச் சிறார்கள் அவலம்



வன்னியில் இருந்து வவுனியா வந்து- இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் அகதிகள் தங்கியிருந்தனர். அவர்களது பிள்ளைகளை சேக்கிழார் மண்டப திருமண நிகழ்ச்சியில் பாத்திரங்கள் கழுவ வைத்தனர். அகதிகள் என்றால் இளக்காரமா?

'அகதிகளாய் அலையவைத்தால் ஒழிந்து போவார்கள்' என்று பாலஸ்தீனியர்களை அகதிகளாக்கியது இஸ்ரயேல். பாலஸ்தீனர்களை அரபு நாடுகள் ஆதரித்து நின்றன. தட்டிக் கொடுத்தன. ஆனால் இங்கு... நம்மவர்களே நம் அகதிகளை இளக்காரமாக நினைப்பதுதான் கொடுமை.

வவுனியா அகதி முகாம்களுக்கான உணவு விநியோகமும் இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. தமிழ்க் கட்சி ஒன்றுதான் இந்த முகாம்களுக்கு உணவு விநியோக குத்தகையை பெற்றுள்ளது. இலாபம் ஒன்றையே பிரதானமாக கருதி அவர்களும் காத்திரமற்ற உணவையே வழங்குகிறார்கள்.

அகதிகளை வைத்துப் பலர் சம்பாதிக்கும்போது, அகதிகள் மட்டும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## கவிஞர் வைரமுத்து கனடா செல்கின்றார்

பிரபல இலக்கியவாதியும் தமிழ்த் திரையுலகின் சிறந்த பாடலாசிரியருமான கவிஞர் வைரமுத்து எதிர்வரும் மே மாதத்தில் கனடாவிற்கு செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கனடாவின் ஸ்காபுரோ நகரிலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி மே மாதம் 1ம் 2ம் திகதிகளில் கனடாவின் ஸ்காபுரோ, மொன்றியல் ஆகிய நகரங்களில் இடம்பெறவுள்ள 'உதயன்-99' பல்சுவைக் கலைவிழாவில் கலந்து சிறப்பிக்குமுகமாகவே கவிஞர் வைரமுத்து அங்கு செல்லவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.


கனடா 'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கத்தின் அழைப்பையேற்று அங்கு செல்லும் கவிஞர் வைரமுத்து, கனடாவில் தற்போது வாழ்ந்து வரும் ஈழத்துக் கவிஞர்களான கவிஞர் கந்தவனம், கவிஞர் சிவா சின்னத்தம்பி, கவிஞர் பொ.விவேகானந்தன் கவிஞர் சக்கரவர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள சிறப்புக் கவியரங்கொன்றுக்கு தலைமை தாங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காதைக் கடித்தார் கிராம சேவகர்

மட்டக்களப்பு-செங்கலடிப் பகுதியில் அண்ணன் தம்பிக்கிடையே ஏற்பட்ட தகராறு ஒன்றின்போது ஆத்திர மேலீட்டால் தம்பியின் காதைக் கடித்து ஒருபகுதியைத் துண்டித்தார் அண்ணனான கிராம சேவை உத்தியோகத்தர் தனது செவியின் ஒரு பகுதியைப்பறிகொடுத்த தம்பி சம்பவம் குறித்து முறையிட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட அண்ணன்,தம்பி இருவரும் மதுப்பிரியர்கள் என்றும் சம்பவ தினத்தன்று நிறைபோதையில் காணப்பட்டார்கள் என்றும் சம்பவத்தை நேரில் கண்டோர் கூறுகிறார்கள். இந்த கிராமசேவகர் மைக்டைசனின் இரசிகரோ தெரியவில்லை.





மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி. வெள்ளவத்தை. கொழும்பு-6.
T.P:- 586218

மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA.
067-50349

சகல விதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப் பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

சங்கீதப் புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு.



SAI SANGEETHA
L.G. 123, Peoples Park, Gaswork St. Colombo-11. Tel : 445102

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



K. சிவசுப்பிரமணியம்
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா சுவாசயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன்—பின் காணுதல், சூதக வலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வாரநாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

முருகானந்தா வைத்தியசாலை
No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு-11.

மனோதத்துவ வைத்தியம்
வவுனியா விலாசம் மாற்றப்பட்டுள்ளது

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

கல்முனையில் மே 3,4ம் திகதிகளில்
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

வவுனியாவில் மே 10,11 திகதிகளில்
முன்கூட்டியே பதிவு செய்யவும் HOTEL VASANTHAM, 40, கண்டி வீதி, வவுனியா. T.P.024-22615, 024-22607, 024-22366

கொழும்பில் ஏப்பிரல் 20 முதல் 28 வரை
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P., NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.



மஹாசக்தி மருத்துவம்

GOVT APPROVED CHARITABLE Services Reg NO. HA 14-BT/176

காலம் பகைக்கும்போது காதல, திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகளும் கணவன், மனைவி குடும்ப பிரச்சனைகள், அன்புக்குரியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், மதுவிற்கு அடிமை, தகாத உறவு, தீயசக்திகளின் தொல்லைகள், தீராத உடல்நோய், மனநோய், மருந்தீடு, வேறு பிரச்சனைகளும் ஏற்படலாம். இவைகளிலிருந்து விடுபட அல்லது வெற்றிகொள்ள இலவசமாக சோதிட மருத்துவ மனோதத்துவ மாந்திரீக ஆன்மீக ஆலோசனைகள் வழங்குகின்றார் மஹாசக்தி உபாசகர் (வைத்திய கலாநிதி) சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட இந்தியன் வைத்தியசாலையின் டாக்டர்- "மந்திரயோகி"

(D.H.M.S.D.Ac (இலங்கை), M.B.B.S.H.D.S.M. (இந்தியா)) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் வெளியில் சொல்லமுடியாத வெட்கமான, வேதனையான பிரச்சனைகள் நோய்கள், தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள் கோரிக்கைகளை எழுதியும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு தபால் மூலம் விருப்பங்களை நிறைவேற்றலாம். மாலை 4-30 மணியிலிருந்து 6.30 மணிவரை தியான (MEDITATION) நேரமாகையால் தொடர்பு கொள்ளப்படாது. விரும்பி அனுப்பும் குருதட்சணைகளை ஏற்று முதலில் உடன் கவனிக்கப்படும். மணியோடர்: நாமற் எடுக்கவேண்டிய பெயர் GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC) விலாசம், மட்டக்களப்பு, கல்லடி, மணிக்கூட்டு கோபுரத்துக்கு கிழக்குப்பக்கம் இராமகிருஷ்ணபுரம் வீதியில்.

T.P: 065-24872
Fax: 065-25434
INDIAN CLINIC (GURUSKTHY CENTRE) KALLADY-BATTICALOA (P.O) (SRI LANKA)

சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA, T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. HP 97651074

சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 21ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067. (நன்மை பயப்பவை மட்டும் செய்து தரப்படும்.)

வியாழன் விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இந்த ஆண்டுக்குள் பாரிய படை நகர்வுகள்

# ஐம்பதுசதவீத வாக்குக்கு எதிர்பார்க்கும் களத் திருப்பம்

நாரதர்

ஐந்து மாகாணசபைத் தேர்தல்கள் முடிவடைந்துள்ளன. அடுத்து தென் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

அதேநேரம் தற்போதுள்ள செல்வாக்கை வைத்து ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்தி முடித்துவிடலாமா என்று ஆளும் தரப்புக்குள் ஆராய்ச்சி நடந்து வருகிறது.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் பற்றி வெளியே என்னதான் வீறாப்பாக பேசினாலும், தமது பின்னடைவு ஆளும் தரப்புக்கு தெரியாமலில்லை.

எதிரணிகளின் கைதான் எங்கும் உயர்ந்து நிற்கிறது. எதிரணிகள் ஒன்று சேர்ந்தால் பொதுஜன முன்னணி ஐந்தில் நான்கு சபைகளில் கவிழவேண்டியிருக்கும்.

நாட்டின் தலைநகரான கொழும்பு மாவட்டத்திலேயே பொதுஜன முன்னணி தோல்வி கண்டுவிட்டது. கோட்டையையே கோட்டைவிட்டுள்ளது என்று கூறலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றி கண்டு சாதனை படைத்தவர் சந்திரிக்கா. ஆனால் தற்போது நடைபெற்றுள்ள தேர்தல்களில் அளிக்கப்பட்ட வாக்குகளை வைத்து பார்க்கும்போது நிலமை கவலைக்கிடமாகவுள்ளது.

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 45 வீதமான வாக்குகளே பொதுஜன முன்னணிக்கு கிடைத்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு 50 வீதமான வாக்குகள் பெற்றிருக்க வேண்டும்.

தற்போதுள்ள நிலையில் நாடு முழுவதற்கும் தேர்தல் நடந்தாலும் 50 வீதத்தை ஜனாதிபதி சந்திரிக்கா எட்டிப் பிடிப்பது கேள்விக்குறிதான்.

ஆனாலும் தற்போதுள்ள நிலையை விட காலம் செல்ல செல்ல மேலும் சரிவு ஏற்படக்கூடிய சாத்தியங்களையும் ஆளும் தரப்பு அலட்சியம் செய்யமுடியாது.

தற்போதே ஐக்கிய தேசியக் கட்சி தனது பறிபோன வாக்கு வங்கிகளை மீளப் பெறத் தொடங்கிவிட்டது.

எனவே, தேர்தல்கள் நடப்பதற்கு காலம் தள்ளிப் போகுமானால் தம்மைவிட ஐ.தே. கட்சிக்கே வாய்ப்பு அதிகம் என்பது ஆளும் தரப்பின் தற்போதைய கலக்கம்.

அதனால்தான் சூட்டோடு சூடாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடித்து விடலாம் என்று ஆளும் தரப்பு அவசரப்படுகிறது.

அடுத்த பொதுத் தேர்தலுக்குள் யுத்தத்தை முடித்துவிட்டே உங்களிடம் வருவோம் என்று ஜனாதிபதி மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூறியிருந்தார்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் பற்றி அவர் எதுவும் கூறவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

எனவே, மாகாணசபைத் தேர்தலில் நாடி பிடித்துப் பார்த்துவிட்டு, ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்லும் யோசனை அப்போதே அம்மையாரிடம் இருந்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்தி முடித்துவிட்டு, பாராளுமன்ற தேர்தலை வேண்டுமானால் சற்றுப் பின்போடலாம் என்பது தான் திட்டம்.

அது ஏன் பாராளுமன்றத் தேர்தல் நடத்தாமல், ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த நினைக்கிறார்கள்?

தற்போதுள்ள நிலையில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தினால், பொ.ஜ. முன்னணியின் பலம் இப்போதுள்ளதைவிட குறையும். அதனால் பாராளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகளது உதவியுடன்கூட தற்போதுள்ளதைப் போல ஆட்சியமைக்க முடியாது போகலாம்.

ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளும் குறிப்பிடத்தக்க ஆசனங்களை பெறும் வகையில் மறுபடி வளர்ந்துள்ளன.

எனவே, தற்போதைய பாராளுமன்ற நிலைபோல அல்லாது, நித்திய கண்டமான பாராளுமன்றம் ஒன்றே உருவாகும்.

அவ்வாறான குழப்பமான நிலையில் அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல் நடக்குமானால் தோல்வி நிச்சயம்.

எனவேதான் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடித்துவிட்டால் சந்திரிக்கா அம்மையாரின் நாற்காலி உறுதியாகிவிடும். எப்பாடுபட்டாவது ஜனாதிபதித் தேர்தலில் 50 வீதத்தை பெறுவதற்கு முழுச் சக்தியையும் திரட்டி, ஆள், அம்பு, சேனை, அதிகாரபலத்துடன் முயற்சிக்கலாம் என்பது ஆளும் தரப்பின் வியூகம்.

ஜனாதிபதி பதவி மறுபடி கிடைக்குமானால், பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்தால்கூட சமாளித்துவிடலாம். ஜனாதிபதிக்கு தோதில்லாத கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றாலும் எதுவும் செய்யமுடியாது. ஒரு கட்டத்தின் பின்னர் ஜனாதிபதியால் கலைக்கவும் படலாம்.

அதுமட்டுமல்ல ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால், பாராளுமன்ற தேர்தலை பின் போடவும் ஜனாதிபதியால் முடியும்.

ஆக எப்படிப் பார்த்தாலும் பாராளுமன்ற தேர்தல் முதலில் நடக்கவே மாட்டாது என்பது உறுதி.

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதுதான் ஆளும் தரப்பின் அடுத்த கட்ட வியூகம்.

தென் மாகாணசபைத் தேர்தல் முடிந்ததும், ஜனாதிபதித் தேர்தலுக்கான நகர்வுகள் ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் யுத்தத்துக்கு முடிவு கட்டப்போவதாக ஜனாதிபதி சந்திரிக்கா கூறியுள்ளார்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர இரண்டு வழிகள் உள்ளன.

1. புலிகளுடன் பேச்சுக்கு செல்வது, நீதியான அரசியல் தீர்வு காண்பது.

2. புலிகளை ஓரம்கட்டுவது: தற்போதுள்ள அரைகுறைப் பொதியை, மேலும் குறைப்பதானாலும் குறைத்துவிட்டு தமிழ் பேசும் தரப்பின் தலையில் போடுவது.

இதில் முதலாவதைச் செய்தால் ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்ல முடியாது.

தற்போது கிடைத்த வாக்குகளே இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிகாட்டி, அதனை பிரசாரம் செய்து பெற்ற வாக்குகள்தான்.

எனவே, ஒருபோதும் புலிகளுடன் பேசுவதற்கு அரசு முன்வராது. யுத்தத்தை நிறுத்தவும் முன்வராது.

புலிகளுடன் பேச்சு நடத்தினால், பேரினவாத சக்திகளது எதிர்ப்பு கிளம்பும். பௌத்த மதபீடங்கள் பொங்கி எழும். இந்த பௌத்த பீடங்களிடம் யுத்தத்தை இறுதிவரை நடத்துவோம் என்று உறுதி அளித்தே பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆதரவையும், ஆசிர்வாதத்தையும் ஆளும் தரப்பு பெற்றுள்ளது.

பௌத்த மத பீடங்களை பகைத்தால் வாக்கு வங்கியில் மேலும் சரிவு ஏற்படும். அது தவிர யுத்தத்தை நிறுத்திவிட்டால், மக்களுக்கு உடனடியாக கூறத்தக்க உற்சாகமான செய்திகள், சாதனைகள் வேறு என்ன இருக்கின்றன? எதுவுமேயில்லை.

எனவே, யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது என்று ஆளும்தரப்போ, அம்மையாரோ கூறுவது, இந்த ஆண்டு இறுதிக்குள் இராணுவத் தீர்வு முயற்சியில் குறிப்பிடத்தக் வெற்றி பெறலாம் என்பதையே.

எனவே, ஆளும் தரப்பின் ஜனாதிபதி தேர்தல் வியூகம் என்பது இராணுவத் தீர்வு முயற்சியுடன் இரண்டறக் கலந் திருக்கும்.

தற்போதுள்ள நிலையில் 50 சதவீதமான வாக்குகள் தேறாது என்பதால், தமது வாக்கு வங்கியில் குறைந்தது மேலும் மூன்று வீதங்களை யாவது ஆளும் தரப்பு உயர்த்தியாகவேண்டும்.

ஆளும் அணியாக உள்ளவர்களுக்கு வாக்குகள் மேலும் மேலும் குறைவடையுமே தவிர, அதிகமாக வாய்ப்பு இருப்பதில்லை.

அவ்வாறு அதிகமாக வேண்டுமானால் மக்களை சுண்டியிழுக்கும், மக்களது உணர்ச்சிகளை தூண்டும் திருப்பமான சம்பவங்கள் நடந்து, ஆளும் தரப்புக்கு திடீர் ஆதரவு அலை உருவாக வேண்டும்.

இன்றுள்ள நிலையில் யுத்தம் ஒன்றையே ஆளும் தரப்பு அவ்வாறான திடீர் திருப்பத்துக்கு நம்பியிருக்கிறது.

எனவே, போர் முனையில் இந்த ஆண்டுக்குள் பின்வரும் விளைவுகளை அரசு எதிர்பார்க்கிறது.

1. புலிகளது முல்லைத் தளம் நோக்கிபடையெடுப்பது. புலிகளது தளத்தை பிடித்து விட்டோம் என்று தெற்கில் கூறினால், யாழ் குடாநாட்டை பிடித்தபோது ஏற்பட்டது போன்ற எழுச்சி தெற்கில் உருவாகலாம். அந்த எழுச்சியை வைத்தே 50 வீத வாக்குகளை கொய்துவிடலாம்.

2. தளத்தை பிடிக்க முடியாது போனாலும், யாழ் குடாநாட்டுக்கான தரைப்பாதையையாவது திறப்பது. அது வவுனியா-யாழ் பாதையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. மன்னார்-பூநகரி பாதையாகக்கூட இருக்கலாம்.

அவ்வாறு செய்ய முடிந்தால் நாட்டை ஒன்றாக்கி விட்டோம் என்று தெற்கில் கூறுவதோடு, அந்தப் பாதையூடாக பஸ் ஓட்டம், பவனிகள் என்று நடத்தியே பெரும் பிரசார ஆரவாரம் செய்து விடலாம்.

யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாத மடு தேவாலயப் பகுதியை கைப்பற்றிவிட்டே அதனை பெரும் பிரசாரமாக முன்னெடுக்க முடிந்தது. எனவே, தரைப்பாதை திறக்கப்பட்டால் பிரசாரம் எப்படியிருக்கும் என்பதை ஊகிப்பது கடினமல்ல.

எனவே, இந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்தும் யோசனை இருப்பதால், அதற்குள் வன்னியில் பாரிய படை நகர்வுகளுக்கு இடமுண்டு.

துரிதவெற்றியை பெறும் அவசரத்தில் மூர்க்கமான நகர்வுகள் முடுக்கி விடக் கூடும்.

அவ்வாறு நிகழுமானால் மேலும் பெரும் தொகையான தமிழ் மக்கள் அகதிகளாக நேரும். பெரும் உயிரிழப்புகளும் ஏற்படும்.



ஏற்கனவே மாகாணசபைத் தேர்தலை ஒட்டிய 'ரணகோஷ' 1,2 நடவடிக்கைகளால் பல்லாயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் குறிப்பாக மடு றோட்டில் உள்ள பல வீடுகள் இடிக்கப்பட்டு விட்டதாக செய்திகள் வந்துள்ளன.

அதேபோல ஏற்கனவே நிலைகொண்ட பகுதிகளிலும் பல வீடுகள் புல்டோசரால் இடிக்கப்பட்டு பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னார், பூநகரி பாதையில் படை நகருமானால் பல தமிழ்க் கிராமங்கள் காணாமல் போகும் நிலை உருவாகலாம். பல்லாயிரம் பேர் இடம்பெயர வேண்டி இருக்கும்.

ஆனால் இந்த நகர்வு புலிகளை இராணுவ ரீதியில் பாதிக்காது. அரசுக்கு மடுப் பிரசாரம் போல, இதுவும் உதவும். அவ்வளவுதான்!

அதேபோல புலிகளது முல்லைத் தளம் நோக்கி படைகள் செல்வது சுலபமான காரியமல்ல.

ஏனெனில் வவுனியா-யாழ் சாலையின் மேற்குப் பக்கமாக படையினர் அகன்று நிலை கொள்வதை புலிகள் இடமளிப்பதற்கு பிரதானமாக மூன்று காரணங்கள் உள்ளன.

1. தமது ஆட்பலத்தை விரயமாக்காது, பிரதான முனைச் சண்டைகளுக்கு தயாராக இருப்பது. தாக்குதல்களுக்கு தயாராவது.

2. வவுனியா-யாழ் சாலையின் கிழக்கே உள்ள தமது தளத்தை நோக்கியும், கிளிநொச்சி நோக்கியும் படைகள் முன்னேறாது தடுப்பதில் முழுக்கவனம் செலுத்துவது.

3. படையினரின் செறிவைக் குறைத்து பரவலாக்குவது.

எனவே, அரசு நினைப்பது போல துரித வெற்றிகளை களத்தில் பெற முடியாது.

இந்த ஆண்டுக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதும் நடக்கக் கூடிய காரியமுமல்ல.

ஆனால், தற்காலிக வெற்றிகளை பாரிய வெற்றிகளாக அரசால் பிரசாரம் செய்ய முடியும்.

வன்னியில் 80 வீதமான நிலப்பகுதி தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக தேர்தல் பிரசாரங்களில் கூறப்பட்டது. ஆனால் தற்போதும் புலிகளது கட்டுப்பாட்டில் பெரும் நிலப்பரப்பு இருக்கிறது. படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைவிட புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளே அதிகம்.

எனினும் இவையெல்லாம் தெற்கே யாருக்குத் தெரியப்போகிறது? எனவே, வன்னியில் அரசு கருதும் இலக்குகள் எட்டப்படாவிட்டாலும், ஏதாவது ஒரு திசையில் பெரும் எடுப்பில் படை நடவடிக்கைக்கு அரசு திட்டமிட்டே தீரும். அதனை பிரசாரப்படுத்தும்.

அதனால், இந்த ஆண்டுக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவோம் என்ற வாக்குறுதி தொடர்பாக தமிழ் பேசும் தரப்பு திருப்திபட இடமில்லை.

தமிழ் பேசும் தரப்பைப் பொறுத்தவரை அந்த வாக்குறுதி ஒரு அபாய அறிவிப்புத்தான்.

பெரும் இடம்பெயர்வு அவலங்களுக்கான முன்னறிவித்தலாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி முறைக்கே முடிவு கட்டுவதாக சூளுரைத்து பதவிக்கு வந்தது பொ.ஜ. முன்னணி.

உலகிலேயே மிக மோசமான, மிக சர்வாதிகாரமான ஆட்சி முறை ஜனாதிபதி ஆட்சி முறைதான் என்பதே 1994 இல் பொ.ஜ.முன்னணியின் பிரதான பிரசார முழக்கம்.

இப்போது ஐ.தே.கட்சியும் ஜனாதிபதி ஆட்சி முறைக்கு விடை கொடுக்க ஒத்துழைக்க தயாராக உள்ளது.

அவ்வாறிருந்தும் ஜனாதிபதி பதவியில் மேலும் குறைந்தது ஐந்தாண்டுகள் அமருவதற்கான வியூகம் வகுப்பதில் ஆளும் தரப்பு குதித்திருக்கிறது.

'ஜனாதிபதி ஆட்சி முறையை முடிவுக்கு கொண்டுவருவேன்' என்று பதவிக்கு வந்த சந்திரிக்கா அம்மையார், இன்னொரு ஜனாதிபதித் தேர்தலை எப்படிச் சந்திக்கப்போகிறார்?

இதுதான் முக்கியமான கேள்வி இங்குதான் சூட்சுமமே இருக்கிறது.

யுத்தத்தில் இறுதிவெற்றி பெறும்வரை ஜனாதிபதியாக இருக்க வேண்டியுள்ளது. அதிகாரம் உள்ள பதவி தேவையாக இருக்கிறது என்று மட்டும்தான் நியாயம் கற்பிக்க முடியும்.

எனவே, யுத்தத்தை நிறுத்தினாலோ, புலிகளுடன் பேச்சு நடத்தினாலோ ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் போட்டியிடுவதற்குக் கூட நியாயம் கூற முடியாமல் போகும்.

இவற்றின் மத்தியில் வருமுன் அபாயத்தை தடுக்க வேண்டிய தமிழ்க் கட்சிகள் தலைகீழாக நிற்கின்றன.

கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன் ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார்.

இந்த ஆண்டுக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர உள்ளதாக கூறியதையே பாராட்டியுள்ளார்.

வன்னியில் பல்லாயிரம் மக்கள் இடம்பெரச் செய்து அத்னை யுத்த வெற்றியாக பிரசாரம் செய்து பொ.ஜ.முன்னணி பெற்றுள்ள வெற்றிக்கும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

பின்னர் தமிழ் மக்களிடம் நற்பெயர் எடுக்க, 'யுத்தத்தை நிறுத்தி புலிகளோடு பேசவேண்டும்' என்றும் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

யுத்தத்தை நிறுத்துமாறும் கூறுவது, யுத்தத்தை காட்டி பெற்ற தேர்தல் வெற்றிகளையும் வரவேற்பது, என்று இவர்கள் சகலரையும் ஏமாற்றுகிறார்கள்.

யுத்தத்தை நிறுத்துமாறு தமிழ்க் கட்சிகள் அறிக்கை விடுவதோ, முழங்குவதோ, தமிழ் மக்களை திருப்தி செய்யும் நாடகங்களே.

உண்மையில் யுத்தத்தை தொடர்ந்து நடத்த மறைமுகமான பங்காளிகளாக ஆதரவாளர்களாக சில தமிழ்க் கட்சிகளே இருந்து வருகின்றன.

பொ.ஜ.முன்னணி வெற்றியை பாராட்டியது ஒன்றே அதற்கு தக்க சாட்சி. அடுத்த கட்ட போர் வியூகங்களுக்கு உற்சாகம் கொடுப்பது மாதிரித்தான் இந்த வரவேற்பு. ■



யுத்த அவலங்களுக்கு எதிராக முல்லைத்தீவில் சமீபத்தில் நடந்த மாணவர் போராட்டம்.

## அதிரடி அய்யாத்துரை



***வெகுஜன சபையில்*** திருவானமலை சம்பந்தமானவர் பேசும்போது, யாராவது பிரதிநிதிகள் குசுகுசுத்தபடி இருந்தால் அவருக்கு கோபம்வந்து விடுமாம். "வெளியே போய் கதைத்துவிட்டு வாருங்கள்!" என்று ஒரு முறை சத்தம் போட்டும் இருக்கிறார். தனது பேச்சை அலட்சியம் செய்கிறார்களே என்ற கோபம். ஆனால் 09.04.99 அன்று அன்னார் சபையில் பேச எழுந்தபோது பாதுகாப்புக்கு துணைப்பொறிப்பானவர் எழுந்து வெளியே போய்விட்டாராம். அவருக்கு கூறவேண்டிய விஷயங்களை வெறும் நாற்காலியை நோக்கி கூறினாராம். எப்படியோ மறுநாள் பத்திரிகைகளில் வந்ததல்லோ! அதுபோதும்! அதற்காகத்தானே பேசுறதே!

***கொழும்பு சிங்கள,*** ஆங்கில பத்திரிகைகள் சிலவற்றுக்கு தமிழ்த் தரப்புமீது சேறு பூசுவதில் அலாதிப் பிரியம். கொழும்பில் பணய நாடகம்- மில்லியன் அபேஸ் விஷயத்தில் தமிழ்க் கட்சி ஒன்றுக்கு பங்கிருப்பதாக பிரபல சிங்களப் பத்திரிகை கொட்டை எழுத்தில் தலைப்புப் போட்டது. வவுனியா, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் பணம் வாங்கும் தமிழ்க் கட்சிக்கு சம்பந்தம் இருப்பதாகவே செய்தி போட்டனர். இப்போது உண்மை தெரிந்து போச்சு. சிருடைத் தரப்பினர் சிலர்தான் சித்து வேலை செய்திருக்கினம்!

***துரையப்பா அரங்கின்*** பெயரை தந்தை செல்வா அரங்கு என்று மாற்ற நினைத்தவையல்லோ: நல்லவேளை- மாற்றவில்லை. மாற்றி இருந்தால், தந்தை செல்வா அரங்கில் எலும்புக்கூடுகள் என்றல்லோ செய்திகள் வந்திருக்கும்? அது நல்லாயிருந்திருக்காதல்லோ? துரையப்பாமீது திடீர் காதல் கொண்டு, அவர் பெயரை மாற்ற தடை போட்ட கூட்டான கட்சிக்கு இந்த நேரத்திலாவது நன்றி சொல்லவேண்டும்.

***யாழ் பல்கலைக் கழகத்தில்*** எந்த நேரம் வேண்டுமானாலும் சிருடையினர் ஆயுதங்களோடு புகுந்து திரிகிறார்களாம். இதனைப் பற்றிக் கவலையோடு குறிப்பிட்ட மாணவர்கள், "உலகிலேயே இப்படி ஆயுத பாணிகள் நினைத்த நேரத்தில் நடமாடும் பல்கலைக்கழகம் யாழ் பல்கலைக்கழகம் மட்டும்தான்!" என்று கூறினார்களாம்.

***வெகுஜன சபையில்*** மலையகத் தனித்துவக் கட்சியின் பிரதிநிதி ஒருவருடன் பச்சைக் கட்சி பிரதிநிதிகள் சிநேகபூர்வமாக உரையாடினார்களாம். "மத்திய மாகாணத்தில் எங்களுக்கு ஆதரவு தாருங்களேன்?" என்று அவர்கள் கேட்க, அந்த ரத்தினமான ராச பிரதிநிதி "எங்களுக்கு முதல்வர் பதவி தருவீர்களா?" என்று சிரித்தபடி கேட்டாராம். "அவை உங்களுக்கு தந்தோ ஆதரிக்கிறீர்கள்?" என்று பச்சை அணியினர் கேட்டனராம். "எங்கள் ஆட்களது வாக்குகளை நீல அணியினர் பறித்துக் கொண்டுபோய் போட்டுவிட்டனர். அதுதான் எங்களுக்கு வீழ்ச்சி" என்றும் மலையகத் தனித்துவ கட்சி பிரதிநிதி கூறினாராம். அதுக்கு பச்சை அணிக்காரர் "பார்த்தியளோ, உங்களுக்கு நாங்கள் வாக்குரிமை தந்தோம்! அவர்கள் அதைப் பறித்துவிட்டார்கள்!" என்றாராம்.

***யாழ் குடாநாட்டில்*** மாவட்ட சபைத் தேர்தலில் நடந்தது என்ன? நூல் நிலையத்தை எரித்தது யார்? என்றெல்லாம் அதிகாரத் தரப்பார் இப்போது கேட்கினமல்லோ? அந்த பெரும் காரியத்துக்கு முன்னிலையில் நின்ற காமினியாரோடு சேர்ந்து போஸ் கொடுத்து மேல் மாகாண சபைத் தேர்தலில் (1993இல்) போட்டியிடும்போது, இது தெரியாதோ?

***அதிகாரத் தரப்புக்கு*** தனது சறுக்கல் உள்ளுக்குள் தெரியும். அப்படியிருக்க தமிழ்க் கட்சிகள் ஐஸ் வைப்பதற்காக "வெற்றி வெற்றி!" என்று வாழ்த்தியதை நினைச்சு, நல்லாப் போடுகினம் தாளம் என்று உள்ளூர நினைச்சு சிரித்திருப்பினமல்லோ?

***செம்மணியைத்*** தோண்ட மட்டும் மண் ஆராய்ச்சி, தாவர ஆராய்ச்சி, நீதிமன்ற அனுமதி என்று அனுமார் வால் மாதிரி நீட்டிக் கொண்டே போகினம். சிந்து வெளி ஆராய்ச்சிக்குக்கூட இத்தனை காலம் போயிருக்காது! இப்படியே போனால் எலும்புகள் கிடைக்குதோ இல்லையோ, புத்த சமயம் அங்கும் துளிர்விட்ட சான்றுகள் கிடைத்தாலும் கிடைக்கலாம். பிறகு தோண்டுவதற்கு பீடங்களது அனுமதியெல்லாம் கேட்க வேண்டியிருக்கும்!

***மத்திய கொழும்பில்*** பச்சை அணி ஏகப்பட்ட வாக்கு வித்தியாசத்தால் நீல அணியை ஓரம்கட்டிப்போட்டுது. காரணம் தமிழ் பேசும் வாக்குகள்தான். தமிழ், முஸ்லிம் இரண்டு தரப்பும் பச்சைக்கு அள்ளிப் போட்டிருக்கினம்.

***"கொழும்புத் தமிழர்*** சுயநலவாதிகள்!" என்று தொண்டர் கூறிப்போட்டார். கொழும்பு மாவட்டத்தில் அடுத்து வெற்றிபெறலாம் என்று நினைத்திருக்கும் அக் கட்சியின் இரண்டு ராஜாக்களும் தலைவரது பேச்சால் கலங்கிப் போயிருக்கினம். இனி எந்த முகத்தோடு வாக்குக் கேட்டுப் போறது?

***மரிக்கார் ராமதாஸ்*** நல்ல நடிகர். அதனை பாராட்டுவது பழுதில்லை! அவர் விளம்பரக் கம்பனி நடத்தியதை பாராட்டியதுதான் உறுத்தல்! அது போகட்டும் தேர்தல் நேரத்தில் அவர் வேட்பாளராக போட்டியிடும்போது விருது கொடுத்ததும், அதனை தொலைக்காட்சியில் காண்பித்ததும், அந்த பட்டத்தோடு வாக்குக் கேட்டு விளம்பரம் செய்ததும், விருதையும் அதனை வழங்கிய நோக்கத்தையும் அரசியலாக்கிப் போட்டுது! இதனை முன்பே எழுதியிருக்கலாம். "தேர்தல் நேரத்திலை இப்படி செய்து போட்டாங்களே!" என்று கவலைப்படக்கூடாது என்றுதான், இப்போது சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

**இவ்வாரப் பொன்மொழி:**

**"காற்று பெரும் 'தீ'க்கு உதவி செய்து வளர்க்கிறது. தீபச் சுடரையோ அணைத்து விடுகிறது! ஆற்றல் மிக்கவர்களுக்கு அனைவரும் உதவுகிறார்கள்! மெலிந்தவர்க்கு யாரும் உதவுவதில்லை!"** ■



படிப்பகம்



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# ராஜிவ் கொலை வழக்கும் அதிரடியான தீர்ப்பும்



**20.05.92** அன்று ராஜீக் காந்தி வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டது.

பிரபாகரன், பொட்டம்மான், அகிலா, சிவராசன் உட்பட 41 பேர்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இவர்களில் சிவராசன், தணு, சுபா உட்பட பன்னிரண்டுபேர் இறந்துபோனார் கள்.

1. சிவராசன் 2. தணு 3. சுபா 4. ஹரிபாபு 5. நேரு 6. குண்டு சாந்தன் 7. சுரேஸ் மாஸ்டர் 8. டிக்ஷன் 9. குமார் 10. கீர்த்தி 11. ஜமுனா 12. நிலச்சுவாந்தர் சண்முகம் ஆகியோரே அந்த பன்னிரண்டு பேர்.

பிரபாகரன், பொட்டம்மான், அகிலா ஆகியோர் கைதாகவில்லை.

ஏனைய 26 பேர் கைதாகி காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குற்றப்பத்திரிகை தாக்கலானதும் விரைவில் விசாரணை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

குற்றப்பத்திரிகையில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள், வாக்குமூலங்கள் அடங்கியிருந்தன.

அதனால் குற்றப்பத்திரிகை பத்தாயிரம் பக்கங்களுக்கு தயார் செய்யப்பட்டு இருந் தது.

குற்றப் பத்திரிகையை புத்தகம் போல தயாரித்து குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

பத்தாயிரம் பக்கங்களை குறைந்தது 30 புத்தகங்களாக நகல் எடுத்து முடிப்பது என்றால் லேசுப்பட்ட காரியமா?

இரவு பகலாக பாடுபட்டு பத்தாயிரம் பக்க குற்றப்பத்திரிகையை தயாரித்து முடித்ததாக சிறப்பு புலனாய்வுக் குழு தலைவா் கார்த்திகேயன் கூறினார்.

## விசாரணை

03.06.92 அன்று ராஜிவ் கொலை வழக்கு நீதிபதி சித்திக் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேக நபர் கள் 26 பேரும் கொண்டுவந்து ஆஜர் செய்யப்பட்டனர்.

பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பொலிசார் குவிக்கப் பட்டிருந்தனர்.

புலிகள் திடீரென்று வந்து மீட்டுச் சென்றுவிடுவார்களோ என்று தமிழக பொலிசாருக்கு சந்தேகம்.

26 பேரில் பத்துப்பேர் இந்தியத் தமிழர் கள்.

1. தாதி பத்மா (50) 2. பத்மாவின் மகள் நளினி 3. பத்மாவின் மகன் பாக்கியநாதன் 4. சுபாசுந்தரம 5. ரவிச்சந்திரன்.

6. சுசீந்திரன் 7. பேரறிவாளன 8. இரும்பொறை 9. தனசேகரன 10. ரெங்கநாத்.

இவர்களில் பேரறிவாளன் தமிழ அறிஞர் பெருஞ்சித்திரனாரின் மகன என்று நான் முன்பு கூறியது தவறு. பேரறிவாளனின் தந்தையும் ஒரு தமிழ ஆர்வலர்தான். அவர் பெயர் கவிஞ குயில்தாசன். தவறுக்கு வருந்து கிறேன்.

சிறையில் நளினிக்கு குழந்தை பிறந்திருந்தது. குற்றம் சாட்டப் பட்டவர்களில் ஒருவரான முருகனுக் கும் நளினிக்கும் பிறந்த குழந்தை தான் அது. அந்தக் குழந்தையுடன் நளினி நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை கிட்டத்தட்ட ஆறுவருடங்கள் நடை பெற்றன.

இதற்கிடையே விடுதலைப் புலிகளை இந்திய அரசு தமது நாட்டில் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்தது.

இந்தியாவில் புலிகளுக்கு ஆதரவளிப்பதோ, புகலிடம் கொடுப்பதோ தண்டனைக் குரிய குற்றம் என்று அறிவிக்கப்பட்டது.

அவ்வாறிருந்தும் தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவாக நெடுமாறன், வை.கோ. டாக்டர் ராமதாஸ் போன்ற அரசியல்வாதிகளும், புதுடில்லியில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் போன்றோரும் (இன்றைய பாதுகாப்பமைச்சர்) துணிந்து ஆதரவாக குரல் எழுப்பிவந்தனர்.

வழக்கு விசாரணைகள் மிக இரகசிய மாகவே நடைபெற்று வந்தன.

நீதிபதி நவநீதம் முன்னிலையில் விசாரணைகள் நடந்தன. தமிழகத்தின் பிரபல வழக்கறிஞர்களில் ஒருவரான துரைச்சாமி உட்பட பல வழக்கறிஞர்கள் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரானார்கள்.

பத்தாயிரம் பக்கத்தில் குற்றப்பத்திரிகை தாக்கலானபோதும், அதில் பல முரண் பாடுகள் காணப்பட்டன.

சிவராசன், சுபா ஆகியோர் உயிருடன் பிடிபடாமை பிரதானமான பலவீனமாக இருந்தது.

சிறப்புப் புலனாய்வுப் பிரிவு கச்சிதமாக செயற்பட்டிருந்தாலும்கூட, அது சமர்ப்பித்த சாட்சியங்கள், வாக்குமூலங்கள் என்பவற்றில் பல ஓட்டைகள் இருந்தன.

குற்றம் சாட்டப்பட்டவர்களை கொலைத் திட்டத்தோடு இணைத்துக் காட்ட தகுந்த ஆதாரங்கள் இருக்கவில்லை.

அதுமட்டுமன்றி கொலைத் திட்டத்தோடு தொடர்பில்லாத சிலர்கூட குற்றம் சாட்டப்பட்டு வழக்கில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

ராஜீவ் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்பது உண்மையானாலும் அதனை நீதிமன்றம் ஏற்க வேண்டுமானால் ஆதாரங்களும், சாட்சிகளும் நம்பும்படியாக இருக்க வேண்டும்.

நீதிபதிக்கு தேவை ஆதாரங்களே தவிர, அனுமானங்கள் அல்ல.

எனவே தீர்ப்பு பாதகமாக இருக்காது என்றே சந்தேக நபர்களது சட்டத்தரணிகள் நம்பியிருந்தனர்.

## தீர்ப்பு

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் குற்றப் பத்திரிகையில் உள்ள ஒட்டைகளை சுட்டிக் காட்டி சட்ட வாதங்களும் சிறப்பாக முன்வைக் கப்பட்டன.

ராஜீவ் கொலை வழக்கில் முக்கிய பிரமுகர் களும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

வை.கோபாலசாமி (வை.கோ), ரமேஷ்பண்டாரி, மரகதம் சந்திரசேகர், காசி ஆனந்தன், இலங்கை டி.ஐ.ஜி.குணத்திலக, மலைச்சாமி போன்றோரே விசாரிக்கப் பட்டனர்.

ராஜீவ்கொலை வழக்குத் தீர்ப்பு எப்படி அமையப்போகிறது என்பதை இந்தியாவில் உள்ளோர் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள இலங்கைத் தமிழர்களும் எதிர்பார்த்திருந் தனர்.

தீர்ப்பு வழங்கப்படும் நாளன்று சந்தேக நபர்கள் அனைவரும் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அதில் பெண்கள் முகத்தை மறைத்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆண்கள் புன்சிரிப்புடன் காட்சியளித் தனர். அதில் சிலர் தம்மைப் பார்க்க வந்தவர் களிடம், 'இன்று விடுதலைதான்' என்று நம்பிக்கையோடு கூறியிருந்தனர்.



தீர்ப்பு வழங்கப்படமுன்னர் சந்தேகநபர்கள் புன்னகையுடன்

28.01.98 அன்றுதான் உலகமே அறியக் காத்திருந்த அந்தத் தீர்ப்பை வாசிக்க ஆரம்பித்தார் நீதிபதி நவநீதம்.

அவர் தீர்ப்பை வாசிக்கும்போது நீதிமன்றத் தில் மயான அமைதி. அந்த அமைதியைக்கூட சந்தேகநபர்களது அதிர்ச்சி அலைகள் கலைத்துவிட்டன.

குற்றம் சுமத்தப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார் நீதிபதி நவநீதம்.

குற்றம் சாட்டப்பட்ட அத்தனை பேருக் குமே மரண தண்டனை விதிப்பது இந்தியாவில் அதற்கு முன்னர் எப்போதும் நிகழ்ந்திராதது.

அதுமட்டுமல்ல, ஒரே ஆளுக்கு பல மரணதண்டனைகள், அத்தோடு ஆயுள் தண்டனைகள் என்றும் வழங்கப்பட்டன.

உதாராணமாக நளினிக்கு கொலைக் குற்றச்சாட்டுக்கு மரண தண்டனையும், சதித் திட்டத்துக்கு மரண தண்டனையும், கடுமையான காயம் ஏற்படுத்திய குற்றச் சாட்டுக்கு மூன்று வருட சிறையும், லேசான காயம் ஏற்படுத்திய குற்றத்துக்கு ஒருவருட சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

சின்னச் சாந்தனுக்கு மரணதண்டனை, ஆயுள் தண்டனை, இரண்டுவருட சிறைத் தண்டனை. இவ்வாறு ஒருவருக்கே பல தண்டனைகள் வழங்கப்பட்டன.

## நீதிபதி முடிவு

சாட்சியங்கள், ஆதாரங்கள் சரியாக இல்லாத நிலையிலும் இவ்வாறு அதிரடியான தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு வழக்கை விசாரித்த நீதிபதியின் மனநிலையும் ஒரு முக்கிய காரணமாகும்.

நீதிபதி ஒரு முடிவுக்கு வருவதற்கு சட்ட வாதங்கள், ஆதாரங்கள், சாட்சியங்கள் தவிர, அவரது மனநிலையும் ஒரு காரணம்.

இந்த கொலையை இவர்தான் செய்திருக் கிறார் என்று நீதிபதியின் மனதில் ஆழப் பதிந்துவிட்டால், பின்னர் சந்தேக நபர்களுக்கு சாதகமான சில அம்சங்களைக்கூட அலட்சியம் செய்து விடக்கூடும்.

ராஜீவ் கொலையை புலிகள்தான் செய்தனர் என்பதில் நீதிபதி நவநீதத்துக்கு துளியும் சந்தேகம் இருக்கவில்லை.

அதேசமயம் தன் கோபத்தை காட்டமாக காண்பிக்க நினைத்து தன் அதிகாரத்தை துஷ்பிரயோகமும் செய்திருக்கிறார்.

அவரால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் பலர் கொலைத் திட்டத்தோடு தொடர்பே இல்லாதவர்கள்.

பெங்களூரில் சிவராசன், சுபா ஆகியோர் தங்கியிருக்க வீடு வாடகைக்கு கொடுத்தவர் ரங்கநாத்.

புலனாய்வுப் பிரிவிடம் சிக்கியதும் அவர் உண்மையைக் கூறியிருந்தார். அவருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டது.

ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பு வெளியானதும் தமிழக பத்திரிகைகள் சில பாராட்டின.

அதேசமயம விமர்சனங்களும் எழுந்தன. தீர்ப்பையிட்டு சட்டத் தரணிகள் வியப்புத் தெரிவித்தனர்.




## கண்டனம்

சர்வதேச மன்னிப்புச் சபை தீர்பைக் கண்டனம் செய்தது.

சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த கண்டனத்தில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டது:

"இந்த வழக்கு விசாரணை நேர்மையாக நடக்கவில்லை. சர்வதேச நெறிமுறைகளும் பின்பற்றப்படவில்லை. தடா சட்டத்தின் கீழ் இந்த வழக்கு விசாரணை நடந்திருக்கிறது.

தடாசட்டமே சாவதேச நெறிமுறை களுக்கு எதிரானது.

விசாரணை இரகசியமாக நடத்தப்பட்டதும், சாட்சிகள் இரகசியமாக வைக்கப் பட்டதும் சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்றதல்ல.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1991 ஜூலையில் கைது செய்யப்பட்டாலும், குற்றப்பத்திரிகை 1992 மே மாதத்தில்தான் தரப்பட்டுள்ளது.

1993 வரை பூர்வாங்க விசாரணை கள்கூட ஆரம்பிக்கப்படவில்லை. கடைசி யாக 1994 ஜனவரியில்தான் விசாரணையே ஆரம்பமாகியது.

கைது செய்யப்பட்டபோது ஆதிரை என்ற பெண்ணுக்கு வயது 17தான். பதினெட்டு வயதுக்கு உட்பட்ட குற்றவாளி களுக்கு மரணதண்டனை விதிக்கப்படக் கூடாது என்று சர்வதேச குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஒப்பந்தத்தின் 37 (அ) விதி கூறுகிறது. ICCPR சட்டத்தின் 6 (5) விதியும் இதைத்தான் கூறுகிறது.

1997 இல் உருவான ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் தீர்மானமும் மரண தண்டனையை எதிர்க்கிறது.

வழக்கு விசாரணைகள் சர்வதேச நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கவில்லை என்பதையும், தீர்ப்பு ஐ.நா. மனித உரிமைக் குழுவின் தீர்மானத்துக்கு எதிரானது என்பதையும் உச்ச நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்திய குடியரசுத் தலைவருக்கும், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கும் தந்திகளும், கடிதங்களும் குவிய வேண் டும்." என்று மன்னிப்புச் சபை தெரி வித்தது.

வழக்கின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப் பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் விசாரணைகள் முடிந்துவிட்டன. தீர்ப்பு விரைவில் வெளி யாக உள்ளது.

(தொடர்ந்து வரும்)

## அரசியல் உள்நோக்கம் கொண்ட தீர்ப்பு

ஒரு நாடகம் திட்டமிட்டு அரங்கேற்றப் பட்டு விட்டது.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை பல உண்மைகள் முடிமறைக்கப்பட்டுள்ளன.

விசாரணையும் ரகசியமாகவே நடத்தப் பட்டது. பத்திரிகையாளர்களும் பொதுமக்க ளும் அனுமதிக்கப்படவேயில்லை.

ஒரு முன்னாள் பிரதமரின் கொலை பற்றிய விசாரணையைப் பகிரங்கமாக நடத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் பொதுமக்கள் பல உண்மைகளை அறிந்து கொண்டிருப் பார்கள்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் பலர் அளித்த தாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் பல பக்கங்களில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கையெழுத்து இல்லை.

தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப் பட்டவர்களிடம் பெறப்படும் ஒப்புதல் வாக்கு மூலங்களில் எந்தவொரு பக்கத்திலும் சம்பந்தப் பட்டவரின் கையெழுத்து இல்லாதிருந்தால், அந்த ஒப்புதல் வாக்குமூலமே செல்லாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

ஆனால், அதற்கு மாறாக கையெழுத்தில் லாத ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி தூக்குத் தண்டனை கொடுத்திருக்கிறார்.

இதைப்போல பல தவறுகளை ஆதாரபூர்வ மாக சுட்டிக்காட்ட முடியும். புலன்விசாரணை தொடங்கிய கட்டத்திலிருந்து தீர்ப்பு வழங்கப் பட்ட கட்டம்வரை உள்நோக்கோடு எல்லாமே நடத்தப்பட்டிருக்கிறது என்று நான் பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன்.

எந்த ஒரு வழக்கிலும் இதைப்போல போதுமான அளவுக்கு ஆதாரங் கள் இல்லாமல் தூக்குத் தண்டனை போன்ற கொடுந் தண்டனைகள் கொடுக்கப்பட்டதில்லை.

எடுத்துக் காட்டாக விஜயன் என்பவரின் மனைவி செல்வலட்சுமிக்கு எதிராக ஒரு சாட்சி கூட எதுவும் கூறவில்லை. ஆனாலும் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாள ஆறாண்டுகாலம் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றிருக்கிறது. முதலில் நீதிபதி சித்திக் கிட்டத்தட்ட நாலரை ஆண்டு கள் இந்த வழக்கு விசாரணையை நடத்தினார்.

அவருக்குப் பின் பதவியேற்ற நீதிபதி நவநீதம் பதினைந்து மாதங்கள் மட்டுமே விசாரணை நடத்தியுள்ளார்.

ஏற்கனவே நாலரை ஆண்டுகாலம் நடை பெற்ற வழக்கு விசாரணை, வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணை ஆகியவை அடங்கிய ஆவணங்கள் அனைத்தையும் மூன்று மாத கால அவகாசத்தில் யாரும் பார்த்திருக்க முடியாது.

இந்த நிலையில் அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாக இந்தத் தீர்ப்பு அமைந்தி ருக்கிறது. சத்தியத்தை பொய் மேகங்கள் முடிமறைத்துள்ளன. விரைவில் மேகங்கள் விலகி உண்மை வெளியாகும்.

*பழ. நெடுமாறன்*
*தலைவர், தமிழர் தேசிய இயக்கம்.*



வாரமலர் தினமுரசு ஏப்.18-24,1999

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

அலசுவது -இராஜதந்திரி

# தமிழ் வாக்காளர்களது தெளிவான தீர்ப்பு!

ஐந்து மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. தேர்தல் முடிவுகளையிட்டு ஆளும் தரப்பு கூறிவரும் கருத்துக்கள் 'விழுந்தும்-மீசையில் மண்படவில்லை' என்ற கதையையே நினைவூட்டுகின்றது.

நடைபெற்றுள்ள தேர்தல்களில் வட மத்திய மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தொங்கு சபைகளே இருக்கப்போகின்றன.

பொதுஜன முன்னணியால் தனித்து நின்று அச் சபைகளைக் கைப்பற்ற இயலவில்லை என்பதே பாரிய பின்னடைவாகும்.

ஐந்து மாகாணசபைகளும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்தவை என்றும், அவற்றை தாம் கைப்பற்றியுள்ளதாகவும் பொதுஜன முன்னணி கூறியுள்ளது.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இக் கருத்து பொதுஜன முன்னணிக்கு முன்பிருந்ததைவிட இலாபம் கிட்டியுள்ளது போன்றே தோன்றும்.

ஆனால், 1993 இல் மாகாணசபைகளின் தேர்தல் நடைபெற்றபோது, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தது.

அணியும் இணைந்து பெற்ற மொத்த வாக்குகள் 11 இலட்சத்து 58 ஆயிரத்தி 341.

அத் தேர்தலில் இ.தொ.காவுடன் இணைந்து ஐ.தே.கட்சி பெற்ற மொத்த வாக்குகள் 8 இலட்சத்து 15 ஆயிரத்தி 875.

இம்முறை மேல் மாகாணசபைத் தேர்தலில் லலித் அணியின் தலைவி சிறிமணி பொதுஜன முன்னணிக்கே ஆதரவளித்தார். இம்முறை பொதுஜன முன்னணி பெற்றுள்ள வாக்குகள் எட்டு இலட்சத்து 88 ஆயிரத்தி 457.

இம்முறை ஐ.தே.கட்சி தனியாகப் போட்டியிட்டு மேல் மாகாணத்தில் பெற்றுள்ள மொத்த வாக்குகள் 8 இலட்சத்து 79 ஆயிரத்தி 388.

எனவே, 1993ல் மேல்மாகாணத்தில் எழுச்சி பெற்ற பொ.ஜ.முன்னணியின் வாக்கு வங்கியில் இம்முறை சரிவு ஏற்பட்டுள்ளது. இரண்டு இலட்சத்து 69 ஆயிரத்தி 887 வாக்குகள் குறைந்துள்ளன.

அதேசமயம் 1993ல் மேல் மாகாண சபைத் தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட இம்முறை 63 ஆயிரத்தி 875 வாக்குகள் ஐ.தே.கட்சி அதிகமாகப் பெற்று, தனது வாக்கு வங்கியில்

இந்நிலையில் மிக முக்கியமான ஒன்றை உற்றுக் கவனித்தாக வேண்டும். இன்றைய ஆட்சியாளர்கள் தற்போதைய தேர்தலில் தப்பிப் பிழைப்பதற்கு யுத்தமே கைகொடுத்திருக்கிறது.

வடக்கு யுத்தத்தில் தமக்குள்ள உறுதியைக் காண்பித்தே தமது சாதனைப் பட்டியலை ஆட்சியாளர்கள் நிரப்பியுள்ளனர்.

வடமத்திய மாகாணத்தில் மட்டுமே பொ.ஜ.முன்னணி தனிப்பெரும்பான்மை பெற்றுள்ளது. இம் மாகாணத்தின் பல பகுதிகள் வடக்கு-கிழக்கு மாகாண எல்லைகளைச் சார்ந்த பகுதிகளாகும்.

இப்பகுதிகளுக்கு இன்றைய ஆட்சியாளர்களும் மின்சாரம் முதற்கொண்டு சகல வசதிகளையும் வழங்கியுள்ளதோடு, ஊர்காவல் படைகளையும் அமைத்துள்ளனர்.

இப்பகுதிகள் யுத்த சேனைகள் போன்றே காணப்படுகின்றன. அயலிலுள்ள தமிழ்க் கிராமத்தவர்களுக்கு இவர்களுக்குரிய வசதிகள் செய்யப்படவில்லை.

இப்பகுதிகளில் பொதுஜன முன்னணிக்கு இம்முறை அமோகமான ஆதரவு



காமினி, லலித் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலக்கப்பட்ட பின்னரே அக் கட்சியின் வாக்கு வங்கியில் பிளவு ஏற்பட்டிருந்தது.

பின்னர் லலித் கொல்லப்பட்டதோடு ஐ.தே.கட்சிக்கு எதிரான அதிருப்தி அலை பயங்கரமாக எழுந்திருந்தது.

அந்த அலையே சந்திரிக்கா அவர்களை உச்சத்துக்கு கொண்டுவந்தது. மறைந்த லலித் அத்துலத் முதலியின் மனைவி சிறிமணியும், சந்திரிக்கா அவர்களும் கைகோர்த்தபடி பிரசாரக் கூட்டங்களை நடத்தியபோது, மாபெரும் எழுச்சியே ஏற்பட்டிருந்தது.

இந்த எழுச்சியே ஐக்கிய தேசியக் கட்சிக்கு மரண அடியாக அமைந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கி இரண்டாகப் பிளவுண்ட பின்னர், அக் கட்சிக்கு எதிரான எதிர்ப்பலை எழுந்தடித்தபோது, நடைபெற்ற முதலாவது தேர்தலாக மேல் மகாணசபைத் தேர்தல் விளங்கியிருந்தது.

அத் தேர்தலில் பொதுஜன முன்னணியும், லலித் உருவாக்கிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து மாபெரும் வெற்றி பெற்றன. மேல் மாகாண முதல்வராக சந்திரிக்கா பதவி ஏற்றார்.

இத் தேர்தலுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சி ஆரம்பமாகியது: அடுத்து வந்த பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் போன்றவற்றிலும் ஐ.தே.கட்சி மரண அடிவாங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் 17 வருடங்களாக எதிர்க்கட்சியை எழவே விடாதிருந்தனர். அவ்வாறுதான் சந்திரிக்கா ஆட்சியில் ஐ.தே.கட்சி மறுபடி எழுவதற்கு நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருக்கும் என்று அப்போது கருதப்பட்டது.

ஆனால் நடந்து முடிந்துள்ள தேர்தல் முடிவுகள் ஐ.தே.கட்சி விரைவாக எழத்தொடங்கி விட்டதையே தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன.

இத்தேர்தல் முடிவுகளை, ஐ.தே.கட்சி செல்வாக்குடன் இருந்த காலகட்டத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது தவறான அணுகுமுறையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சி ஆரம்பமான பின்னர் நடைபெற்ற தேர்தல்களுடனேயே தற்போதைய தேர்தல் முடிவுகளை ஒப்பிட்டு நோக்க வேண்டும்.

ஐ.தே.கட்சிக்கு எதிரான வெறுப்பலை வீசிய மேல் மாகாண சபைத் தேர்தலில் 1993ல் பொதுஜன முன்னணியும், லலித்

உயர்வைக்காட்டியிருக்கிறது.

ஏனைய மாகாணங்களிலும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட வீழ்ச்சியில் இருந்து, ஐ.தே.கட்சி மீண்டெழ ஆரம்பித்துள்ளதையே முடிவுகள் காட்டுகின்றன.

எனவே, ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, பொதுஜன முன்னணியின் வாக்கு வங்கிகளில் சரிவு ஏற்படத் தொடங்கி உள்ளதையும், ஐ.தே.கட்சி விரைவாக தனது வீழ்ச்சியில் இருந்து எழத் தொடங்கியுள்ளதையுமே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஏராளமான கொலைக் குற்றச் சாட்டுகள், 17 வருட ஆட்சிக்கால சலிப்புக்கள், ஆட்சியிலுள்ள கட்சியின் அதிகாரவசதிகள் போன்ற பல்வேறு பாதகமான விஷயங்களை ஐ.தே.கட்சி முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

அவ்வாறிருந்தும் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் வாங்கிய மரண அடியிலிருந்து இத்தனை விரைவாக ஐ.தே.கட்சி மீளத் தொடங்கியிருப்பது ஆச்சரியமானதே.

இதற்கு ஐ.தே.கட்சியின் செயற்பாடுகளோ, புத்திசாலித் தனமான வியூகங்களோ காரணமாக அமையவில்லை. இன்றைய ஆட்சியாளரின் திறமையற்ற நிர்வாகமும், வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமையுமே முக்கியமான காரணங்களாகும்.

சாதாரண சிங்கள மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய பாரிய சாதனைகள் எதனையும் இன்றைய ஆட்சியாளரால் மேற்கொள்ள இயலவில்லை. இன்றைய ஆட்சியாளர்கள் எந்த விடயம் தொடர்பாகவும் மிகச் சிறப்பாகவும், ஆரவாரமாகவும் பேசக் கூடியவர்களாக உள்ளார்களே தவிர, செயலில் தம் திறமைகளைக் காண்பிக்கத் தவறியுள்ளனர் என்ற அபிப்பிராயமே சாதாரண சிங்கள மக்களிடமும் மேலோங்கியுள்ளது.



கிட்டியிருக்கிறது. வடமத்திய மாகாணத்தில் பெற்ற தனி வெற்றிக்கு அதுவும் ஒரு காரணமாகும்.

எல்லாளன், துட்டகைமுனு யுத்தம் என்பது சிங்கள, தமிழ் யுத்தமாக பாமர சிங்கள மக்களால் கருதப்பட்டு வருகிறது. அது போல புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று கூறப்பட்டாலும்கூட, தமிழர்களுக்கு எதிரான யுத்தம்- சிங்கள நாட்டைக் காப்பாற்றும் தமது படைவீரர்களது யுத்தம் என்றே பேரினவாதிகள் ஆதரித்து வருகின்றனர்.

1994 பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் சந்திரிக்கா பண்டாரநாயக்கா இனவாதத்துக்கு எதிராகவும் பிரசாரம் செய்தார்.

தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி போன்றவற்றின் படு தோல்வியை இனவாத சக்திகளது தோல்விகளாக பொது ஜன முன்னணி சுட்டிக்காட்டியும் இருந்தது.

ஆனால், இம்முறை மேல் மாகாணத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி 65 ஆயிரம் வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

அக் கட்சியின் ஒத்துழைப்புடன் ஆட்சி அமைப்பதற்கு பொதுஜன முன்னணி பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன பேச்சும் நடத்தியிருக்கிறார்.

பொதுஜன முன்னணியின் போர் தொடர்பான கவர்ச்சிகரமான பிரசாரங்கள் பேரினவாதத்துக்கு மறுபடி உயிர்ப்பூட்டியுள்ளது என்பதையே, மக்கள் ஐக்கிய முன்னணி மறுபடி பெற்றுள்ள வெற்றி எடுத்துக் காட்டுகிறது.

அது மட்டுமன்றி, தமது நலன்களுக்காக பேரினவாத சக்திகளுடன் கைகோர்க்கவும் பொ.ஜ.முன்னணி தயாராகிவிட்டமையும் வெளிப்படையாகியுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப்போடுவதற்கு பௌத்த மத பீடங்களிடம் புகலிடம் தேடியிருந்தனர்.

இப்போது மாகாண சபையில் ஆட்சி நடத்துவதற்கு பேரினவாத கட்சியின் உதவியை நாடியிருக்கின்றனர்.

மொத்தத்தில் இன்றைய பொதுஜன முன்னணியினர் யுத்தத்தையும், பேரினவாத சக்திகளையும் முற்று முழுதாக நம்பும் நிலைக்கு உள்ளாகிவிட்டனர்.

பொதுஜன முன்னணியின் இப்போக்கு பேரினவாத சக்திகளுக்கு மகிழ்ச்சியைத் தரும் அதே நேரத்தில், தமிழ் பேசும் மக்களிடையே எதிர்ப்பை உருவாக்கியுள்ளது.

யுத்தப் பிரசாரமும், யுத்தத்தின் விளைவுகளான கெடுபிடிகளும் ஒருபுறம் சிங்களப் பேரினவாத ஆதிக்க மனப்போக்கை தூண்டிவருவதால், மறுபுறத்தில் அதற்கு எதிரான தமிழ்த் தேசிய வாத உணர்வு மேலோங்கி நிற்கிறது.

கெடுபிடிகளும், கைதுகளும்,

இராணுவ வெற்றிகள் குறித்த சிங்கள மக்களது மனோபாவங்களும், மகிழ்ச்சிக் கூத்துக்களும் தமிழ் மக்களை வடக்கு-கிழக்கு, மலையகம் என்ற பேதங்களுக்கு அப்பால், தமிழர்கள் என்ற பொது உணர்வுடன் ஒன்றுபடச் செய்துள்ளது.

எத் தாக்கத்துக்கும் மறுதாக்கம் இருக்கும் என்பது விஞ்ஞான விதி. ஆட்சியாளரின் இராணுவத்தீர்வு முனைப்பு வெறுமனே வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களை மட்டுமன்றி, முழுத் தமிழ் மக்களையுமே இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் இறுதி இலக்கை கொண்டதே என்ற அபிப்பிராயம் வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள தமிழ்

**மக்களின் உணர்வுக்கு மாறாக செயற்பட்டால் எந்தப் பெரிய தலைமையும் தூக்கியெறியப்படும்.**

மக்களிடம் மேலோங்கியிருக்கிறது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றி கிட்டுமானால் அதற்கடுத்ததாக அதற்கு வெளியேயுள்ள தமிழ், முஸ்லிம் மக்களையும் பேரினவாதிகள் துச்சமாகவே மதிப்பர் என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டுள்ளது.

இதனை அமைச்சர் தொண்டமானும் கூறிவந்திருக்கிறார். "வடக்கு-கிழக்கில் பிரபாகரன் போராடுவதால்தான், இலங்கையில் நாம் தலை நிமிர்ந்து வாழ முடிகிறது!" என்று சில காலத்தின் முன்னர் பேட்டியளித்திருந்தார் தொண்டமான்.

ஆனால் அதே தொண்டமான் 'இந்திய வம்சாவளி மக்கள் பேரணி' என்ற பெயரில், ஆட்சியாளருக்கு தமிழ் வாக்கு வங்கிகளை கவர்ந்து கொடுக்க இம்முறை களமிறங்கினார்.

இருப்பினும், தொண்டமான் தான் கூறியதை மறந்தாலும், தமிழ் பேசும் மக்கள் அதனை மறக்கவில்லை. வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றி பெறுவதையே பிரதான நோக்கமாகவும், தேர்தல் பிரசார மூலதனமாகவும் கொண்டிருந்த பொதுஜன முன்னணிக்கு எதிராகவே வாக்களித்துள்ளனர்.

அது மட்டுமன்றி 'இந்திய வம்சாவளி மக்கள் பேரணி'க்கும் படு பயங்கரமான தோல்வியை பாடமாக கொடுத்துள்ளனர்.

இதனால் வெகுண்டெழுந்த தொண்டா, தமிழர்களை கொழும்புத் தமிழர்கள் என்று பிரித்துப் பேசியுள்ளதுடன், அவர்கள் சுயநலவாதிகள் என்றும் சீறியிருக்கிறார்.

இந்திய வம்சாவளி மக்கள் பேரணி, ஒற்றுமையின் சின்னம் என்று கூறியவர், கன நேரத்தில் அதனை மறந்து கொழும்புத் தமிழர், மலையகத்தமிழர் என்று பிரித்துப் பேசியிருக்கிறார்.

இவ்வாறான கண்ணியக் குறைவான வார்த்தையை அவர் பிரயோகித்திருப்பது அவர் அடைந்துள்ள அதிர்ச்சியையும், மக்களது விழிப்புணர்வைக் கண்டு எரிச்சலுற்றுள்ள அரசியல்வாதியின் மனோநிலையையுமே காண்பித்திருக்கிறது.

கொழும்பில் மட்டுமன்றி, மலையகப் பகுதிகளிலும் இ.தொ.கா. வாக்குவங்கிகள் இம்முறை பலத்த சரிவைச் சந்தித்துள்ளன.

சிங்கள வாக்காளர்கள் இத் தேர்தலில் தெளிவான தீர்ப்பொன்றை வழங்கத் தவறியுள்ளனர். இரண்டு பிரதான கட்சிகளிடையேயும் ஊசலாடியுள்ளனர். அதனால் ஐந்தில் நான்கு மாகாண சபைகள் தொங்கு சபைகளாகத் திகழப்போகின்றன.

ஆனால், தமிழ் பேசும் மக்கள்- குறிப்பாக தமிழ் வாக்காளர்கள்-மிகத் திட்டவட்டமான தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

பொதுஜன முன்னணி ஆட்சியாளருக்கு மிகத் தெளிவான செய்தி ஒன்றையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாம் உங்களோடு இப்போதில்லை....' என்பதுதான் அந்தச் செய்தி.

இதே மக்கள்தான் ஜனாதிபதித் தேர்தலில் பெருவாரியாக வாக்களித்து சந்திரிக்கா அம்மையாரின் அமோக வெற்றிக்கு உறுதுணை புரிந்தவர்கள்.

வடக்கு-கிழக்கிலும், கொழும்பிலும் மலையகத்திலும் பெருவாரியான தமிழ் வாக்காளர்கள்-ஜனாதிபதியாக சந்திரிக்காவையே ஆதரித்திருந்தனர்.

வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகள் யாருக்கும் ஆதரவில்லை என்று கூறி இம்முறை நழுவியிருந்தன. இந்த முடிவுகூட தமிழ்க் கட்சிகளது கையாலாகாத்தனத்தையே காட்டியிருந்தது.

அரசியல் கட்சிகளது பணி- மக்களது கடமைகளை உணர்த்துவதும், அந்தந்தக் கால கட்டத்தில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை மக்கள் முன்பாக நின்று வழிகாட்டுவதுமேயாகும்.

மக்களே தாமாக ஒவ்வொன்றையும் தீர்மானிக்க விடுவதாயின் அரசியல் கட்சிகள் என்பவை அவசியமில்லை.

ஆனால் இக் கட்சிகளைவிட தமிழ் மக்கள் சிந்தனையிலும், சூழ்நிலைகளை மதிப்பிடுவதிலும் உயர்ந்தும், முன்னிலையிலும் நிற்கிறார்கள்.

தமிழ் மக்களது உணர்வுகள், சிந்தனைகள், முடிவுகள் என்பவற்றிலிருந்து பின்தங்கியும், அந்நியமாகியுமே இ.தொ.கா. உட்பட சகல தமிழ்க் கட்சிகளும் நிற்கின்றன.

எனவே, இக் கட்சிகள் மக்களிடையே செல்வாக்கு அற்றுப் போவதும், தோல்விகளைச் சந்திப்பதும் இயல்பே, என்பதைத்தான் இ.தொ.கா. பெற்றுள்ள படுதோல்வி அடி வெளிப்படுத்துகிறது.

மக்களது நியாயமான உணர்ச்சிகளை மன எழுச்சிகளைப் புரிந்து கொண்டு அதனை நெறிப்படுத்தி முன்னெடுப்பதே தலைமை.

அதற்கு மாறாக செயற்படும்போது எந்தப் பெரிய தலைமையானாலும் தூக்கி எறியப்படும். இதனையே தொண்டமான் சந்தித்துவரும் தோல்விகளும் புலப்படுத்துகின்றன.

மலையகத்தில் சக்திமிக்க மாற்று சக்தி ஒன்று இல்லாமையால் இ.தோ.கா. இத்தோடாவது தப்பித்தது என்றுதான் கூறவேண்டும்.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

இந்தியாவில் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்மீது எதிர்க்கட்சிகள் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

குறிப்பாக தமிழ்நாட்டின் செல்வி பாய்ந்து குதறுகிறார்.

இந்தியக் கடற்படைத் தளபதியான விஷ்ணு பகவத்தை பதவி நீக்கினார் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்.

அதை ஒரு சாக்காக வைத்து பாரதிய ஜனதா அரசுக்கு எதிர்க்கட்சிகள் தலைவலி கொடுக்க முடிவு செய்தன.

செல்வி ஜெயலலிதாவும் மத்திய அரசை தன் கோரிக்கைகளுக்கு இணங்கவைக்க இதுதான் சந்தர்ப்பம் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்.

தமிழக அரசைக் கலைக்க வாஜ்பேய் 'ஆம்' என்றால், பகவத்தை நீக்கியதை செல்வி ஆமோதிப்பார்.

மத்திய அரசு பணியாததால் இன்னொரு அம்பை எய்துள்ளார் அம்மையார்.

புலிகளுக்கு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் உதவி வருகிறார். கடற்படைத் தளபதியை நீக்கியதற்கும் புலிகளே காரணம் என்று கூறியிருக்கிறார்.

இதுபோதாது என்று பதவி நீக்கப்பட்ட தளபதி பகவத்தும், ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாதுகாப்பு இரகசியங்களை புலிகளுக்கும், ஏனைய ஈழப் போராளிக் குழுக்களுக்கும் வழங்கி வருகிறார் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

புலிகளைத் தவிர வேறெந்தப் போராளி அமைப்புகளும் தற்போது இலங்கையில் கிடையாது. முன்னாள் போராளி அமைப்புக்கள் இப்போது பாராளுமன்ற அரசியல் கட்சிகளாகி விட்டன என்பதுகூட அந்தத் தளபதிக்குத் தெரியவில்லையே! பாவம்!

தமிழ்க் கட்சிகள் ஜோர்ஜ் பெர்னாண்டசிடம் இரகசியத்தை வாங்கி என்ன செய்வது?

புலிகள்கூட இந்தியப் பாதுகாப்பு இரகசியங்களை அறிந்து என்ன செய்வது? இந்தியாமீது படையெடுத்து பிடிக்கவா போகிறார்கள்?!

பொருத்தமே இல்லாத குற்றச்சாட்டை சுமத்தியதில் இருந்தே அந்த முன்னாள் தளபதி இசகு பிசகான ஆசாமிதான் என்பது தெளிவாகி விட்டது.

இப்படியான தகவல்களைக் கூறும் ஒருவரை நேர்மையான தளபதி, கண்ணியமான மனிதர் என்று இந்தியப் பத்திரிகைகள் சில வக்காலத்து வாங்கியுள்ளன.

ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேர்மையான அரசியல்வாதி. எதிர்ப்புக்கள் கண்டு கலங்காத இரும்பு மனிதர் என்று முன்னர் இங்கு குறிப்பிட்டதாக ஞாபகம்.

தன் பதவிக்கே புலிகளை இழுத்து குறிவைக்கிறார்கள் என்று தெரிந்தும்கூட, சும்மா ஒரு பேச்சுக்காகக்கூட 'நான் புலிகளை ஆதரிப்பவனல்ல' என்று குத்துக்கரணம் அடிக்க அவர்

### அசையாத பெர்னாண்டஸ்



நினைக்கவேயில்லை.

சும்மா ஒரு பேச்சுக்காக என்றாலும், 'நான் புலிகளது ஆதரவாளன் அல்ல; இலங்கை தமிழ் மக்களின் ஆதரவாளன்' என்றாவது தமிழக முதல்வர் கருணாநிதி பாணியில் சமாளித்திருக்கலாம். தற்காப்பு ஆட்டம் ஆடியிருக்கலாம். ஆனால் மனிதர் அசையவேயில்லை.

பதவியே போனாலும் தாம் சரியென்று நினைக்கும் நிலைப்பாடுகளுக்காக நிற்பவர்கள் இக் காலத்தில் அபூர்வம். இலங்கையிலும்தான்!

அதேபோல தமது ஆட்சிக்கே ஆபத்து வந்தபோதும் பெர்னாண்டஸ் தொடர்பாகவோ, அவரது புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாடு பற்றியோ இந்தியப் பிரதமர்கூட இதுவரை மாறாகப் பேசாததும் கவனிக்கத்தக்கது.

விஷ்ணு பகவத்தின் கட்டளைப்படிதான் கிட்டு வந்த கப்பல் இந்தியக் கடற்படையால் வழி மறிக்கப்பட்டது.

அதேபோல புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிவந்த கப்பல் ஒன்றைப் பற்றி இலங்கை, கடற்படைக்கு தகவல் கொடுத்ததுடன், அக் கப்பலை தாக்கியழிக்கவும் விஷ்ணு பகவத் உதவியதாகவும் கூறப்படுகிறது.

இதற்காக பழி தீர்க்கவே ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பகவத்தை பதவி நீக்கம் செய்ததாகவும் எதிர்க்கட்சிகள் சந்தேகிக்கின்றன.

புலிகளது ஆதரவாளர் என்ற ரீதியில் பகவத்தின் நடவடிக்கைகள் ஜோர்ஜ் பெர்னாண்டசுக்கு அவர் அமைச்சராக முன்பிருந்தே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஆனால் பகவத்தை பதவி நீக்க அது போதுமான காரணமாக இருக்க முடியாது. கப்பற்படை இரகசியங்கள் சில வெளியே கசிந்ததால்தான் துரிதமாகத் தூக்கி வெளியே போட்டார்கள் என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவோடு பகவத்துக்கு தொடர்புகள் இருந்திருக்கலாம். அதனை இப்போது வெளியே கூறுவதால் இராஜதந்திர சிக்கல்கள் ஏற்படும் என்பதால் இந்திய அரசு கூறாது தவிர்க்கிறது என்று தெரிகிறது.

எனினும் தற்போதுள்ள கடற்படைத் தளபதி, புலிகளது கப்பல்கள் தொடர்பாக விஷ்ணு பகவத் போல, இலங்கை அரசுக்குத் தகவல் கொடுக்கப் போவதில்லை.

இதனால் பகவத் நீக்கம் இலங்கை அரசுக்கும் ஒருவகையில் பாதிப்புத்தான்.

-★-

பொதுஜன முன்னணியின் வெற்றிக்கு முதன் முதலில் வாழ்த்துக் கூறியவர்கள் இரண்டு பேர்.

ஒருவர் ஆனந்தசங்கரி. இன்னொருவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

இருவருக்கும் கட்சிக்குள் பிரச்சனை. அம்மையாரின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ஆலாய்ப் பறக்கிறார்கள்.

வரதராஜப் பெருமாளுக்கு அரச ஆதரவு இருப்பதால், அது தனக்கும் கிடைப்பதற்கு சுரேஸ் தூண்டில் போட்டிருக்கிறார்.

அப்படியானால் பொ.ஜ.முவை தேர்தலில் ஆதரித்திருக்கலாமே! இவர்களுக்கு கொள்கையும் கிடையாது! நிலைப்பாடும் கிடையாது! காற்றடிக்கும் பக்கம் சாய்வது மட்டும் கைவந்த கலை!



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 57

# இடி அமீன்

தருவது ரசிகன்

**கடந்தவாரம்**

**மக்கெரேரே பல்கலைக்கழக துணைவேந்தர் கொல்லப்படுகிறார். பெண் மந்திரவாதியின் கட்டளைப்படியே அவரை தீர்த்துக் கட்டுகிறார்கள். உகண்டாவின் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும், செயலாளரும், அமீனின் உறவினர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவில்லை என்பதற்காக கடத்தப்படுகின்றனர். செயலாளர் அடிதாங்காது இறந்து போகிறார்.**

இனி....

காப்புறுதிக் கூட்டுத்தாபனச் செயலாளரான திடமுலால் லாவின் உடலைப் பெறுவதற்கு உறவினர்கள் எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை.

உடலை பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வாங்கிய குழுவும் அவர்களை ஏமாற்றிவிட்டது.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைவர் வெக்கிரோ தொடர்ந்தும் நகுறு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

சித்திரவதைகளுக்கும், சீரழிவுகளுக்கும் பெயர்போன முகாம் இது. இந்த முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவன் அலி ரொவெல்லி.

இடி அமீனுக்கு முகஸ்துதி செய்வதிலும், இடி அமீனுக்கு பிடித்தமாக நடந்து கொள்வதிலும் கெட்டிக்காரன்.

நகுறு முகாமுக்கு தம் பிள்ளைகளோ, உறவினர்களோ கொண்டு செல்லப்பட்டனர் என்று அறிந்தாலே அவர்களது குடும்பத்தினர் கதறத் தொடங்கிவிடுவார்கள்.

அந்தப் பயத்தை வைத்தே பணம் சம்பாதிக்க ஆரம்பித்தான் அலி ரொவெல்லி.

கண்ணில் பட்டவர்களையெல்லாம் கைது செய்து முகாமுக்குக் கொண்டு வருவான். பின்னர் பேரம் பேசும் குழுக்கள் ஊடாக பணம் வாங்கிக்கொண்டு விடுதலை செய்துவிடுவான்.

நகுறு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களுக்கு உணவு சரியாகக் கிடைக்காது. கிடைத்தாலும் அது தரமான உணவாக இருக்காது.

அந்த முகாமின் காவலர்களும் தம் பங்குக்கு இலஞ்சம் வாங்கிச் சம்பாதித்தனர். முகாமில் உள்ளோரின் வீடுகளுக்கு கடிதங்களைக் கொண்டு சென்று ஒப்படைப்பது போன்ற காரியங்களுக்காக பணம் வாங்கினார்கள்.

தமக்கு அடிக்காதிருப்பதற்காகவும் கைதிகள் சிலர் அவர்களுக்கு இலஞ்சம் கொடுத்தனர்.

காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவரான வெக்கிரோவுக்கு நகுறு முகாமில் முதலில் கொடுக்கப்பட்ட வேலை ஆடுகளை மேய்ப்பது.

அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையைப் பற்றி இடி அமீனிடம் அலி கூறிய போது அவன் குதூகலித்துச் சிரித்தான்.

**"சரியான வேலைதான் கொடுத்திருக்கிறாய். அடுத்ததாக என்ன வேலை கொடுக்கப்போகிறாய்?"**

"மலசல கூடங்களை வெறும் கைகளால் கழுவிச் சுத்தப்படுத்தும் வேலை!" என்றதும் அமீன் தலையை பலமாக ஆட்டிச் சிரித்தான்.

**"அவன் ஒரு படித்த முட்டாள். பிழைக்கத் தெரியாதவன். அவனை உடனே கொன்றுவிட்டால், நினைத்து வேதனைப் பட சந்தர்ப்பம் இருக்காது. இப்படியே அவனை நரகத்தில் தோய்த்து எடு!"** என்று கூறினான் அமீன்.

முகாமில் வெக்கிரோ நரகத்தில் உழன்றார். அவரால் சகிக்க முடியவில்லை. இதனைவிட தன்னைக் கொன்றிருக்கலாம் என்று நினைத்தார்.

ஒருவார காலம் அவரை நரகத்தில் உழலச் செய்த பின்னர் அலி அழைத்தான்.

எவ்வித சுற்றிவளைப்பும் இல்லாமல் நேரடியாகவே பேரம் பேசினான்: "இந்த நரகத்தில் இருந்து விடுதலையாக ஆசையாக இருக்கிறதா?"

வெக்கிரோ நம்பமுடியாமல் அவனைப் பார்த்தார்.

"நேற்று கைகளால் மலம் அள்ளினீரே, எப்படியிருந்தது?" அவன் கேட்டபோதே அவருக்குக் குமட்டிக்கொண்டு வந்தது.

அவன் விடவில்லை: "இதைவிட கடுமையான வேலைகளும் இங்கு இருக்கின்றன. ஏதோ உம்மீது ஒரு அனுதாபத்தில் அந்த வேலைகளைக் கொடுக்க வேண்டாம் என்று கூறியிருக்கிறேன்!" என்று இளிப்புக் காட்டினான்.

தன்மீது அவன் அனுதாபம் காட்டுவதாகக் கூறியது வெக்கிரோக்கு எரிச்சலாக இருந்தது. அவர் கையில் மட்டும் ஒரு துப்பாக்கி இருந்தால் அவனை சல்லடை போட்டு விடுவார்.

"இந்த நரகத்தில் இருந்து விடுதலையாக வேண்டுமானால், அதற்கு ஒரு விலை இருக்கிறது. அதனைக் கொடுத்தால் உம் மீது விழுந்துள்ள வலை விலகும். என்ன சொல்கிறீர்?" என்றான்.

இலஞ்சப் பேய் வாயைத் திறந்தபடி தன் முன்னால் அமர்ந்திருப்பது போல அவருக்கு பிரமை தோன்றியது.

அவனும் கிட்டத்தட்ட ஒரு குட்டிப் பிசாசு போன்ற தோற்றத்தில்தான் இருந்தான். அடிக்கடி தனது பெரிய தொந்தியை கைகளால் தடவிவிட்டுக் கொண்டான். அவன் முகத்தில் தழும்புகள் இருந்தன.

"என்ன விலை?" என்று கேட்டார் வெக்கிரே!

அவன் சிறிதும் தாமதியாது. "உன் சொத்துக்களை என் பெயரில் எழுதிவை!" என்றான் மிகவும் சாதாரணமாக.

வெக்கிரோவின் முகத்தில் தோன்றிய அதிர்ச்சியை பார்த்துவிட்டு, "என்ன பெரிய விலையாகத் தெரிகிறதா? உன் உயிரை விடப் பெரிதல்ல. உயிர் இருந்தால் மறுபடி சம்பாதித்துக் கொள்ளலாம். இந்த நரகத்தில் கிடந்து மலம் அள்ளுவதுதான் உனக்கு விதி என்றால், நீ நிதி தரவேண்டாம், விடு!" என்று முற்றுப்புள்ளியிடுவது போலப் பேசினான்.

வெக்கிரோவுக்கு எப்படியாவது அங்கிருந்து தப்பிப்பிழைத்தால் போதும் என்றிருந்தது. "தருகிறேன்!" என்றார்.

நம்பமுடியாமல், "உண்மையாகவா?" என்றான் அலி.

வெகுமதியாய் சொத்துக்கள் கிடைக்க இருப்பதால், வெக்கிரோக்காக இடி அமீனிடம் அலி பரிந்து பேசினான்.

இடி அமீனுக்கு அலியைப் பற்றித் தெரியும். அவன் சம்பாதிப்பதும் தெரியும். இப்போது வெக்கிரோவிடமும் ஏதாவது பெரிதாக வாங்கிப் பையில் போட்டிருப்பான் என்பதும் தெரியும்.

தன்னைப் போன்ற ஒருவனுக்கு நேர்மையான அதிகாரிகள் கிடைக்கமாட்டார்கள் என்பதும் தெரியும்.

அதனால் கண்டும் காணாதது போல நடப்பதோடு, அவர்களது சிபாரிசுகளில் சிலவற்றையும் நிறைவேற்றி சந்தோசப்படுத்துவான்.

"என்ன திடீர் கரிசனை?" என்று மட்டும் கேட்டான்.

"அந்த செயலாளர்தான் இவனை தூண்டியிருக்கிறான். அவனை நம்பித்தான் இவனும்..." என்று விளக்க வந்தவனை, இடைமறித்த அமீன்: "உன் விருப்பம்! அவனை விடுதலை செய்யலாம்!" என்று அந்தப் பேச்சுக்கு



முற்றுப்புள்ளி வைத்தான் அமீன்.

அலிக்கு திருப்தி. அந்த மாதிரி சின்னச் சின்ன திருப்தியோடு அவன் தனக்கு விசுவாசமான அடிமையாக இருப்பான் என்பது அமீனுக்குத் தெரியும்.

வெக்கிரோ விடுதலையானார். சொத்துக்களை அலி வாங்கிக்கொண்டான்.

1977 ஜனவரியில் நடைபெற்ற சம்பவம் ஒன்று, அமீனின் ஆட்சியை காட்டுமிராண்டி ஆட்சி என்று உகண்டா மக்கள் கடும் சினம் அடைய வைத்தது.

மக்கெரெரே பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு கேளிக்கை விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்த விருந்துக் கொண்டாட்டத்துக்கு மருத்துவமனை தாதிமார்கள் பலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

நள்ளிரவுவரை ஆட்டமும், பாட்டும் நீடித்தது. அதன்பின்னர் தாதிமார் தங்கள் விடுதிகளுக்குத் திரும்புவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த- உகண்டா போக்குவரத்துக் கழக பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்த பஸ்ஸில் பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலரும் சென்றனர்.

அந்த வண்டியின் பின்புறமாக வோக்ஸ் வாகன் வாகனம் ஒன்று தொடர்ந்து வந்தது. திடீரென்று பஸ்ஸை முந்திச் சென்று தெருவின் குறுக்காக நிறுத்தப்பட்டது.

அந்த வாகனத்திலிருந்து சீருடை அணிந்த இருவர் இறங்கினார்கள். நேராக பஸ் சாரதியிடம் சென்றனர்.

"எங்கே இந்த நேரத்தில் போகிறீர்கள்?" என்று கேட்டபடி பஸ்ஸின் உள்ளே பார்வையை எறிந்தனர்.

தாதிமார்களில் சிலர் எடுப்பாக இருந்தனர். அந்த இருவருக்கும் அவர்களை தாங்கள் அனுபவிக்க வேண்டும் என்ற சபலம் தலை தூக்கியது.

இருவரும் அரச ஆய்வுத்துறையைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள்.

பஸ்ஸை தங்கள் முகாமுக்கு கொண்டு போக திட்டமிட்டனர்.

"இந்த நேரத்தில் பஸ் ஓட உத்தரவுச் சீட்டு இருக்கிறதா?" என்று சாரதியிடம் கேட்டனர்.

அப்படி ஒரு உத்தரவு பெறும் நடை முறையே கிடையாது என்பதால், சாரதியிடம் உத்தரவுச்சீட்டு இருக்காது என்பது அவர்களுக்குத்தெரிந்தே இருந்தது.

"இல்லை!"

என்று அவர்கள் எதிர்பார்த்த பதிலை சாரதி கூறியதும், பஸ்ஸை தமது முகாமுக்குச் செலுத்துமாறு கூறினார்கள்.

பஸ்ஸில் இருந்த பாதுகாப்பு ஊழியர்கள் குறுக்கிட்டு விளக்கமளிக்க முயன்றபோது, அவர்களது முகங்களில் குத்துக்கள் விழுந்தன.

நள்ளிரவு தாண்டி அதிகாலை இரண்டு மணிக்கு அரச ஆய்வு நிறுவன முகாமுக்குள் பஸ் வண்டி புகுந்தது.

வண்டி நின்றதும் முகாமில் தூக்கத்தில் இருந்த இராணுவத்தினர் எழுப்பப்பட்டனர். தூக்கக் கலக்கத்தோடு பஸ்ஸை சூழ்ந்து கொண்டனர்.

பஸ்சுக்குள் பெண்கள் இருப்பதைக் கண்டதும் அவர்களது தூக்கக் கலக்கம் போன இடம் தெரியவில்லை.

பஸ்ஸில் இருந்த அனைவரையும் பாதணிகளைக் கழற்றிவிட்டு கட்டடத்துக்குள் நடந்து செல்லுமாறு கட்டளையிட்டனர்.

மாணவர்களையும், பாதுகாப்பு ஊழியர்களையும் ஒரு அறைக்குள் தள்ளி பூட்டினார்கள்.

தம்மை தனியாகப் பிரித்து அடைக்க முற்பட்டதும் மாணவர்களுக்கு சந்தேகம் வந்துவிட்டது. திமிறினார்கள். அதனால் இராணுவத்தினரின் துப்பாக்கி முனைகளால் தாக்கப்பட்டனர்.

சற்றுத் தள்ளியிருந்த மண்டபத்துக்கு வருமாறு தாதிமாரை அழைத்துச் செல்லும் போதே அவர்கள்மீது உரசினார்கள். பின்புறத்தில் கிள்ளினார்கள்.

தங்களுக்குத் தீங்கு நேரப்போகிறது என்பதை தாதிமார்கள் ஊகித்து பயந்து போனார்கள். தப்பியோடவும் முடியாது.

மண்டபத்துக்குள் சென்றதும் வக்கிரமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

"ஆடைகள் முழுவதையும் களைந்துவிட்டு தலைக்கு மேலே கைகளை உயர்த்தியபடி நடக்க வேண்டும்!" என்றான் அதிகாரி.

தாதிகள் அழத் தொடங்கி விட்டனர். சிலர் மன்றாடினார்கள். கைகூப்பி நின்றார்கள்.

"நீங்களாக கழற்றாவிட்டால் நாங்கள் உங்கள் ஆடைகளை களைவதோடு மட்டும் நிறுத்த மாட்டோம். என்ன, உடம்பை மட்டும் காட்டிவிட்டுப் போக விரும்புகிறீர்களா? அல்லது.....?" என்று எக்காளமிட்டான் அதிகாரி.

வேறு வழியின்றி அவர்கள் ஆடைகளைக் களைந்தனர்.

அந்த மண்டபத்துக்குள் கைகளை உயர்த்தியபடி அவர்களை நடந்து செல்ல வைத்து, இராணுவத்தினர் இரசித்தனர்.

தங்களுக்கு அதில் யார் தேவை என்பதையும் தெரிவு செய்துகொண்டனர்.

பின்னர் தாதிகள் முரண்டுபிடித்து மறுக்க மறுக்க ஒவ்வொருவராக கட்டடத்தின் மூலைகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

சில தாதிகள்மீது பலர் கண் வைத்ததால் அத் தாதிகள் பலரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள்.

வெறிகொண்டது போல அவர்களது அங்கங்களை கடித்தும், பிராண்டியும் மிருகத்தனமாக உறவு கொண்டனர். சில தாதிகள் மயக்கமானார்கள். வேறு சிலர் தங்களை விட்டுவிடுமாறு கதறி அழுதார்கள்.

அந்த மண்டபம் முழுவதும் அழுகுரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன.

*(இடி தொடரும்)*

# காதல் மன்னனும் இளம் மனைவியும்

**ஜெ**மினி கணேசனின் இளம் மனைவி ஜூலி இப்போது தனிமையில் இருக்கிறார்.

ஜெமினி கணேசன் அமெரிக்காவில் தன் மகளான டாக்டர் ரேவதியின் பாதுகாப்பில் இருக்கிறார். இந்த எண்பது வயது 'இளைஞ'ருக்கு ஜூலியை வெறுத்து விட்டது.



ஜூலி அவரை தாக்கிய அடையாளங்கள் முதுகில் இருப்பதாக ஜெமினியின் முதல் மனைவி கூறுகிறார்.

ஆனால் அது பற்றி விவகாரமான தகவல்கள் கசிந்துள்ளன. வயாக்ரா மாத்திரை உதவியோடு இளைஞனாக நடந்து கொள்ள முயன்றும் ஜெமினியால் முடியவில்லை.

ஜெமினியின் முதுகில் தன் விரல்களால் ஜூலி அழுத்திப்பிராண்டிய தழும்புகள்தான் அவை. ஜெமினியால் கணவனாக நடந்து கொள்ள முடியாதபோது அவரை அணைத்தபடி விரக்தியில் நகத்தால் பிராண்டுவாராம் ஜூலி.

அதனைத்தான் ஜெமினியை ஜூலி தாக்கியதாக கதை கட்டிவிட்டுள்ளனராம்.

## கடத்தல்

ஜூலியை கடத்திப் போய் நாட்டைவிட்டு சிங்கப்பூருக்கு துரத்தும் முயற்சியும் நடந்ததாம்.

17.02.99 காலையில் ஜெமினி அழைப்பதாகக் கூறி அவரை காரில் அழைத்துப் போனார்கள்.

பின்னர் ஹொட்டல் ஒன்றுக்கு அழைத்துப்போய் மிரட்டியுள்ளனர். அங்கு ஜெமினி குடும்ப வழக்கறிஞர்கள், ஜெமினியின் மனைவி பாபுஜி, மற்றும் பிள்ளைகள் இருந்தனர்.

"எனக்கும் ஜெமினிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை!" என்று எழுதிய பத்திரத்தில் கையெழுத்துப் போடுமாறு கேட்டனர். "பணம் தருவோம், சிங்கப்பூருக்கு ஓடிவிடு" என்றும் மிரட்டினார்கள்.

ஒருநாள் அவகாசம் தருமாறு கேட்டு தப்பிவந்தார் ஜூலி. இப்போது தனது வழக்கறிஞர்களது துணையை நாடியிருக்கிறார்.

"முப்பத்தைந்து வயதான ஜூலிக்கு எண்பது வயது முதியவர்மீது காதல் என்பது ஏற்கக்கூடியதா? அதுமட்டுமல்லாது ஜூலி ஆசைகள் நிறைந்த பெண். ஜெமினியின் முதுகில் நகக் கீறல்களே அதற்கு அத்தாட்சி. எனவே சொத்துக்காகத்தான் ஜூலி ஜெமினியை மயக்கினார்." என்கிறது ஜெமினி வட்டாரம்.

ஆனால், ஜெமினி-ஜூலியா பெயரை கூறிப் புலம்பிக்கொண்டிருந்தபோது, "என் கணவரைக் காப்பாற்று!" என்று ஜூலியாவை அழைத்ததே முதல் மனைவி பாபுஜிதானே? அப்போது எங்கே போனது அறிவு? என்று கேட்கிறது ஜூலியா வட்டாரம்.

## தூங்கவைத்து

இதற்கிடையே ஜெமினி- ஜூலியா தனிக் குடித்தனம் சென்ற பின்னர் அவர்களது வீட்டு நிர்வாகத்தை இளைஞர் ஒருவரே கவனித்தார். அவர் ஜெமினிக்கு உறவுக்காரர்.

ஜெமினிக்கு தெரியாமல், அந்த இளைஞருடன் ஜூலியா தொடர்பு வைத்திருந்ததாகவும் பேச்சு எழுந்துள்ளது.

ஜெமினியை நன்றாக மது அருந்த வைத்துவிட்டு, அவர் தூங்கிப் போனதும், ஜெமினியிடம் கிடைக்காத சந்தோசத்தை அந்த இளைஞரிடம் பெற்றுக் கொண்டாராம். அதனை ஜெமினி அறிந்ததால் தான் ஜூலியை வெறுக்க ஆரம்பித்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எப்படியோ, இன்னமும் பிரச்சனை தீரவில்லை. காதல் மன்னன் தன் கடைசிக் காலத்தில் இப்படி மாட்டிக்கொண்டாரே!

# சாள்ஸ் ஆட்டம்



**பி**ரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் இப்போது படு ஜாலியான ஆசாமியாக சுற்றுகிறார்.

சமீபத்தில் அர்ஜென்டினாவுக்குச் சென்றிருக்கிறார். அங்கு காபரே நடனம் காணச் சென்றாராம்.

அங்கு நடனமாடிய பெண்கள் அவரைக் கட்டிப்பிடித்து நடனமாடி இருக்கிறார்கள்.

அது மட்டுமா, அர்ஜென்டினா ஜனாதிபதியின் மகளுடனும் நடனம் ஆடியிருக்கிறார்.

அவர்கள் நடனம் ஆடிய காட்சிகள் பத்திரிகைகளிலும் வெளியாகின. டயானா மறைந்த பின்னர் தன் திருவிளையாடல்களை பகிரங்கத்தில் அரங்கேற்ற ஆரம்பித்துவிட்டார் சாள்ஸ்.

# சைக்கிள் பெண்



**க**னடாவில் ஒரு சூடான சம்பவம். கனடா வானொலி நிலையம் ஒன்று போட்டி ஒன்றை நடத்தியுள்ளது.

யாரும் செய்யாத, செய்யக் கடினமான செயலை செய்பவருக்கு பத்தாயிரம் டொலர் பரிசு என்று அறிவித்தது.

ஆளாளுக்கு போட்டி போட்டார்கள். திடீரென்று ஒரு பெண் அனைவரையும் கதிகலங்கச் செய்துவிட்டார்.

தன் உடைகளை அவிழ்த்துப் போட்டுவிட்டு சைக்கிளில் ஒரு வலம் வந்தார்.

ஆனால் பரிசுதான் கிடைக்கவில்லை. போக்குவரத்துக்கு இடையூறு செய்ததாக பொலிஸ் அவரை அமுக்கிக் கொண்டு போய்விட்டது.

# ராட்சத புத்தகம்

**உ**லகிலேயே மிக உயரமான புத்தகம் ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சிலோனாவில் வெளியிடப்பட உள்ளது.

நாலு மீட்டர் நீளம், நாலு மீட்டர் அகலம் உள்ள அந்தப் புத்தகத்தின் எடை இரண்டு தொன். பத்தாயிரம் பக்கங்கள் கொண்டதாக இருக்கும்.

அளவு, எடை யாவும் தீர்மானித்துவிட்டனர். அந்தப் புத்தகத்துக்கு ஆக்கங்கள் சேகரிப்பதே இனி நடைபெறப்போகும் பணி.

சுமார் இருபது இலட்சம் பேரின் எழுத்துக்கள் இடம்பெற உள்ளன.

எழுதுபவர்கள் நன்கொடை அளிக்க வேண்டும். அந்தப் பணம் தர்ம காரிய நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும்.

இந்த ராட்சசப் புத்தகம் தயாரானதும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு உலகின் முக்கிய நகரங்களில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

# 506 ஆண்டுகள் சிறை



**தெ**ன்னாபிரிக்க இளைஞர் ஒருவருக்கு அதி கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சிட்கோ அக்மதிர் டிவாலா என்னும் 31 வயதான அந்த இளைஞர் பயங்கரமான குற்றங்கள் புரிந்திருக்கிறார்.

கொலைகள் மட்டும் 16 செய்துள்ளார். பாலியல் வல்லுறவு, மற்றும் அடிதடி, கொள்ளை என்று ஏராளமான பாதகச் செயல்கள் செய்திருக்கிறார். அவர்மீதான வழக்கை விலியன் நைல் ஸ்டுனா என்னும் நீதிபதி விசாரித்தார்.

முடிவில் 506 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

சிறையில் நன்னடத்தைக்காக தண்டனைக் குறைப்பு கிடைத்தாலும் இவரால் வெளியே வரமுடியாது.

கள்ள சாமியார் பிரேமானந்தாவுக்கும் இப்படியான தீர்ப்பு வழங்கப்பட்டது நினைவிருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com



## வெண்தாடி வேந்தர்


விசித்திரமான தோற்றத்துடன் வெண் தாடி வேந்தராகக் காட்சி அளிக்கும் இவரும் எமது மூதாதையர்களான குரங்கு வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான். மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் காணப்படும் இவை தோற்றத்தில் சிறியவை. நெடிய கைகளையும் நெடிய கால்களையும் கொண்ட இக்குரங்குகளுக்கு ஏனையவற்றைப் போல் நகங்கள் கிடையாது. ஆனால் நீண்டு வளைந்த கொடுக்குகள்தான் காணப்படும்.

இந்தக் குரங்குகளை 'எம்பரர் டமரின்' என்றழைக்கிறார்கள். இவற்றின் உடலின் நீளம் 30 சென்டிமீட்டராக இருக்கும். ஆனால் வாலின் நீளம் 45 சென்டிமீட்டர். எடை ஒரு கிலோவுக்குமேல் இல்லை.

இவை எப்போதும் 40க்கும் மேற்பட்ட தன் இனக் குரங்குகளுடன்தான் வசிக்கும். பூச்சி புழுக்கள், பழங்கள் ஆகியவற்றை உண்ணும். சிலவகை மரத்தண்டுகளில் காணப்படுகின்ற ஒருவகை பிசின்தான் இக்குரங்குகளின் விசேட உணவு.

மிக மென்மையான குரலில் பல வகை ஒலிகளை எழுப்பி இக்குரங்குகள் தங்களுக்கிடையில் கருத்துப் பரிமாறிக்கொள்ளும்.





## உலக மகா ஏமாற்றுப் பேர்வழி

எதற்கெல்லாம் உலக சாதனை என்றில்லையா? என்று நீங்கள் கேட்கலாம். என்ன செய்வது, கெட்ட காரியமானாலும் பெரிதாகச் செய்யப்பட்டால் பிரபலமாகிவிடுகிறதே!

இந்தியாவில் நிதி நிறுவனம் நடத்தி ஊர்ப்பணத்தை சுருட்டி உலையில் போட்டவர்களைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அவர்கள் எல்லாம் இந்த எமகாதக ஆசாமியின் கால்தூசுக்கும் வரமாட்டார்கள். தகவலைப் படியுங்கள்- கதிகலங்கிப் போவீர்கள்.

இவரது பெயர்: சாள்ஸ் எச். கீட்டிங் (ஜூனியர்) ஒரு கனவானைப் போல்தான் காட்சி தருகிறார். இவர் ஒரு பணம் சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் நிதி நிறுவனத்தை நடத்தி வந்தார்.

கலிஃபோனியா- லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 'லிங்கன் சேவிங்ஸ் அண்ட் லோன்' என்ற நிறுவனம்தான் கீட்டிங்கின் கம்பெனி. மொத்தம் 23 ஆயிரம் பேர்வரை தமது பணத்தை இந்நிறுவனத்தில் சேமிப்பு நிதியாகச் சேகரித்து வைத்திருந்தனர்.


சேமித்த பணத்தைத் திரும்பித் தருமாறு கேட்டவர்களுக்கு கீட்டிங்கால் கொடுக்கமுடியவில்லை. வழக்குகள் தொடரப்பட்டன. அமெரிக்க நீதிமன்றம், மேற்படி பணம் வைப்புச் செய்தவர்களுக்கு 2.1 பில்லியன் டொலரை (14 ஆயிரத்தி எழுநூறு கோடி) கீட்டிங் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளித்தது. இத்தனை பெருந்தொகைப் பணத்தை திரும்பத் தருமாறு நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும். அதனால் இந்த எமகாதக ஆசாமியின் படத்தோடு, இந்த உலக சாதனை தீர்ப்பு கின்னஸில் பதியப்பட்டுள்ளது.

## தங்கமோ தங்கம்

தங்கத்துக்கு எங்கும் மரியாதைதான். இந்த மனிதர் தன் கையில் வைத்திருப்பது தான் உலகில் மிகப் பெரிய தங்கக்கட்டி.

அவுஸ்திரேலிய சுரங்கம் ஒன்றில் வெட்டி எடுக்கப்பட்ட இந்த தங்கக்கட்டிக்கு 'மாலை நட்சத்திரம்' என்று பெயர் சூட்டியுள்ளனர். இதன் எடை, 16 கிலோ.

தங்கம் என்றாலே மரியாதை. அதிலும் பெரும் தங்கம் என்றால், பேய் மரியாதை தான்.



## தகவல் பெட்டி

யார் இந்த மலை, உலக சாதனை ஏதாவது செய்துவிட்டாரோ என்று நினைக்காதீர்கள். இவரைவிட பெரிய மலைகளையெல்லாம் தகவல் பெட்டியில் கண்டு மலைத்திருக்கிறோமல்லவா?

இவர் பெயர் பிரதீப் ராய். பொப்பிசை பாடகர். எடை, அதிகமில்லை, 185 கிலோ. உயரம் 6 அடி. அகலம் 5 அடி. கஜகஸ்தானில் பொப் இசை விழாவில் இரண்டாவது பரிசு வென்ற இந்தியர். இந்தியாவிலேயே மிகக் குண்டான பொப் பாடகர் இவர் தான். ஆடி ஆடி இவர் பாடும் அழகே தனி. 'கொட்ஸில்லா' என்று இவரை செல்லமாகக் கூப்பிடுகிறார்கள்.

### இசை உலக மலை



## வரப்போகும் விமானம்

விமானப் பயணம் என்பது வெளிநாடுகளில் பஸ் பயணம் மாதிரியாகிவிட்டது. நினைத்தால் போகிறார்கள்- வருகிறார்கள். இதனால் விமானங்களில் நெருக்கடி.

தற்போதுள்ள பயணிகள் விமானங்களில் பெரியது போயிங் 747. இதில் 500 முதல் 600 பயணிகள்தான் செல்ல முடியும். இதன் அகலம் 64 மீட்டர் வேகமும் அதிகம்: மணிக்கு 900 கி.மீ. முதல் 1200 கி.மீ. வரை.

ஆனால், படத்தில் இருக்கிறது பாருங்கள் விமானம். இதன் மகிமையே தனி. ஆயிரத்துக்கு மேற்பட்ட பயணிகளை தன் வயிற்றில் சுமந்து செல்லும். இதன் அகலம் மட்டும் 96 மீட்டர்கள். ஒவ்வொரு இறக்கையும் 600 தொன். இதன் வேகம் மணிக்கு 1200 கிலோ முதல் 1500 வரை. ஃபிரான்ஸ் நிறுவனம் இதனை வடிவமைத்துள்ளது. ஆனால், இதில் பயணம் செய்ய மேலும் 11 வருடங்கள் காத்திருக்க வேண்டும். என்ன புரியவில்லையா? படத்தில் இருப்பது மாதிரி வடிவம்தான். 2010ம் ஆண்டில்தான் உருவாக்கி முடித்து பறக்க விடப்போகிறார்கள்.

## ருசியும் ஊட்டமும்

வகை வகையான நிலக்காளான்களையும் பூங்கிழங்குகளையும் தேடிக்கண்டு பிடித்து அவற்றை நல்ல விலைக்கு விற்பதில் வல்லவர் இந்த கை மோனியர் என்ற ஃபிரான்ஸ் நாட்டுக்காரர். காளான்களை உற்பத்தி செய்து- சேகரித்து விற்பதற்காகவே மோனியர் பாரிஸ் நகரில் ஒரு பிரமாண்டமான கடை வைத்திருக்கிறார்.

மோனியர் தன் முகத்தோடு அணைத்து வைத்துக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் காணப்படுவதற்கும் காரணமுண்டு. அவரிடமிருப்பதும் ஒரு காளான் தான்- இலகுவில் எவருக்கும் கிடைக்காத காளான் இது.



காளான்கள் போஷாக்கு நிறைந்த உணவாக அண்மையில் தான் நம் நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவற்றைத் தனிப் பண்ணை அமைத்து செயற்கை முறையில் உற்பத்தி செய்து வருகிறார்கள். நல்ல விலைக்கு விற்கவும் முடிகிறது.

படத்தில் காணப்படும் இக்கறுப்புக் காளானை பண்ணைகளில் உற்பத்தி செய்யமுடியாது. இவை நிலத்தின் அடியில் இயல்பாகவே உருவாகிறது. இவை எங்கே இருக்கின்றன என்பதனையும் ஆறறிவு படைத்த மனிதனால் கண்டு பிடிக்க முடியாது. இதற்காகவே சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட பன்றிகளும் நாய்களுமே இக்காளான்கள் இருக்குமிடத்தைத் தேடிப் பிடித்து அகழ்ந்தெடுக்கும்.

ஃபிரான்ஸ் நாட்டின் டிரிக்காஸ்ரின் என்ற இடத்தில் ஒரு நாயினால் கண்டெடுக்கப்பட்டது இந்தக் கறுப்புக் காளான்.

1.14 கிலோ கிராம் (2.5 இறாத்தல்) எடையுள்ள இக் காளான் 1,500 டொலருக்கு (1 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய்) விற்பனை செய்யப்பட்டு உலக சாதனை படைத்தது.

## கவலைப்படாதே சகோதரி (ரா)

ஆடைகள் கசங்காது இருந்தால்தான் அணிவதற்கு அட்டகாசம். ஆள்பாதி, ஆடைபாதி, அதில் இஸ்திரிக்கும் பங்குண்டு.

இன்றைய அவசர யுகத்தில், காலையில் பரபரவென்று இஸ்திரி போட்டுக்கொண்டு கிளம்ப வேண்டும். அதனால் சரியாக இஸ்திரி போடமுடிவதில்லை.

இனிமேல் அந்தக் கவலை வேண்டாம். விசேஷமான இஸ்திரி மேஜை ஒன்று பிரிட்டனில் தயாராகியுள்ளது.

இதில் துணியை வைத்து மேற்புறம் மட்டும் இஸ்திரி செய்தால் போதும். உள்புறங்களிலுள்ள சுருக்கங்கள் தானாகவே சரியாகிவிடும். ஆனால் நீராவி தூவும் இஸ்திரி பெட்டிதான் இந்த மேசையில் பாவிக்கலாம். எப்படியோ இந்த மேஜை அவசரத்துக்கு தோழன் அல்லது தோழி.





படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 99

# நடன நாயகருக்கு தேடிவந்த வாய்ப்பு
# நடிகை நாடிய துறை

தமிழ்நாட்டிலிருந்து மயன்

நடனத்தில் சூரரான நாயகர் அவர். நினைவுடன் தொடர்புடைய படம் ஒன்றில் அவருக்கு ஜோடியாக நடித்தவர் கீர்த்திமிக்க நடிகை.

அடிக்கடி தமது பரம்பரைக் கீர்த்தி பற்றி பேசும் அந்த நடிகைக்கு வேறு சில நடிகர்களும் குறிவைத்தனர். இயக்குநர் ஒருவரும் சீண்டிப்பார்த்தார். தன் விருப்பம் இல்லாமல் யாரும் தன்னை தீண்ட முடியாது என்பது நடிகையின் கொள்கை.

திலக நடிகரின் வாரிசான நடிகருடன் தானாக விரும்பி நட்பு அனுஷ்டித்தார்.

நடன நடிகருடன் இணைந்து நடிக்கும்போது அவரது ஆட்டத் திறமை நடிகையை கவர்ந்துவிட்டது. எப்படி வேண்டுமானாலும் வளைந்தும், நெளிந்தும் ஆட்டம் போடும் அவரது திறமையை தனிமையில் பார்த்து ரசித்து அனுபவிக்க முடிவு செய்தார்.

தனது அறைக்கு வரும்படி நடிகரை அழைத்தார். அதனை ஏற்று நடிகையின் அறைக்குப் போனார் நடன நாயகர்.

நடிகையின் அன்பு வேண்டுகோளை நடிகரும் ஏற்றார். தனது திறமையை நிரூபித்துக் காட்டினார். மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிப் போனார் நடிகை.

அதன்பின்னர் நடன நாயகரை பல முறை தனது அறைக்கு அழைத்து நட்பை வளர்த்தார் நடிகை.

படப்பிடிப்பு முடியும்வரை நடன நாயகருக்கு இப்படியொரு வாய்ப்புக் கிடைத்ததை பற்றி படப்பிடிப்புக் குழுவே பெருமூச்சோடு பேசிக்கொண்டது.

### வலைவீசும் நடிகை

மதம் ஒன்றின் பெயர் கொண்ட முன்றெழுத்து நடிகை அவர். தொலைக்காட்சித் தொடர்களிலும் நடிப்பவர்.

அவரது தந்தை முன்னாள் நடிகர். வில்லனாக சில படங்களில் நடித்தவர். எப்படியாவது தன் மகளை பெரிய நடிகையாக்கும் வெறியில் இருக்கிறார்.

சினிமா உலகில் நடிகைகள் முன்னேறுவதற்குரிய வழிவகைகள், நெளிவு, சுழிவுகளை மகளுக்கு பக்குவமாக எடுத்துக் கூறினாராம்.

நடிகையும் படப்பிடிப்பில் வைத்தே, இயக்குநரையும், உதவி இயக்குநர்களையும் 'வீட்டுக்கு வாங்களேன்' என்று அன்பாக அழைப்பு விடுக்கிறார்.

அவரது அழைப்பை ஏற்றுச் செல்லும் இயக்குநர்களும், உதவி இயக்குநர்களும் மகிழ்ச்சியாக திரும்புகின்றனர்.

வழக்கமாக உதவி இயக்குநர்களை பெரிய நடிகைகள் அலட்சியமாகவே நோக்குவர். இயக்குநர்கள், கதாநாயகர்கள் ஆகியோர்தான் பெரிய நடிகைகள்மீது கண்போடலாம்.

உதவி இயக்குநர்கள் துணை நடிகைகளைத்தான் நாடுவார்கள். ஆனால் இந்த நடிகையோ வித்தியாசமானவர்.

இன்றைய உதவி இயக்குநர்கள்தான் நாளைய இயக்குநர்கள் என்பதை உணர்ந்து, இப்போதே அவர்கள் மனதில் இடம்பிடிக்க 'விருந்து' கொடுக்கிறார்.

நாளை அவர்கள் பெரிய இயக்குநர்களானதும் மறக்காமல் வாய்ப்புத் தருவார்கள் என்று நினைக்கிறார்.

### மேலிடத் தொடர்பு

'நல்ல மனசுக்காரன்' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் ஜெயராகினி. அப்போது அப்பட நாயகன் அவரை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாக பேச்சு அடிபட்டது.

அப்படம் பப்படமானதால் நடிகைக்கும் வாய்ப்புக்கள் வரவில்லை. அதனால் நேரடியாகவே அந்த மாதிரியான தொழிலில் ஈடுபட ஆரம்பித்தார்.

அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது பல அமைச்சர்களுடன் தொழில் ரீதியான நட்பு வைத்திருந்தார்.

ஜெயராகினியை பிடித்தால், ஜெயலலிதா ஆட்சியில் உள்ள அமைச்சர்களிடம் காரியம் ஆகும் என்று பலரும் இவரை நாடினார்கள். இவரும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நினைத்து சம்பாதித்தார்.

இப்போது மேல்மட்ட தொடர்புகள் இல்லையானாலும், சில காக்கி அதிகாரிகளை தன் திறமையால் கைக்குள் போட்டு வைத்திருக்கிறார். அதனால் பிரச்சனை இன்றி தொழில் தொடர்கிறது.

பல நடிகைகள் இப்படி இறுதியில் தொழில் நடத்தும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

வாய்ப்பு இல்லாதபோது சினிமா உலகம் அவர்களை கைவிட்டுவிடும். செலவுக்கு என்ன பண்ணுவது? நடிகையாக இருந்துவிட்டு சாதாரண வாழ்க்கைக்கு மாறுவதும் சுலபம் இல்லை. ஆகவே இந்த தொழிலில் இறங்குகிறார்கள்.

### இந்தி வாய்ப்பு

'காசிர' என்பதை மாற்றி எழுதினால் அந்த நடிகையின் பெயர் வரும். அவருக்கும் ஒரு காலத்தில் பாண்டியனுக்கே ராஜாவான நடிகர்தான் கை கொடுத்து கலக்கினார்.

தற்போது நடிகர் மலர் பல தாவும் வண்டானதால், நடிகைக்கு கைகொடுக்க பொருத்தமான ஆள் கிடைக்கவில்லை.

அதனால் இந்தியில் தமிழ்ப் பட நடிகைகள் என்றால் கைகொடுக்க காத்திருக்கும் நடிகரை நாடிப்போனார். அந்த உயர நடிகருக்கும் நடிகையின் வளைவு, நெளிவுகளில் பிடிப்பு ஏற்பட்டுவிட்டது.

வாய்ப்புத் தருவது பிரச்சனை கிடையாது என்ற நடிகர், தட்சணையை எதிர்பார்த்தார். நடிகையும் தாராளமாக கொடுத்தாராம்.

ஏதாவது ஒரு இந்திப் படத்தில் விரைவில் தலைகாட்டப் போகிறார் நடிகை. எப்படியாவது வாய்ப்பு வாங்கித் தந்துவிடுவார் என்று நடிகர்மீது நம்பிக்கையுடன் இருக்கிறார்.

# ரஜினியுடன் நடிக்க அப்பாஸ் நிபந்தனை

'படையப்பா'வில் நடிக்க அப்பாஸை கேட்டபோது ஒரே ஒரு நிபந்தனை விதித்தாராம்.

'எக்காட்சியிலும் ரஜினியை நான் திட்டுவதுபோல காட்சி வரக்கூடாது' என்பதே அப்பாஸ் போட்ட நிபந்தனை.

ஒரு படத்தில் நாயகனாக நடிப்பதைவிட, ரஜினி படத்தில் தலையைக் காட்டினாலே போதும். நாடு முழுக்க பிரபலமாகிவிடும். அப்பாசுக்கு ஒரு பாடல் காட்சி வைக்கலாமா? என்று இயக்குநரிடம் ரஜினி கேட்டார். அது அவரின் பெருந்தன்மை. ஆனால் இது ரஜினி படம். என் பாடல் காட்சி இடம்பெற்றால் நன்றாக இருக்காது.

என் மனேஜர் உட்பட அனைவரும் ரஜினி ரசிகர்கள். படையப்பாவின் பின்னர் நானும் ரஜினி ரசிகனாகிவிட்டேன்." என்று கூறியுள்ளார் அப்பாஸ்.

# கார் விஜய்

விஜய் ஒரு கார் பிரியர். சந்தைக்கு புதிய கார்கள் எது வந்தாலும் உடனே லபக்கென்று அமுக்கிவிடுவார்.

ஏற்கனவே விஜய்மிடம் ஆறு கார்கள் இருந்தன. சமீபத்தில் மேலும் இரண்டு கார்கள் வாங்கியுள்ளார். காதல் மனைவி வந்ததும் ஒவ்வொரு காராக ஏறி சவாரி போகப் போகிறார்களாக்கும்.



வெங்கடேஷ்-ரம்பா
படம்: கணேஷ்

# காதோடு சொல்லுகிறோம்

லட்சுமிகரமான நடிகையின் மகளான ஐஸ் நடிகை கம்பியூட்டர் கம்பனி முதலாளி ஒருவரை கைப்பிடித்துள்ளார். நடிகையின் குழந்தை அவரது பாட்டியிடம் வளர்ந்துவருகிறது.

'கார்' நடிகருக்கு இளம் நடிகைகளுடன் மட்டுமன்றி, மூத்த நடிகைகளுடனும் நட்பு இருப்பது தெரிந்த சங்கதி. அந்த நட்புகளை ஈடு செய்ய போதை மருந்துகளை நாடுகிறாராம். இந்த திடுக்கிடும் தகவலை தமிழக பிரபல இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது. பெதடின் மாத்திரை போட்டுக்கொண்டுதான் நடிகைகளை சந்திக்கிறாராம்.

மூன்றெழுத்து நகைச்சுவை நடிகர் விவேகமானவர். விசித்திரமான கவர்ச்சி நடிகையுடன் வெளிநாட்டுக்கு கலை நிகழ்ச்சி நடத்த சென்றபோது ராசியானார். அங்கேயே ஒன்றாகத் தங்கி டிஷ்கஷன் பண்ணினார்கள். நாடு திரும்பிய பின்னர் மணியான நகைச்சுவை நடிகருடன் விசித்ரமான நடிகை நட்பாகிவிட்டார். "அதனைப் பற்றி கவலையில்லை. நேரம் கிடைக்கும்போது என்னையும் கவனித்துக் கொள்" என்று கூறிவிட்டாராம் முன்றெழுத்து நடிகர்.

இளம் கதாநாயகன் ஒருவருக்கு பிரபல இசையமைப்பாளரது சகோதரர் மகள்தான் இன்பத் தொல்லை கொடுத்து வந்தார். தொலைபேசியை ஒட்டுக்கேட்டு அவரைக் கண்டுபிடித்தனர். விஷயம் தெரிந்த இசையமைப்பாளரது சகோதரர் நடிகர் வீட்டில் கெஞ்சிக் கூத்தாடி தன் மகள் பெயர் வெளியே வராமல் பார்த்துக் கொண்டாராம்.



புதுமுகம் ஷிவானி
படம்: விண்ணோடும் முகிலோடும்

# அப்பாஸ் தயக்கம்

'படையப்பா' படப்பிடிப்பில் நடந்த சுவையான சம்பவம் ஒன்றை அப்பாஸ் கூறியிருக்கிறார்.

"நான் ஒரு செயின் ஸ்மோக்கர். ஆனால் ரஜினி சார் படப்பிடிப்பு தளத்தில் இருப்பதால் சிகரெட் பிடிப்பதைத் தவிர்த்தேன். சிகரெட் பிடிக்காமல் இருப்பது சிரமமாக இருந்தது.

ஒருநாள் ரஜினிசார் என்னை அழைத்து பக்கத்தில் உட்காரச் சொன்னார். தன் பாக்கெட்டிலிருந்து சிகரெட் எடுத்துக் கொடுத்து பிடிக்கச் சொன்னார். நான் மறுக்க, "நானும் நடிகர். நீங்களும் நடிகர். இதிலென்ன இருக்கிறது?" என்று சொல்லி என்னைச் சகஜப்படுத்தினார்.

நான் ஷேவ் பண்ணாமல் வெளியே வரவே யோசிப்பேன். ஆனால் அவர் நரைத்த தாடியோடு விழாக்களுக்கு வருகிறார். அதை மக்கள் பார்க்கிறார்கள். அவர் படத்தில் இளைஞனாக நடிப்பதையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இப்படி இமேஜ் வளையத்துக்குள் சிக்காமல் வெற்றி பெறுவது அவருக்கு மட்டுமே சாத்தியம்.

கடவுள் அந்த காந்த சக்தியை ரஜினிக்கு மட்டுமே கொடுத்துள்ளான்." என்று கூறியுள்ளார் அப்பாஸ்.

# சிம்ரான் கும்மாளம்

சிம்ரானுக்கு தமிழ் தெரியாது. அப்படியிருந்தும் தமிழக தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி கொடுத்தாராம். நேயர்கள் ஒன்று கேட்க, இவர் ஏதோ பதில் கூறினாராம்.

குறிப்பிட்ட தொலைக்காட்சி பேட்டிக்காக சிம்ரான் வாங்கிய ஊதியம் ஒரு இலட்சம்.

நடன இயக்குநர் ராஜுசுந்தரத்துடன் காதல் கிடையாது என்று சிம்ரான் தொடர்ந்து மறுத்து வருகிறார்.

ஆனால் சமீபத்தில் படப்பிடிப்பு ஒன்றில் சிம்ரானை தேடி வந்தார் ராஜுசுந்தரம். இருவரும் படப்பிடிப்பு தளத்திலேயே சிரித்துப் பேசி கும்மாளம் அடித்தனர்.

சிம்ரானுக்கு படப்பிடிப்பு முடிந்ததும், ராஜுசுந்தரத்துடன் கிளம்பிப் போய்விட்டாராம்.

# சிம்ரான் ஆட்டம்

சிம்ரான் கலை நிகழ்ச்சிகளில் நடனமாட விரும்புவதில்லை. ஆனால் அவரது இனிய காதலர் ராஜுசுந்தரம் கேட்டுக் கொண்டதால் கேரளாவில் இசை நிகழ்ச்சி ஒன்றில் குலுக்கல் நடனம் ஆடியுள்ளார்.

கண்களுக்கு குளிர்ச்சியான உடையில் தோன்றி இரண்டு பாடல்களுக்கு ஆடி ரசிகர்களையும் ஆட வைத்தாராம். 'மின்னல் ஒரு கோடி', 'சந்தா ஓ சந்தா', என்ற பாடல்களுக்கு சிம்ரான் ஆடினார்.

சிம்ரான் ஆட வருகிறார் என்றதும் சிறுவர் முதல் முதியோர்வரை கூட்டம் முண்டியடித்ததால் செமத்தியான வசூல்.



"தொட்டுவிட தொட்டுவிட தொ
பட்டுவிடப் பட்டுவிட மலரும்!"

அஜித்குமார்-மாளவிகா
படம்: உன்னைத் தேடி

www.padippakam.com

மி
ன்
சி
ன்

...ல.ரவிக்குமார் இயக்கத்தில் விஜய் முதன் முறை இரட்டை வேடத்தில் நடிக்கும் 'மின்சாரக் ...னா' படத்தில் மலையாள முன்னணி நடிகை ... உன்னி, விஜய்க்கு ஜோடியாக ஒப்பந்தமாகி ...ார்.

...ாத மனமும் துள்ளும்' படத்தை இயக்கிய எழில் ...து அஜித்குமாரை வைத்து இயக்கும் படத்திற்கு ...ணின் மனதைத் தொட்டு' என்று பெயர் ...துள்ளார்.

...ன்லாலுக்கு ஜோடியாக 'வர்ணபகிட்டு' என்று ...யாளப் படத்தில் நடித்துள்ள மீனா, மீண்டும் ...ன்லாலுக்கு ஜோடியாக புதிய மலையாளப்பட ...ன்றில் நடித்து வருகிறார்.

..., கார்த்திக், சத்யராஜ், சரத்குமார் போன்ற ...ணிக் கதாநாயகர்களை வைத்து படங்களை ...கிய சுந்தர் சி, முதன்முறையாக அர்ஜுன் நடிக்கும் ...ான்றை இயக்கவுள்ளார்.

...ந்தப் பூங்காற்றே' படத்தில் மீனாவுடன் மற்றொரு ...யாக முதலில் 'சங்கமம்' விந்தியா நடிப்பதாக ...தது. தற்போது விந்தியாவுக்குப் பதிலாக 'உன்னைத் ...' பட நாயகி மாளவிகா நடிக்கிறார்.

...வுடன் 'பொன்மனம்', 'மனம் விரும்புதே உன்னை' ... படங்களில் நடித்திருக்கும் கரண், தற்போது ...நெல்வேலி' படத்தில் வயதான தோற்றத்தில் பிரபு ...த் தம்பியாக வில்லன் வேடத்தில் நடித்து வருகிறார்.

...ராஜ் நடிக்கும் 'வீர நடை' படத்தில் இவருக்கு ...ாடு ஜோடிகள். ஒருவர் ரோஜா. மற்றவர் நடிகை ...ராவின் மகள் உமா.

...ஷி இயக்கத்தில் சுரேஷ் கோபி நடித்துள்ள மலை...ப்படமான 'பத்ரம்' அண்மையில் வெளியாகியுள்ளது. ...வில் இதனைத் தமிழில் மொழிமாற்றி வெளி...போகிறார்கள்.

...சந்திரலேகா', 'மாணிக்கம்', 'தேவி' ஆகிய படங்களில் ...கியாக நடித்துள்ள வனிதா விஜயகுமாருக்கு ...ங்கள் எதுவுமில்லை. இவர் முதன்முறையாக ...ாலைக்காட்சித் தொடரொன்றை இயக்கி நடிக்க ...ள்ளார்.

...கே. பாலச்சந்தரின் 'பொய்க்கால் குதிரை', கமலின் ...த்யா' ஆகிய படங்களில் நடித்துள்ள கவிஞர் ...லி, இப்போது கமல் இயக்கி நடிக்கும் 'ஹேராம்' ...ந்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார்.

## ...சோர்ந்த காதல்

...றென்றும் காதல்' படத்தில் வசூல் அறுவடை சரி...லை. படம் எதிர்பார்த்தளவு வரவில்லை. இப்படத்தில் ... நடித்தார் என்று அவரது ரசிகர்களே தலையில் ... கொள்கிறார்களாம்.

...வளிநாட்டு படப்பிடிப்பும், விஜய்யின் சண்டைக் ...ட்சிகளும்தான் படத்தை காப்பாற்றுகின்றன.

விஜய்யின் 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்திற்கு திருஷ்டி பரிகாரம் 'என்றென்றும் காதல்'.



ரஜினி
படம்: படையப்பா

## விறுவிறு கணேஷ்

நெப்போலியன் நடித்த கவர்மெண்ட், வெங்கடேஷ் நடித்த கூலி நம்பர் 1 போன்ற படங்களை தயாரித்த எம். புருஷோத்தம், 'சூர்ய விஷன்' சார்பில் தயாரித்துள்ள படம்தான் 'கணேஷ்'.

ஜூனியர் விகடனில் பத்திரிகை நிருபராக கடமையாற்றிய திருப்பதிசாமி முதன்முறையாக திரைக்கதை, வசனம் எழுதி இயக்கிய படம்.

தெலுங்கில் மாபெரும் வெற்றி பெற்று வெங்கடேசுக்கு திருப்புமுனை ஏற்படுத்தியது. இந்த வருட இந்திய தேசிய விருதுக்கு போட்டி போட நம்பிக்கையோடு களத்தில் குதிக்கிறது கணேஷ்.

இதில் பத்திரிகை நிருபராக வெங்கடேஷ் நடிக்கிறார். ஜெயில் காவலராக ரம்பா நடிக்கிறார். மதுபாலா, ரேவதி, சந்திரமோகன் ஆகியோரும் நடித்துள்ளனர்.

வெங்கடேஷ் ரம்பா இணைந்து ரசிகர்களை கிளுகிளுக்க வைக்கும் இரண்டு பாடல் காட்சிகள் சுவிஸர்லாந்திலும், ஜெர்மனியிலும் படமாக்கப்பட்டன. இப் பாடல் காட்சிகளில் ரம்பா வஞ்சகம் பண்ணாது கவர்ச்சி விருந்தை வாரி வழங்கியுள்ளார்.

தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளியாகியுள்ளது. பொழுதை போக்க ஏற்ற விறுவிறுப்பு. குளுகுளுப்பு.

## அஜித்துக்கு மிரட்டல்

ஹீராவுடன் உறவு முடிந்ததாக அஜித்குமார் அறிக்கை விட்டதன் பின்னணியில் ஒரு பிரபலம் இருக்கிறாராம். ஹீராவை நேசிக்கும் அந்தப் பிரபலம் அஜித்குமாருக்கு கொலை மிரட்டல் விடுத்திருக்கிறார்.

அஜித்குமாரின் பெற்றோரிடமும் அந்தப் பிரபலத்தின் அடியாட்கள் சென்று மிரட்டியுள்ளனர்.

இதுதான் சந்தர்ப்பம் என்று அஜித்குமாரின் பெற்றோர்கள் அவருக்கு பெண் பார்க்க ஆரம்பித்துவிட்டனர். மகனுக்கும் பலவிதமாக புத்தி சொன்னார்களாம்.

இப்போதுதான் மறுபடி எழத் தொடங்கியுள்ளார் அஜித். எனவே அவருக்கும் தனது பெற்றோர்களது புத்திமதி சரியென்று பட்டதாம்.

வீணாக அந்தப் பிரபலத்தை பகைத்துக் கொள்வானேன் என்றும் யோசித்தாராம். அதுமட்டுமன்றி சமீபத்தில் வேறு சில கதாநாயகர்களுடன் ஹீரா படு நெருக்கமான காட்சிகளில் நடித்ததும் அஜித்துக்கு பிடிக்கவில்லையாம்.

இவையெல்லாம் சேர்ந்துதான் 'உறவு முறிந்தது' என்று அஜித் அறிவிக்கக் காரணமாம்.

## 7 விருதுகள்

'கணேஷ்' படம் இந்திய தேசிய விருதுக்கு போட்டி போடுகிறது. அதற்கிடையே ஆந்திர மாநில அரசு வழங்கும் நந்தி விருதுகளை தட்டிக்கொண்டது. ஒன்று, இரண்டல்ல, மொத்தம் ஏழு விருதுகள் கிடைத்துள்ளன.

(1) சிறந்த படம். (2) சிறந்த நடிகர். (3) சிறந்த வில்லன். (4) சிறந்த பின்னணி இசை. (5) சிறந்த வசனம். (6) சிறந்த மேக்கப். (7) சிறந்த படத்தொகுப்பு.

இவை ஏழும் தெலுங்கு கணேஷ் படத்திற்கு கிடைத்த விருதுகள்தான். தமிழில் மொழி மாற்றப்பட்ட படத்திற்கு கிடைத்தவை அல்ல.

## 200 நாள்

இப்போது ஒரு படம் நூறு நாள் ஓடுவதே அபூர்வமான சமாச்சாரம். ஆனால் 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' இருநூறு நாள் ஓடியிருக்கிறது. 'இருநூறு நாள்' விழாவை பிரமாண்டமாக கொண்டாடிவிட்டனர்.

சரத்குமார், கார்த்திக், அஜித்குமார், குஷ்பு, ரோஜா என்று நட்சத்திரப் பட்டாளம் ஆஜராகியது. இப்போது விக்ரமன் காட்டில்தான் மழை.



ரமணகாந்த்-மும்தாஜ்
படம்: மோனிஷா என் மோனலிசா

## அவரைத் தேடி

'உன்னைத் தேடி' 50 நாட்களை தாண்டியதால் போட்ட முதல் திரும்ப கிடைத்துவிட்டது. தயாரிப்பாளர் சந்தோசத்தில் இருக்கிறார்.

அஜித்குமாருக்கும் இப்படம் கை கொடுத்திருக்கிறது. 'உன்னைத் தேடி'யில் அறிமுகமாகியுள்ள நாயகி மாளவிகா. இப்போது பல படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். வாய்ப்புகள் 'அவரைத் தேடி.'

## புதிய காதலி

'என் இனிய காதலர்களே' என்று பெயர் சூட்டியிருந்தார் சேரன். தயாரிப்பாளரோடு ஏற்பட்ட பிரச்சனையால் வேறு தயாரிப்பாளரை பிடித்திருக்கிறார். அதனால் படப் பெயரையும் மாற்றிவிட்டார். 'விண்ணோடும் முகிலோடும்' என்ற பெயரில் படம் வளர்ந்து வருகிறது.

பிரசாந்த், புதுமுகம் ஷிவானி நடிக்கும் படம் இது. ஷிவானிக்கும் சேரனுக்கும் இடையே காதல் என்று கிசுகிசு கிளம்பியுள்ளது. ஷிவானியின் சகோதரியான நடிகை ராஜேஸ்வரியை சேரன் கல்யாணம் செய்ய தீர்மானித்தது பழைய கதை. ஷிவானியைக் கண்டதும் அந்த யோசனையை தள்ளிப்போட்டிருக்கிறார்.

படித்துக் கொண்டிருந்த ஷிவானியை சேரனுக்கு அறிமுகம் செய்து வைத்ததே ராஜேஸ்வரிதானாம்.

## பிரமாண்ட அரங்குகள்

'மோனிஷா என் மோனலிசா' படத்தை சித்திரைப் புத்தாண்டுக்கு வெளியிடுகிறார் டி. ராஜேந்தர்.

படையப்பாவோடு மோதும் இப்படத்தின் சிறப்பம்சம் பாடல்காட்சிகள்.

ஒவ்வொரு பாடல் காட்சியும் பிரமாண்டமான அரங்கில் எடுக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் வடிவேலு தவிர பலரும் புதுமுகங்கள்.

கதாநாயகன் ரமணகாந்த், நாயகி மும்தாஜ் மற்றும் பல மும்பாய் நட்சத்திரங்கள் புதியவர்கள்.

தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியாகிறது.

படத்தில் கதாநாயகி பொப் பாடகி. அதனால் பதினொரு பாடல்கள். அவற்றில் பெரும்பாலானவை பொப் பாடல்கள்.

பாடல் ஒலிப்பதிவு நாடா விற்பனையில் சாதனை புரிந்துள்ளது. வெளியான மூன்றாவது நாளே இரண்டு இலட்சம் பிரதிகள் விற்பனையாகின.

ஒரு மணிநேரம் ஓடக்கூடிய ஒளிப்பதிவு நாடா இது. ஒரு மணி நேர சினிமா பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியானதும் இதுவே முதன் முறை என்கிறார் டி.ராஜேந்தர்.

பாடல்களுக்கு டி. ராஜேந்தரும், அவரது மகன் சிலம்பரசனும் இசை அமைத்துள்ளனர். சிலம்பரசன் பாடலை பாடியுள்ளதோடு, தன் தம்பி குறளரசனுடன் இணைந்து நடனமும் ஆடியுள்ளார்.





முகப்பில்
விஜய்-ரம்பா
படம்: என்றென்றும் காதல்

## நடிக்க ஆர்வமில்லை

'என்றென்றும் காதல்' படத்தில் 'நாடோடி நண்பா போகாதே' என்ற பாடல் காட்சியில் தோன்றி நடித்துள்ளார் இசையமைப்பாளர் எஸ்.ஏ.ராஜ்குமார். அந்தப் பாடலை பாடுவது போல மைக் பிடித்து நடிப்பது அவர்தான்.

நடிப்பில் எனக்கு ஆர்வமில்லை. வலிய வந்து அன்புத் தொல்லை கொடுப்பதால் நடித்திருக்கிறேன் என்று கூறும் ராஜ்குமார் இதுவரை பத்துப் படங்களில் நடித்து விட்டார். எஸ்.ஏ.ராஜ்குமாரே தயாரித்த 'முதல் பாடல்' படத்தில் அவரேதான் வில்லனாகவும் நடித்தார்.

## கிளின்ரனாக கவுண்டர்

கிளின்ரனாக கவுண்டமணியும், மண்டேலாவாக செந்திலும் நடிக்கும் படம் 'கண்ணால் பேச வா'. அருண்குமார், சுவலட்சுமி நடிக்கும் இப்படம் ராஜ்கண்ணா இயக்கத்தில் வளர்ந்து வருகிறது.

இசை: தேவா.

அருண்குமாரின் தாய் மாமன்களாக இப்படத்தில் நடிக்கிறார்கள் செந்திலும் கவுண்டமணியும்.


படிப்பகம்

www.padippakam.com

## படையப்பா!

இன்றும்
மரபுக்
கவிதையாகவே
இருக்கும்
நம்
சமுதாயம்....!

அது
இருப்பதைவிட
இல்லாததைத்தான்
தேடுகிறது
போலும்....

கடிகார
மெட்டிற்கு
பாட்டெழுதி
வாழும்
நாம்....!

உதட்டையும்
உள்ளத்தையும்
இணைப்பதில்
தயக்கமென்ன
நமக்கு?

நம்மவர்களில்
'களை'
இல்லை;
களைதான்
தெரிகிறது...!

'விசுவாசம்'
இதற்கு பல
முரணான
அர்த்தங்கள்
நமது
அகராதியில்...!

'துரோகம்'
இதற்கு சிறந்த
எடுத்துக்காட்டு
நமது
சரித்திரம்..

உலகத்தை
படித்து
முடிப்பதை விட
படிப்பதை
முடித்துவிடலாம்!

இனி....
புத்தாண்டொன்று
படையப்பா!
நம்வாழ்வில்
புது அர்த்தம்
பிறக்க!!!

இணுவையூர். இராகுலன்.

## தேன்கிண்ணம்

## சேறு வரும் காலம்

மாரகழித் தூவானம்
பெய்கிறது- எங்கும்
இருட்டின் கறுப்பாடை!
-•-
தாறு மாறாய் கூடித்திரிந்த
கிராமத்து மாடுகள்
பட்டி மறந்து ஓடும் எங்கோ!
-•-
தேங்கிய அடைமழை
கிராமத்தில் கூட
சேறாய்ப் போகும்
எங்களின் முற்றம்.
-•-
நீரைப் பாய்ச்ச வாய்க்கால்
வைத்து மழையினை நோகுவர்
எங்கள் அன்னையர்!

பூச்செடி வேர்கள்
உயிரினை இழக்க
தரையினில் மேலே
மரங்களும் சாயும்.
செக்கல் நேர குளிர்
வரும்போது தறிகெட்டு
ஓடும் மாடுகள் கூட்டம்
மீண்டும் மழை....
மீண்டும் இருட்டு.....
-•-
வீதிகள் எங்கும் மாடுகள்
ஊர்வலம் - கோடை
வரும் போதே இந்த
மாடுகள் அடங்கும்.

உலைவஸ்கனி.



## திரும்பிவராத நிமிடங்கள்

உன்
பாரச் சுமையை
இறக்கி வைக்க
முடியவில்லை.

மேக விழிகளையும்
தாமரை இமைகளையும்
எப்படி மறப்பது?

சிலையின் அருமை
சிற்பிக்கல்லவா
புரியும்.
கல்லிற்குத் தெரியுமா?

எல்லாவற்றையும்
இழக்க முடியும்
உன்னைத் தவிர......

எனக்காக
நீ
ஒதுக்கித்தந்த
அந்தக்
கணப்பொழுதுகளுக்கு
நான்
பலதடவைகள்
பின்னோக்கிப்
போவதுண்டு!

அந்த நிமிடங்களை
ஏன்
என்னிடமிருந்து
பறித்தாய்?

ஓவியங்களை
சுவர்கள்தான்
விரும்பும்
சுவர்களை
ஓவியங்கள்
விரும்புவதில்லையே!

மாரிமுத்து யோகராஜன்,
மட்டக்களப்பு

## வாழ்த்துச் சொல்லாத வசந்தம்

வாழ்க்கை என்னோடு
புன்னகைக்க
மறுக்கும்போது
வசந்த காலத்தின்
பாடல்களை
நானெப்படி
முணுமுணுப்பேன்?
-o-
உனது உருவத்தைத்
தேடித் தேடித்
தோற்றுபின்னர்
எட்டுத் திக்கிலும்
கையேந்திக்
கதறினேன்:
நீ வரவே இல்லை!
நீல வானத்தினிடையே
நின் புன்னகை வதனம்
மறைந்து போனது-
என்
மனதினுள்ளே சோக
இருள்
மண்டியிட்டமர்ந்தது!!
-o-
உடல் மண்மீது
உயிரின்றி வாட
உணர்வுகள் விண்ணில்
உன் நினைவுகளைத்
தேட
நாள் தோறும்
உனைப் பிரார்த்தித்து
உள்ளமழுதது!
-o-
ஆன்மாவை
அழுத்திப் பிழியும்
அன்பின் உணர்வுகளுக்கு
ஆறுதலில்லாத
தேசமொன்றில்
எனது வாழ்க்கை
வழிதவறி அலைந்தது!
-o-
உள்ளத்தைத் துளைத்து
அடுகுவிப் படரும்
அன்பின் அழகையும்-அது
ஆன்மாவில் பரப்பும்
நிகரற்ற ஆறுதலையும்
நான் அறிவேன்!
-o-
அன்பைத் தேடி
ஆராதித்த கரங்களில்
இறுதியில்
கிடைத்ததெல்லாம்
அடங்காத்
துயரங்களென்றால்
அதை
எங்ஙனம்
தாங்குவேன்...?
-o-
கலைந்துபோன
காதல் தவத்தின்பின்-
எனது
வாழ்வுப்
பாழ்வெளியினூடாக
வரமாக வந்தாயோ!
என் கவிதையின் சோகமாக...
என் புன்னகையின் பாடலாக...
இருப்பதும் நீதானோ...?
-o-
எனது பிரார்த்தனைகளை ஏந்திய
துயரப் பெருமூச்சுக் காற்று
தூரத்துக் கப்பால்
விடைபெற்றுப் போகையில்
வசந்தத்தின் பாடல்களை
நானெப்படி முணுமுணுப்பேன்?

பஹீமா ஜஹான்-
அட்டாளைச்சேனை.

## அண்ணா எங்கே?

போர உறவுகளைப் பிரிக்கிறது. பிரிவுச் சோகம் பொல்லாதது! இந்தச் சின்னம் சிறு வன்னிச் சிறுவன் தன் சகோதரனின் கல்லறையை தட்டுகிறான். அண்ணா நீ வருவாயா?

நீதியான தீர்வு, நேர்மையான சமாதானம் என்பது நெடுந்தொலைவு போனதால், யுத்தம் மிக அருகில் வந்தது! இப்போதுகூட போரை நிறுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சை ஆரம்பிக்க அரசு மறுக்கிறது. விளைவு? நாளை இந்தச் சிறுவனும் அண்ணன் வழியை நாடக்கூடும்! அரசு இதனை ஏன் எண்ணுவதில்லை?

"யுத்தம் ஒழிக" என்றால் போதாது! செயலில் சமாதான ஆர்வம் தேவை!

## இந்தவாரம் உங்கள் பலன்

18.04.99 முதல் 24.04.99வரை

ஜோதிடர் 'கா்னா'

**மேடம்:**
கிரக நிலைகள் சிறப்புடன் உள்ளதால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் சிறு சிறு பிரயாணங்களும் ஏற்படும். சகோதரர் வழியில் ஒத்துழைப்பும் மகிழ்ச்சியும் கிடைக்கும். புதிய முயற்சிகளுக்கு இடமுண்டு. கணவன்-மனைவி உறவுகள் மகிழ்ச்சி தரும். உடலில் சிற்சில நோய் தோன்றலாம்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்: எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**இடபம்:**
இவ்வாரம் இவர்களுக்கு ஓரளவு சிறப்பைக் கொடுக்கும். வியாழன் 11ம் இடத்திலும் கிரக நிலைகள் பலமாக உள்ளதாலும் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தொழில் சிறப்புடன் விளங்கும். கல்வியில் முன்னேற்றம். முயற்சிகளில் தடைகள் நீங்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை: எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 19, 21

**மிதுனம்:**
சனி 11ம் இடத்திலும் 10ம் இடத்தில் ஆட்சிபெற்று இருப்பது தொழில் சிறப்புடன் காணப்படும். காரிய சித்தியும் உறவினர்களது உதவிகிட்டும். கல்வி, பொருளாதாரம் சீராக காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை: எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 23, 18.

**கடகம்:**
குடும்பத்திலுள்ள பிரச்சனைகள் தீரும். புதிய திட்டங்களைச் செயற்படுத்துவீர்கள். எடுத்த கருமங்கள் வைகைத்தலைத் கொடுக்கும். பண உதவிகள் கிட்டும். பிள்ளைகளுக்குத் தொழில் வாய்ப்புக் கிட்டும். நண்பர்களின் உதவியும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஊதா: எண்: 6.
அதிஷ்ட திகதிகள் : 18, 24.

**சிம்மம்:**
புகழும், பணமும் கிடைக்கும் காலமிது. எடுத்த கருமங்கள் யாவும் வெற்றியையும் கொடுக்கும். பிரயாணம் வெற்றி பெறும். காரிய சித்தி, தொழில் மேன்மை, தடைப்பட்ட காதல் உறவு விருத்தி பெறும். உறவினர் சேர்க்கையுடன் பிரிந்த நண்பர்கள் ஒன்று சேர்வார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ரோஸ்: எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 19, 23.

**கன்னி:**
மனச் சஞ்சலமும் வேதனையும் ஏற்படும். உடலில் நோய், விபத்துக்கள் ஏற்படப் பார்க்கும். கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள் ஏற்படும். எடுத்த கருமங்கள் சீராக அமையாது. தொழில் சீராகத் தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநீலம், எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**துலாம்:**
கல்வி சீராகத் தொடரும். எடுத்த காரியம் வெற்றி பெறும். குடும்ப உறவு சிறப்பாகும். உறவினர்களின் உதவி. தொழிலில் செல்வாக்கு பரீட்சைக்கான கல்வி உயர்வுமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்: எண் : 6
அதிஷ்ட திகதிகள் : 19, 24.

**விருட்சிகம்:**
வியாழன் சனி. சக்கிரன் முறையே 5ம் 6ம் 7ம் இடங்களில் உள்ளதால், மலர்ந்த வருடத்தில் எடுத்த காரியங்களில் சித்தி கல்வி உயர்வு. பயணங்களால் பயனுமுண்டாம். உறவினர், நண்பர்கள் உதவி கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு: எண்: 5
அதிஷ்ட திகதிகள் : 23, 21

**தனுசு:**
புதிய தொழில் வாய்ப்புக்கள், அரசாங்க உதவி கிட்டும். எடுத்த கருமங்கள வெற்றியைக் கொடுக்கும். எதிர்பார்த்த உறவினர்களது சேர்க்கை, விவாகம் கைகூடுவது என்பன அமையும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை: எண : 9
அதிஷ்ட திகதிகள் : 18, 24.

**மகரம்:**
கருமங்களில் சிற்சில தடைகள் சிக்கல்கள் காணப்படும். உறவினர் வழிகளில் பிரச்சனைகள் தோன்றும். பணம் ஓரளவு வரும். உடலில் நோய்-தன்பங்கள் ஏற்படலாம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இள நீலம்: எண : 2
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

**கும்பம்:**
சனி 3லும் குரு 2லும் சிறப்புடன் உள்ளதால் கல்வி, தொழில் சிறப்படையும். பண உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் ஒன்று சேருவர். குடும்ப செல்வாக்கு அன்யோந்யமிருக்கும். எதிர்காலத் திட்டங்கள் திட்ட தயாராகும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம்: சாம்பல்: எண் : 9
அதிஷ்ட திகதிகள்: 18, 23.

**மீனம்:**
மனதில் தைரியம் காணப்படும். உடலில் சிறு சிறு நோய் துன்பம் ஏற்படும். பிரயாண அலைச்சல். தகப்பன் வழியில் உதவிகள் கிடைக்கும். வார இறுதியில் பணம் வரும். உறவினர்களது உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, புதன்.
அதிஷ்ட நிறம் : செம்மஞ்சள்: எண்: 3.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

## பிரமாதி வருடப் பிறப்பு

ஜோதிடர் 'கா்னா'

**சித்திரைப்புத்தாண்டான பிரமாதிவருடம் ஏப்ரல் 14ம் திகதி பிறக்கிறது. எமது நாட்டில் பயன்படுத்தப்படும் வாக்கிய மற்றும் திருக்கணித பஞ்சாங்கங்கள் தரும் சிறப்பியல்புகளை இங்கு தருகிறோம்.**

### வாக்கிய பஞ்சாங்கப்படி

சித்திரை முதலாம் நாள் (14.04.1999) புதன்கிழமை முற்பகல் வேளையில் திதி அபரபட்ச திரியோதசியும் பூரட்டாதி (4ம் பாதம்) நட்சத்திரத்தில் பிராமியோக வணிச கரணமும் இடப இலக்கின இடப நவாம்ஸ சனி காலவோரையில் உதயாதி (7நாடி-24விநாடி) கொண்ட மணி 9.02 நிமிடத்தில் 'பிரமாதி' வருடம் பிறக்கின்றது.
(இலங்கை புதிய நேரப்படி பகல் மணி 9.32 நிமிடம்)

**விஷு புண்ணியகாலம்**- புதன்கிழமை அதிகாலை மணி 5.02 நிமிடம் பகல் மணி 1.02 நிமிடம் வரை-புதிய நேரம் 5.32-1.32 வரையுள்ளகாலம்.

### திருக்கணித பஞ்சாங்கப்படி

சித்திரை முதலாம் நாள் (14.04.1999) புதன்கிழமை பகல் வேளையில் அபரபட்ச திரியோதசித்திதியும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபவேளையில் உதயாதி நாழிகை (13.03) மணிபகல் (11.47) இல் பூரட்டாதி 4ம் பாதத்தில் 'பிரமாதி' வருடப் பிறப்பு: உதய இலக்கினம்- மிதுனம்

**விஷு புண்ணிய காலம்**-புதன்கிழமை காலை மணி 7.47 நிமிடம் பிற்பகல் 3 மணி 47 நிமிடம் வரை.

சங்கிரம தோஷங்களுடைய நட்சத்திரங்கள்- பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி புனர்பூசம், மகம், பூரம், உத்தரம் (1ம் பாகம்) விசாகம் என்பன.

இப்புண்ணிய காலத்தில் மருத்துநீர் வைத்து விதிப்படி சங்கற்பித்து, வெள்ளை, பச்சை நிறம் கலந்த ஆடைகளை அல்லது தனி உடைகளாகவோ அணிந்து ஆபரணம், குங்குமம்-சந்தனம் சாற்றி கண்ணாடி, தீபம், கும்பம் முதலியபொருட்களை தரிசித்து இஷ்ட தெய்வங்களை வணங்கி சூரியனுக்கு பொங்கலிட்டு இயன்ற அளவு தானதருமங்கள் செய்து, உறவினர் சுற்றத்தார் நண்பர்கள் கூடி அறுசுவைப் பதார்த்தங்கள் உண்ணலாம்.

**கைவிசேடம்** ஏப்ரல் 14ம் திகதி புதன்கிழமை பகல் 9.58 முதல் 10.26 வரை.
பகல் 10.32 முதல் 12.29 வரை.
16ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 10.54 முதல் 11.19 வரை.

மற்றைய கருமங்கள்- விதை விதைத்தல், ஏர் பூட்டுதல், புதிய ஸ்தாபனங்களைத் தொடக்குதல், உறவினர்களின் விருந்து உபசாரம் என்பனவற்றுக்குச் செல்லுதல் மற்றும் ஏனைய சுப கருமங்களுக்குச் செல்லக்கூடிய சுபதினங்கள்:

14.04.99 புதன்கிழமை பகல் 10.31 முதல் 12.28 வரை
21.04.99 புதன்கிழமை பகல் 10.04 முதல் 12.03 வரை
18.04.99 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.27 முதல் 12.16 வரை

பிரமாதி வருடத்தில் பிறப்பன்று முக்கியமாக தட்சணாமூர்த்திக்கு மஞ்சள் அர்ச்சனையும் அம்மனுக்கு குங்கும அர்ச்சனையும் செய்தால் செல்வம் பெருகும், குடும்ப சந்தோஷம் ஏற்படும்: குறைகள் யாவும் நீங்கப்பெறும்.

## நில்-கவனி-முன்னேறு

கைக்கடிகாரம் கட்டுகிற பழக்கம் உள்ளவர்கள் கூட குறித்த மணிப்படி வருவதில்லை, போவதில்லை. ஒரு சாதாரண முட்டாளை விடப் படித்த முட்டாள் மோசமானவன்.

## நேரம் தவறாதே

கைக்கடிகாரம் கட்டாததால் நேரம் தவறி வருகிறவனை விட, வாட்ச் கட்டியும் நேரம் பிசகி வருகிறவர் கண்டிக்கத்தக்கவர்.

நேரத்தை உணர்வு பூர்வமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அலாரம் நம்மை எழுப்புவதைவிட நாமே எழுந்து கொள்ளும் பழக்கம் நமது உணர்வுக்கு வர வேண்டும்.

பசி, தூக்கம் மற்றும் இயற்கை உபாதைகள் அலாரம் பார்த்து வருவதில்லை.

நேர உணர்வை உடம்புக்கு ஊட்டுவது கடினமல்ல. ஒன்பது பத்துக்கு வரும் ஒரு பஸ்ஸில் ஏற வேண்டும் என்றால், உங்கள் வீட்டிலிருந்து எப்போது கிளம்ப வேண்டும்?



சில நாள் ஒத்திகை பார்த்தீர்களானால் சரியான நேரம் உங்களுக்கே தெரிந்துவிடும்.

வீட்டில் பெண்கள் சமைக்கும்போது கடிகாரத்தைப் பார்த்து பார்த்து ஒரொரு பொருளையும் சமைப்பதில்லை.

குழம்பு எவ்வளவு நேரம் கொதித்தால் நன்றாயிருக்கும், காய்கள், பருப்பு ஆகியவை வேக எவ்வளவு நேரமாகும்- இதெல்லாம் அனுபவத்தில் தானாக அவர்களுக்குத் தெரிந்துவிடுகிறது.

அனுபவத்தைக் கொண்டு செயல்களை அறிவில் பதித்துவிட்டால் உணர்வு அதற்கேற்பப் பழகிவிடும்.

நடந்துபோகும்போது சாலையில் தினமும் எத்தனையோ முட்களையும், குப்பையையும், அசிங்கங்களையும் கால்கள் நம்மை அறியாமலே தாண்டியும் விலகியும் செல்கிறது. காலுக்கு முன் குத்திய முன் அனுபவம், குப்பையை மிதித்த அனுபவம் இருப்பதால் யாரும் சொல்லாமல் தானே விலகி ஜாக்கிரதையாக நடக்கிறது.

கடிகாரம் கட்டுபவர்கள் குறித்த மணியில் குறித்த இடத்துக்கு வராவிட்டால் அவர்கள் கடிகாரம் கட்டுவதை விட்டு விட வேண்டும்.

பிரகஸ்பதி

## பேனா நண்பர்கள்



பெயர்: எச். ஜவ்பர்.
வயது: 26
முகவரி: P.O. BOX - 173
RIYADH - 11411,
K.S.A.
பொழுது போக்கு:
பேனாநட்பு.

பெயர்: எப். றிஹானா.
வயது: 29
முகவரி: P.O.BOX 19192,
DUBAI, U.A.E.
பொழுது போக்கு:
வழமையானவை.





படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## களிம்புகளை பூசலாமா?



**கோ**டை காலத்தில் அதிக வியர்வை ஏற்படுவதால் முகத்தில் எண்ணெய்ப்பசை தோன்றி அதில் தூசிகள் ஒட்டுவதால் பருக்கள் உண்டாகும். இது முகத்தின் அழகைக் குறைப்பதுடன் சிலருக்கு புண்களாக மாறிவிடும்.

அது மட்டுமன்றி புண்கள் ஆறிய இடத்தில் கரும்புள்ளிகள் தோன்றி அழகை முழுவதுமாகக் கெடுத்து விடும். இதனால் இளவயதினருக்கு பருக்களைக் கண்டாலே பயம் வந்து விடுகிறது.

இதைத்தடுக்க அவர்கள் வாசனைக் களிப்புகளை வாங்கிப் பூசிக் கொள்கிறார்கள். இதனால் பருக்கள் போய்விடப் போவதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் கடலை மாவை முகத்தில் பூசி வந்தால் நல்லது.

அதுமட்டுமன்றி குளிர்ந்த தண்ணீரில் முகத்தைக் கழுவி வர வேண்டும். அப்படிச் செய்தால் பருக்கள் உண்டாவதைத் தடுக்கலாம்.

## மாத்திரை போடுவது எப்படி?



**மா**த்திரைகளை விழுங்கும் போது தண்ணீரைத்தான் குடிக்க வேண்டுமா? வேறு பானங்களைப் பருகி மாத்திரைகளை விழுங்கக்கூடாதா?

இதனைப் படியுங்கள். விடை கிடைக்கும்.

* தண்ணீரைப் பயன்படுத்தி மாத்திரைகளை விழுங்குவதே சரியானது. தண்ணீரைத் தவிர்த்து, வேறு பானங்களைப் பயன்படுத்தி மாத்திரை விழுங்கினால் சில மாத்திரைகளின் பலன் குறையும்.

* சூடான பானங்களை மாத்திரை விழுங்க உபயோகிப்பதும் நல்லதல்ல. சூடான பானங்களோடு மாத்திரைகளை விழுங்கும் போது மாத்திரையின் மேல் பகுதி விரைவாக உருகிவிடும். வயிற்றை சென்றடையும் முன்பே மாத்திரை உருகினால் வயிற்று வலி தோன்றக்கூடும்.

* தோடம்பழச் சாற்றுடன் மாத்திரை விழுங்கினால் சில நேரங்களில் மாத்திரையின் சக்தி குறைந்து போகும். அதற்குக் காரணம் பழச்சாறில் இருக்கும் அமிலத்தன்மை.

* பாலோடு மாத்திரை விழுங்குவதும் நல்லதல்ல. அஸ்பிரின், இருமல் மருந்து, அன்டிபயோட்டிக் போன்றவற்றை பாலோடு சாப்பிட்டால் முழுமையான பலனைத் தராது.

அதனால் தண்ணீரைப் பயன்படுத்தியே மாத்திரைகளை விழுங்க வேண்டும்.

## மெது மெது இறைச்சி

**இ**றைச்சி நன்றாக வேக வேண்டுமா? அதற்கு என்ன செய்யலாம் என்று பார்ப்போம்.



* இறைச்சியை வேக வைக்கும்போது உப்புச் சேர்க்கக்கூடாது. இறைச்சி வெந்த பின் உப்பைச் சேருங்கள். இவ்வாறு செய்தால் இறைச்சி அதிக அளவு மென்மையாக இருக்கும்.
* கோழிக் குழம்பு வைப்பதற்கு முன்னர் கோழி இறைச்சியில் சிறிதளவு எலுமிச் சம்பழச்சாறு கலந்து விடுங்கள். கோழிக் குழம்பு அதிக சுவையாக இருக்கும்.
* பிரொய்லர் கோழி இறைச்சி வாங்கினால் வாங்கிய உடனே அதனை வினிகரில் தோய்த்து துணியில் பொதிந்து வையுங்கள். இறைச்சி புத்தம் புதிதாகத் தோற்றமளிக்கும்.
* இறைச்சியில் ஒரு துண்டு பப்பாளிக்காய் சேர்த்து வேக வைத்தால், இறைச்சி எளிதாக வெந்து விடும்.
* குளிர்சாதனப் பெட்டியில் இருந்து எடுக்கும் இறைச்சியை உப்புக் கலந்த நீரில் கழுவி விட்டுச் சமையல் செய்யுங்கள்.
* முற்றிய ஆட்டு இறைச்சியை சிறிது நேரம் பப்பாளி இலையில் பொதிந்து வைத்த விட்டுப் பின்பு வேக வைத்தால் இறைச்சி மிருதுவாக இருக்கும்.
* இறைச்சியை ஃபிரீசரில் வைத்துப் பாதுகாக்கும்போது அதனைச் சிறு துண்டுகளாக நறுக்காமல் பெரிய துண்டுகளாக வைத்திருங்கள்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FO

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-04-1999**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# கண்ணீரில் கரைந்த இரவுகள்

83 — புவனா

**ட**யானாவும் டோடியும் மனோதத்துவ டாக்டரிடம் சென்று வந்தது பரபரப்பு தகவலாக வெளியாகியது.

'டயானாவின் இரகசியப் பயணம்! மனோதத்துவ மருத்துவருடன் 90 நிமிடங்கள் ஆலோசனை!' என்று செய்திகள் வெளியாகின.

டோடி பற்றியும் தகவல்கள் வெளியாகின. 'காதல் மன்னரான டோடி தன் வலையில் இளவரசியை வீழ்த்தி இருக்கிறார்.' என்று விமர்சித்தன பத்திரிகைகள்.

டயானாவும், டோடியும் விஜயம் செய்த டேர்பிஷையர் கிராமத்திற்கு நேரடியாகச் சென்றனர் நிருபர்கள்.

அதுவரை அமைதியாக இருந்தது அக் கிராமம். டயானா வந்து போனதால் அமோகமான முக்கியத்துவம் பெற்று பரபரப்படைந்தது.

ரீட்டா நிருபர்களைச் சந்திக்க மறுத்து விட்டார். அதனால் கிராம மக்களிடம் பேட்டி எடுத்தனர்.

அக்கிராமத்திலுள்ள ஒருவர் பின்வருமாறு கூறினார்:

"இளவரசியை சில நொடிகள்தான் நான் காணமுடிந்தது. அவரது உதடுகளில் மகிழ்ச்சியான புன்னகை மலர்ந்திருந்தது.

டோடியுடன் இளவரசியின் காதல் நல்ல பலனைக் கொடுத்துள்ளது என்பதற்கு அந்தப் புன்னகையே சாட்சி!" என்று அவர் கூறினார்.

ஆனால் டயானாவின் சிநேகிதி ஒருவர் வேறு விதமாகக் கூறினார். "டயானா அங்கு சென்றது காதல் ஆராய்ச்சிக்காகவல்ல; புற்று நோயால் அவதிப்படும் ஒரு நோயாளி டயானாவைப் பார்க்க ஆவலுற்றார். அவரைக் காண்பதற்கே டயானா அங்கு போனார்," என்று அவர் சொன்னதை எவரும் நம்பவில்லை.



டயானாவை டோடி கொண்டுவந்து இறக்கிவிட்டுச் சென்றதும் எப்படியோ கசிந்து பத்திரிகைகளில் வந்துவிட்டது.

அதனைப் பார்த்த டோடி டயானாவிடம், "உங்கள் ஒவ்வொரு அடியும் அவதானிக்கப்படுகிறது." என்று கூறினார்.

அதற்கு டயானா, "ஆமாம், அதனை நான் அறிவேன். அதனால்தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்!".

"என்ன முடிவு?" என்று டோடி கேட்ட போது: "இங்கிலாந்தைவிட்டே வெளியேறிவிட வேண்டும். எங்காவது இந்தத் தொல்லைகள் இல்லாத தூர தேசத்தில் நிம்மதியாக- சுதந்திரமாக வாழ்ந்து பார்க்க வேண்டும்!" என்றார்.

இதனை தன் நெருக்கமான சிநேகிதிகளிடமும் டயானா கூறினார்.

"நான் இங்கிலாந்தைவிட்டே போகப் போகிறேன். இங்கே எங்கே போனாலும் என்னை இனம் கண்டு கொள்கிறார்கள். துரத்துகிறார்கள். என் அந்தரங்கத்தில் தலையிடுகிறார்கள். இங்கிருந்து போனால் தான் நிம்மதி!" என்று பலமுறை கூறியிருக்கிறார்.

### விடுமுறை

இந்தச் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்தபோது டயானா இருந்தது டோடி குடும்பத்துக்குச் சொந்தமான பங்களாவில்.

ரீட்டாவைச் சந்தித்ததால் டயானாவின் மனக்குழப்பம் இறங்கியிருந்தது. ரீட்டா அதனை இறக்கிவைத்து விட்டார்.

"உனக்குச் சரியென்று தோன்றுகின்ற, உனக்கு நிம்மதி தருகின்ற, மற்றவர்களுக்கு துன்பத்தைத் தராத பாதையில் நீ செல்லலாம். அதற்கு முன்னர் உன் முடிவை உறுதிப்படுத்திக் கொள்!" என்று ரீட்டா கூறியிருந்தார்.

தாம் திருமணம் செய்யப் போகும் தகவலை முதன்முதலாக ரீட்டாவிடம்தான் டயானா வெளியிட்டார்.

இருவரும் அங்கிருந்து ஹெலி மூலம் அல் ஃபாயிட் குடும்பத்தினர் தங்கியிருந்த உல்லாச ஓய்வு விடுதிக்குச் சென்றனர்.

அந்த உல்லாச ஓய்வு விடுதி சுறேயில் இருந்தது. விடுமுறையைக் கழிப்பதற்கு பாயிட் குடும்பம் அங்குதான் செல்வது வழக்கம்.

டயானா டோடியுடனும், ஃபாயிட் குடும்பத்தினருடனும் ஒருநாள் முழுவதும் செலவிட்டார்.

அல் ஃபாயிட் அதனால் மிகவும் மகிழ்ந்து போனார். தன் மகனை டயானா நேசிக்கிறார் என்பதை அவர்களது நடவடிக்கைகளை வைத்தே அவர் எடை போட்டு விட்டார்.

ஃபாயிட் குடும்பத்தினருக்கும் டயானாவைப் பிடித்துவிட்டது. டயானாவை நேரில் காணமுன்பாகவே அவர்கள் அவரது அபிமானிகள்.

அன்று இரவையும் டயானா அங்குதான் கரைத்தார். ஆனால் டோடியுடன் தனிமையில் இருப்பதற்கு எத்தகைய சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை.

மறுநாட்காலையில் டோடி தனது காரில் டயானாவை ஏற்றிவந்து கென்சிங்டன் மாளிகையில் இறக்கிவிட்டுத் திரும்பினார்.

உள்ளே வருமாறு டயானா அழைத்தபோதும், அப்போதே அங்கு செல்ல டோடி விரும்பவில்லை. "பிறிதொருநாள் வருகிறேன்." என்றுகூறிவிட்டு போய்விட்டார்.

### மறுப்பு

டோடியுடன் திருமணம் செய்து கொண்டு பாரிசுக்கு செல்வதுதான் டயானாவின் உடனடி யோசனை.

அதே சமயம் திருமணம் நடக்கும்வரை தனக்கும் டோடிக்கும் இடையே உள்ள காதலை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவும் விரும்பவில்லை.

டயானாவின் மரியாதைக்குரிய எழுத்தாளர்களில் ஒருவரான தியோருடாரா கோபுலஸ் என்பவர் டயானாவிடம் நேரடியாகவே கேட்டுவிட்டார்.

"டோடியை நீங்கள் திருமணம் செய்யப்போவதாக கூறப்படுவது உண்மையா?"

அதற்கு டயானா பின்வருமாறு பதிலளித்தார்: "பொருந்தாத ஒரு வாழ்க்கை ஒப்பந்தத்தில் இருந்து இப்போதுதான் விடுதலை பெற்றிருக்கிறேன். இதற்கிடையே போதுமான அவகாசம் இல்லாமல் மற்றுமொரு பொறியில் சிக்க முடியுமா?"

## காதலுக்கு ஒரு வில்லி



கெல்லி ஃபிஷர் தாயுடன்

இவ்வாறு கூறிய டயானா அன்றிரவே டோடியின் பார்க்லேன் (பூங்கா ஒழுங்கை) இல்லத்தில் இரவு உணவுக்காகச் சென்றார்.

அந்த வளவுக்குள் செல்லும்போதே டயானாவின் காரின் விளக்குகள் அணைக்கப்பட்டுவிட்டன.

டோடியும், டயானாவும் இரவு உணவை சேர்ந்தே அருந்தினர். டயானாவின் கைகளில் முத்தமிட்டு வழியனுப்பி வைத்தார் டோடி.

### துரோகி

டயானாவும், டோடியும் காதலிப்பதாக செய்திகள் வந்ததும் அதற்கு வில்லி ஒருவர் முளைத்தார். பிரபல மொடல் அழகியும், டோடியின் காதலியுமான கெல்லி ஃபிஷர் தான் அந்த வில்லி. கெல்லி ஃபிஷர் அமெரிக்க கலிஃபோர்னியாவைச் சேர்ந்தவர்.

டோடியும், டயானாவும் ஹெலியில் சென்றுவந்தபோது எடுக்கப்பட்ட படங்களை பலரிடம் காட்டிய கெல்லி ஃபிஷர், "துரோகி துரோகி" என்று டோடியை திட்டித்தீர்த்தார்.



"என்னைத் திருமணம் செய்யப்போவதாக கூறி என்னை ஆசைதீர அனுபவித்தார் டோடி. இப்போது ஏமாற்றப் பார்க்கிறார். நான் சும்மா விடப்போவதில்லை. நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்போகிறேன்!" என்று அழுதழுது பேட்டி கொடுத்தார்.

டோடி தனக்கு பரிசாகக் கொடுத்த மோதிரத்தையும் பத்திரிகையாளர்களுக்குக் காண்பித்தார்.

"இதுதான் நிச்சயதார்த்த மோதிரம். இதனை எப்போது அவர் என் விரலில் அணிவித்தாரோ அப்போதே நான் அவர் மனைவியாகிவிட்டேன்," என்று கூறினார்.

"துரோகி என்றும் கூறுகிறீர்கள். அவர் அணிவித்த மோதிரத்தை இன்னமும் ஏன் அணிந்திருக்கிறீர்கள்?" என்று நிருபர் ஒருவர் கேட்டார்.

அதற்கு கெல்லி ஃபிஷர், "நான் இன்னும் அவரைக் காதலிக்கிறேன்!" என்று தேம்பினார்.

இப் பேட்டி டயானாவின் பார்வைக்கு வந்தது. அவர் கெல்லிமீது அனுதாபப்பட்டார். அந்த அனுதாபம் வினையானது.

(அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**சிலாபம் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**எஸ். பாலாம்பிகை,**
118/50, குருநாகல் வீதி,
மெல்புர, சிலாபம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்

### வைர மோதிரப் போட்டி

* முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
* 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
* பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
* இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு உ வைர மோதிரப் போட்டி



படிப்பகம்

www.padippakam.com





ஒற்றுமை பயின்றாயோ? அடிமை!
உடம்பில் வலிமையுண்டோ?
வெற்றுரைபேசாதே!- அடிமை!
வீரியம் அறிவாயோ?

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கடினமான கேள்வி

ஒரு முறை அக்பரின் அரண்மனையில் அக்பருடன் பேசிக்கொண்டிருந்தார் பீர்பால்.

அப்போது ஒருவன் வந்தான். அவன் அக்பரைப் பார்த்து,

"சக்கரவர்த்தியே! உங்கள் அரசவையில் உள்ளவர்களில் பீர்பால்தான் மிகவும் புத்திசாலி என்று எல்லோரும் கூறுகிறார்கள். அவருக்குத் துணிவிருந்தால் என்னுடன் போட்டியிடச் சொல்லுங்கள்.

நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அவரால் பதில் சொல்ல முடியுமா?" என்று சவால் விட்டான்.

அக்பர் அமைதியாக பீர்பாலைத் திரும்பிப்பார்த்தார்.

"சக்கரவர்த்தி அவர்களே! எனக்கு அவசர வேலையிருக்கிறது. அவருடன் போட்டியிட எனக்கு நேரமில்லை," என்று மறுத்தார் பீர்பால்.

ஆனால் அக்பர் விடவில்லை.

"பீர்பால்! நீ போட்டியில் பங்கேற்றுத் தான் ஆக வேண்டும்!" என்று வற்புறுத்தினார்.

அதற்குச் சரியெனச் சம்மதித்த பீர்பால், போட்டியிட வந்தவனைப் பார்த்து,

"என்னிடம் நீ சுலபமான நூறு கேள்விகளைக் கேட்கப் போகிறாயா அல்லது கடினமான ஒரு கேள்வியைக் கேட்கப் போகிறாயா?" என்று கேட்டார்.

போட்டிக்கு வந்தவன் சற்று யோசித்து விட்டு,

"கடினமான ஒரு கேள்வியைக் கேட்கிறேன்!" என்றான்.



"எங்கே கேள் பார்க்கலாம்?" என்றார் பீர்பால்.

"கோழியா அல்லது முட்டையா முதலில் தோன்றியது?" என்று கேட்டான் போட்டியாளன்.

"கோழி தான் முதலில் வந்தது!" என்று சற்றும் யோசிக்காமல் பட்டென்று சொன்னார் பீர்பால்.

"எப்படிச் சொல்வீர்கள்- முதலில் கோழி தான் தோன்றியது என்று?" என குறுக்குக் கேள்வி கேட்டான் போட்டியாளன்.

அதற்கு பீர்பால் அவனிடம்,

"நீ என்னிடம் ஒரு கேள்விதான் கேட்பேன் என்று சொன்னாய் அல்லவா? எனவே இரண்டாவது கேள்விக்கு இடமில்லை!" என்று சொல்லிவிட்டு எழுந்தார்.

போட்டியிட வந்தவனும் அக்பரும் வாயடைத்துப் போனார்கள்.

போட்டியாளன் தான் தோற்றுவிட்டதை ஒப்புக்கொண்டு வெளியேற அக்பர் பீர்பாலைப் பாராட்டினார்.

# அதிசயம்- ஆனால் உண்மை!



ரஷ்யாவில் வாழ்ந்த ஃபயோடர் மக்னோவ் என்பவரது கைகள் மிகவும் பெரியவை. இவர் தனது ஒவ்வொரு கைகளிலும் 12 முட்டைகளைக் கீழே விழாமல் வைத்திருப்பார்.



ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிகோரஸ் என்ற கோமகன் வேட்டைக்குச் செல்லும் போது குதிரையின் காலில் காயம் ஏற்பட்டு நொண்டியானது. இந்தக் குதிரையை கோமகன் தனது தோள்களில் தூக்கிச் சுமந்து கொண்டு கால் நடை ஆஸ்பத்திரிக்குச் சென்றார். குதிரையின் நிறை 420 இறாத்தல். சுமந்த தூரம் 1 1/4 மைல்.



அமெரிக்காவில் வாழ்ந்த மேர்பி என்பவர் சிவப்பிந்தியர்களின் பிடியில் இருந்து தப்பியோடி நியூயோர்க் அருகிலுள்ள மிடில்போர்க் என்ற நீர்வீழ்ச்சியின் அடியில் ஒளித்திருந்து இரவு முழுவதையும் கழித்தார். இவருக்கு மேல் 125 அடி உயரத்தில் இருந்து தடதடவென்று விழுந்த அருவி நீர் கடுமையாகத் தாக்கியதையும் தாங்கிக்கொண்டார்.

# கைக்குட்டை



வெய்யில், மழை, பனி ஆகியவற்றிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காகத் தலைமீது போர்த்திக்கொள்ளவே கைக்குட்டை ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டது.

முற்காலத்தில் கைக்குட்டைகள் புற்களால் செய்யப்பட்ட சிறு பாய்களாக இருந்தன. சீனர்கள் பட்டுத்துணி மற்றும் கனமான காகிதங்களை கைக்குட்டைகளாகப் பயன்படுத்தினர். ரோமானியர்கள் கைக்குட்டைகளை சணலினால் தயாரித்தனர்.

ஒரு காலத்தில் அரச குடும்பத்தினரும் பெரும் செல்வந்தர்களும் கைக்குட்டைகளை காட்சிப் பொருளாகவும், பெருமைக்காகவும் வைத்துக் கொள்ளத் தொடங்கினர். அப்போது விலை மதிப்புள்ள ஒரு பொருளாகவே கைக்குட்டை கருதப்பட்டது.

கைக்குட்டையால் மூக்கைத் துடைத்துக் கொள்ளவும் பயன்படுத்தலாம் என்பதை ஈரான் மன்னரான மகா பிரடரிக் என்பவர் தான் முதலில் அறிமுகப்படுத்தினார்.

வெவ்வேறு அளவுகளில், வடிவங்களில் கைக்குட்டைகள் 1600ம்ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டன. அப்போது பூவேலைப்பாடுகள் செய்தும், இரத்தினக்கற்கள் கோர்க்கப்பட்டும் கைக் குட்டைகள் தயாரிப்பது வழக்கத்தில் இருந்தது.

ஃபிரான்ஸ் நாட்டு அரசியான மேரிக்கு கைக்குட்டைகள் வட்டவடிவில், முக்கோண வடிவில்- இப்படி வெவ்வேறு வடிவுகளில் இருப்பது பிடிக்கவில்லை. கைக்குட்டைகள் சதுர வடிவில்- ஒரே அளவில் இருக்க வேண்டும் என்று தனது கணவரான 16ம் லூயியிடம் கூறினார்.

உடனே லூயியும் மனைவியின் விருப்பப்படி கைக்குட்டைகள் சதுரமாக இருக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார். கைக்குட்டைகள் 1800க்குப் பின் தான் எல்லாராலும் பயன்படுத்தக்கூடிய வகையில் பிரபலமாயின.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **24.04.1999**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **293**
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 291

**பரிசுக்குரியவர்:**
ஏ. சர்மிளா,
மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே. கிருஷ்யாந்தன், சென் ஜோசப் கல்லூரி, கொழும்பு.10. | இ.அரபாத், தி/அலிகார்.ம.வி., கிண்ணியா. |
| இராமமூர்த்தி யசோப்பிரியா, தமிழ் மகா வித்தியாலயம், திருகோணமலை. | ஷர்மினா கிரிதரன், சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழும்பு-6. |
| எப். நுஸ்ஹா நஜீம்தீன், பதியுதீன் மஹ்மூத் பெண்கள் கல்லூரி,கண்டி. | பி. கோகுலன், மெதடிஸ்த மத்தியகல்லூரி, மட்டக்களப்பு. |
| பி. நதீஷன், தமிழ் மகாவித்தியாலயம்,புவக்பிட்டி, அவிசாவளை. | டி. எஸ். கிறிஸ்டோபர், கதிரேசன் குமார மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி. |
| எம். எல். பரீஹா, பாத்திமா முஸ்லிம் மகளிர் பாடசாலை, புத்தளம். | எஸ். பாத்திமா நிரோஷா, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, புத்தளம். |

# வானிலை காட்டும் உயிரினங்கள்

வானிலையில் ஏற்படக்கூடிய மாறுதல்களை அறிவியல் உபகரணங்களைவிட மிருகங்களும், பறவைகளும் முன்னதாக உணர்ந்து விடுவதாக விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார். அவரது ஆராய்ச்சியின் சில முடிவுகள் வருமாறு:

- கடுமையான புயல் வருவதற்கு முன் தேனீக்கள் மிகவும் பரபரப்புடன் தங்கள் கூடுகளை அடைகின்றன.
- கனத்த மழை வருமென்பதை உணர்ந்து கொண்ட சமயத்தில் எறும்புகள் வட்டமான பாதையில் செல்லுகின்றன.
- பெருமழை வரப்போகிறதென்று தெரிந்தால் சிலந்திகள் வலை பின்னும் பணியினை நிறுத்திவிட்டு பாதுகாப்பான இடம் நோக்கிச் சென்றுவிடுகின்றன.
- நாய்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தால் மழை வருமென்று திட்டவட்டமாகக் கூறலாம்.
- யானைகள் அங்குமிங்கும் ஓடி, பத்திரமான இடத்தில் பதுங்கினால் புயல் வரும்.
- கடுங்கோடையில் குளிர்ந்த காற்று வரும் திசையை குதிரையால் அறிந்து கொள்ள முடியும்.
- பன்றிகள் வடக்குப் பக்கம் நோக்கி சுவர்ப்பக்கம் ஒதுங்கினால் நல்ல வானிலை அமையும். தெற்குப் பக்கம் நோக்கி ஒதுங்கினால் மழை வரும்.
- மோசமான வானிலை இருந்தால் பாம்புகள் புற்றினுள் ஒளிந்து கொள்ளும். வானிலை சீராகும் வரை புற்றை விட்டு வெளியே வராது.
- புயல் வருவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்பாக புறாக்களும் சில பறவைகளும் விபரீதமாக ஒலியெழுப்பிய வண்ணம் அமைதியற்றுப் பரபரப்புடன் காணப்படும்.

# கவனக்குறைவு கண்டுபிடிப்பு

கவனக் குறைவுகளால் கூட பல நேரங்களில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் நிகழ்ந்திருக்கின்றன. உயிர்காக்கும் மருந்தான பென்சிலின் மருந்து கண்டுபிடிக்கப்பட்டதும் இப்படித்தான்.

அலெக்ஸாண்டர் பிளெமிங்கிடம் உதவியாளராக ஒரு பெண்மணி வேலை பார்த்து வந்தார். ஒருநாள் அந்தப் பெண்மணி ஞாபக மறதியில் ஆய்வு கூடத்தில் வைத்திருந்த உணவை மூட மறந்து சென்று விட்டார்.

மறுநாள் இந்த உணவில் பக்ரீரியா நன்றாக வளர்ந்திருப்பது தெரியவந்தது.



இந்த பக்ரீரியாவை ஆராய்ந்துதான் அலெக்ஸாண்டர் பிளெமிங் பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்தார்.

# யூரோ



☞ யூரோ என்றால் என்ன?

உலகம் முழுவதும் ஒரே பணமதிப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் தொழிற்துறை வளர்ச்சியை மேம்படுத்த முடியும் என்ற காரணத்திற்காக யூரோ என்னும் புதிய நாணயம் ஐரோப்பா கண்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

☞ ஐரோப்பா கண்டத்தில் உள்ள அனைத்து நாடுகளும் 'யூரோ' நாணயத்தை ஏற்றுக் கொண்டுள்ளனவா?

இல்லை. இதுவரை 11 ஐரோப்பிய நாடுகளே இந்த 'யூரோ'வை ஏற்றுக்கொண்டுள்ளன. அவை: ஒஸ்ரியா, பெல்ஜியம், ஃபின்லாந்து, ஃபிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகியவை.

☞ ஐரோப்பாவில் இந்த யூரோ நாணயத்தின் புழக்கம் எப்படி இருக்கிறது?

தற்போது ஒவ்வொரு நாட்டவர்களும் தமது நாட்டு நாணயத்தையே பயன்படுத்தி வருகின்றனர். கம்பனிகள், வங்கிகள் மற்றும் அரசாங்கங்களில் இந்த நாணயம் புழக்கத்தில் இருந்து வருகிறது. இது மக்களின் கரங்களில் சரளமாகப் புழங்க எப்படியும் இன்னும் மூன்று வருடங்கள் ஆகும்.

☞ இந்த யூரோ நாணயத்தால் பயன் உண்டா?

ஆம்.ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் பல நாடுகள் தங்கள் பணத்தை டொலர்களாக மாற்ற விரும்பும். டினார், றியால் போன்ற நாணயங்களாக மாற்ற விரும்புவதில்லை. இதனால் தொழில் துறையில் பணமாற்றத்தில் பல சிக்கல்கள் வரும். இந்த யூரோ வந்த பிறகு இந்தக் கஷ்டங்கள் இல்லாமல் வர்த்தகம் நடைபெறும்.

# மொழியும் எழுத்துக்கள்

சில மொழிகளும் அவற்றில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கைகளும் பின்வருமாறு:

| மொழி | | எழுத்துக்கள் |
|---|---|---|
| தமிழ் | - | 247 |
| ஆங்கிலம் | - | 26 |
| இத்தாலி | - | 20 |
| இலத்தீன் | - | 22 |
| கிரேக்கம் | - | 24 |
| ஜெர்மன் | - | 26 |
| ஃபிரெஞ்ச் | - | 16 |
| ஸ்பானிஷ் | - | 27 |
| அரபி | - | 28 |

தொகுப்பு: எஸ். நித்யஸ்ரீ

# பெயர் வரக் காரணம்



கப்டன் சார்ள்ஸ் போய்கொட் என்பவர் எர்னே என்ற நிலப்பிரபுவின், குத்தகை நிலங்களுக்கு வரி வசூல் செய்யும் பணியில் இருந்தார். இவர் அயர்லாந்து நாட்டின் ஏழை விவசாயிகளிடம் வரி வசூலிக்கச் செல்லும் ஒவ்வொரு முறையும் வெறுங்கையுடன் திரும்பி வந்தார்.

இவரை ஒருவர் விடாமல் எல்லாருமே புறக்கணித்தார்கள். அதன் பிறகு புறக்கணிப்பு என்ற எதிர்ப்புக்கு இவரது பெயரின் பிற்பகுதியான 'போய்கொட்' (BOYCOTT) என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன்.
பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார்.
நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான்.
நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது.
அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர்.
நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான்.
சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார்.
நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.
இந்நிலையில் சாந்தா காணாமல் போகிறாள்.

இனி......

நித்தியன் காரை வேகமாய் விரட்டிக்கொண்டே பக்கத்தில் உட்கார்ந் திருந்த முகுந்தனைப் பார்த்தான்.

"நீ டெலிஃபோனில் சொன்ன தகவலை என்னால் நம்பவே முடியலை முகுந்தன்..."

"எனக்குத் தகவல் வந்தபோதும் அதே உணர்வுதான்."

"இன்னும் கொஞ்ச நேரத்துல அந்தக் குழப்பம் காணாமே போயிடும். விசாலி யார்ங்கிற உண்மையும் தெரிஞ்சிடும்... காரை ரைட்ல கட் பண்ணிக்கோ. மஹாராணி அவென்யூவுக்குப் போற வழி இதுதான்."

நித்தியன் காரை வலது பக்கமாய் ஒடித்து, அந்த கப்பிக்கல் சாலைக்குள் வளைத்தான்.

இரண்டு பக்கமும் மரங்கள் மண்டிய சாலை அது. இருட்டின் கறுப்புப் படுதா பின்னணியில் ஆங்காங்கே சொற்பமாய் மின் விளக்குகள் கண் சிமிட்டின. வெட்ட வெளியில் கட்டடங்கள் தள்ளித்தள்ளி தெரிந்தன.

"முகுந்தன்!"

"ம்..."

"விசாலி போயிருக்கிற அந்த வீட்டுக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?"

"இதோ வந்தாச்சு... அடுத்த கட்ல காரைத் திருப்பிக்கோ..."

கார் திரும்பியது. குண்டும் குழியுமாய் இருந்த சாலையில் தத்தித்தத்தி பயணித்துப் பின் முகுந்தன் காட்டிய ஒரு பழைய பங்களாவுக்கு முன்பாய் வந்து நின்றது.

சுற்றிலும் மரங்கள் அசைந்து கொண்டிருந்த அந்த பங்களாவுக்குள் இருட்டு ரஷ்க் கிடந்தது.

முகுந்தன் காரைவிட்டு முதல் ஆளாய் இறங்கி காம்பௌண்ட் கேட்டை நெருங்கி அதன் தலையின் மேல் கை வைத்துத் தள்ளினான்.

அது சத்தம் காட்டாமல் பின் வாங்கிக் கொண்டு வழிகாட்ட, இருவரும் உள்ளே போனார்கள். போர்டிக்கோவில் ஓர் அம்பாசிடர் கார். இருட்டில் கரைந்து தெரிந்தது.



**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

மூளைக்குள் நியூரான்கள் சந்தோஷம் கொண்டிருந்தது.

"சாந்தா!"

பரவசமாய் அவளுடைய தலையைத் தொட்டான் நித்தியன். குரல் நடுங்க மறுபடியும் கூப்பிட்டான்.

"சா...ந்...தா"

முகுந்தன் நித்தியனின் தோளைத் தொட்டான்.

"நித்தியன்! சாந்தா மயக்கத்துல இருக்கான்னு நினைக்கிறேன். நீ அவளை எழுப்பி சுய நினைவுக்குக் கொண்டுவர முயற்சி பண்ணு. நான் இந்த பங்களாவை ஒரு அலசல் அலசி, விசாலி எங்கே இருக்கான்னு பார்த்துட்டு வந்துடறேன்."

"முகுந்தன்! பத்திரம்."

"கவலைப்படாதே! உன்கிட்ட ரிவால்வர் இருக்கா?"

"இருக்கு."

"அதைக் கொண்டா!"

நித்தியன் தன் இடுப்பைத் தொட்டு அங்கே மறைவாய் இருந்த பிஸ்டலை எடுத்துக் கொடுத்தான்.

முகுந்தன் அதை வாங்கிக்கொண்டு, வெளியேற நித்தியன் மறுபடியும் பதற்றமாய் சாந்தாவின் முகம் அருகே குனிந்தான். கன்னத்தை மெல்லத் தட்டியபடி குரல் கொடுத்தான்.

"சாந்தா..."

"......"

"சா....ந்....தா..."

"......"

எவ்வளவு உசுப்பியும் சாந்தா எழாமல் போகவே, அவளுடைய நாசிக்குப் பக்கத்தில் புறங்கையை வைத்துப் பார்த்தான்.

லேசாய் மூச்சு வந்து கொண்டிருந்தது. மார்புகள் ஸ்லோமோஷனில் ஏறித் தாழ்ந்து கொண்டிருக்க, சாந்தாவின் கண்ணிமைகளில் மெலிதான நடுக்கம்.

எத்தனை முறை கூப்பிட்டும் சாந்தா கண் விழிக்காமல் போகவே, முகுந்தனைப் பார்ப்பதற்காக அறையை விட்டு வெளியே வந்து ஹாலை எட்டிப் பார்த்தான் நித்தியன்.

முகம் மாறி லேசான அதிர்ச்சிக்கு உட்பட்டான்.

முகுந்தன் ஹாலின் நடுவே போடப்பட்டிருந்த சோபாவுக்கு மையமாய் சாய்ந்து கால் மேல் கால் போட்டபடி சிகரெட் ஒன்றை சாவதானமாய் புகைத்துக் கொண்டிருந்தான்.

மடியில் பிஸ்டல்.

# டிசம்பர் பௌர்ணமி

## ★★ 25 ★★

"கார்ல போனது விசாலிதானா?"

"விசாலிதான் நித்தியன்.... சாந்தா காணாமல் போன நிமிஷத்திலிருந்தே, எனக்கு விசாலி மேல் லேசா சந்தேகம் இருந்தது. அதை உன்கிட்டே சொன்னா, நீ ஒத்துக்க மாட்டே... அதனால்தான் நானே எனக்குத் தெரிஞ்ச ஒரு தனியார் டிடெக்டிவ் ஏஜென்ஸியை காண்டாக்ட் பண்ணி விசாலியை க்ளோஸ் அப்ஸர்வ் அண்ட் ஃபாலோ அப் செய்யச் சொன்னேன். அவர்களும் ஒரு நிமிஷம் கூட விடாமே விசாலியோட நடவடிக்கைகளை கண்காணிச்சுக்கிட்டு வந்திருக்காங்க. ஒரு பதினைஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி விசாலி வீட்டை விட்டு வெளியே வந்திருக்கா. வேகமான கார் பயணம். ஏஜென்ஸி ஆட்களும் ஃபாலோ பண்ணிப் போயிருக்காங்க. விசாலியோட கார் பூந்தமல்லி ஹைரோட்டில் இருந்து, உள்ளே தள்ளியிருக்கிற மஹாராணி அவென்யூவுக்குள்ளே போயிருக்கு. ஒரு பழைய கட்டடத்துக்கு முன்னாடி நின்னிருக்கு. விசாலி சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு உள்ளே போய் வாசல் பூட்டைத் திறந்திருக்கா. அந்த விஷயம் எனக்கு உடனே செல்ஃபோனில் தகவலா வந்தது. உனக்கும் அதைப் பற்றி தகவல் கொடுத்துட்டு நான் வானவில் ரெஸ்டாரெண்டுக்கு வந்து வெயிட் பண்ணிட்டிருந்தேன்." முகுந்தன் நீளமாய் பேசி முடிக்க, நித்தியன் ஏறிட்டான் அவனை.

"சாந்தா காணாமே போனதுக்கு விசாலி காரணமாயிருப்பாளா முகுந்தன்?"

"ஏன் காரணமாய் இருக்கக்கூடாது? விசாலி உன்னையே கல்யாணம் பண்ணிக்கணும்ங்கிற ஆசையோடு இருந்தாள். அவளோட ஆசை நிராசையாகக் காரணம் சாந்தா. சாந்தா பேர்ல நேரடியா வெறுப்பு காட்ட முடியாது. ஸோ அது மாதிரியான ஒரு அண்டர்கிரௌண்ட்-வேலை பண்ணியிருக்கலாம். இல்லேன்னா இந்த நேரங்கெட்ட இராத்திரி வேளையில் வீட்டை விட்டு கிளம்பி ஒதுக்குப்புறமா இருக்கிற ஒரு வீட்டுக்குப் போவானேன்?"

"எனக்கு ஒரே குழப்பமா இருக்கு முகுந்தன்."

காரைச் சுற்றிக் கொண்டு போர்டிக்கோ படிகளுக்கு வந்தார்கள். முகுந்தன் படிகளில் உயர்ந்து கதவின் மேல் கையை வைத்து மெல்லத் தள்ளிப் பார்த்தான்.

கதவு எதிர்ப்பைக் காட்டாமல் திறந்து கொண்டது.

உள்ளே பார்வை போக... ஹால் முழுவதும் இருட்டு. அந்த இருட்டைக் கழுவும் முயற்சியில் ஹாலின் மூலைச்சுவரில் அப்பியிருந்த ஒரு ஜீரோ வாட் பல்பு மினுக்கிக் கொண்டிருந்தது.

நித்தியன் கிசுகிசுத்தான்.

"என்ன முகுந்தன்... வீடு இப்படித் திறந்து போட்டு கிடக்கு. வீட்ல யாரும் இருக்கிற மாதிரியும் தெரியலை. விசாலி இந்த வீட்டுக்குள்ளதான் நுழைஞ்சாளா?"

"ஆமா..."

"அப்படீன்னா அவ எங்கே?"

"ஒவ்வொரு ரூமா புகுந்து பார்க்கலாம்."

சொன்ன முகுந்தன் ஹாலை ஒட்டியிருந்த முதல் அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

அறையில் யாரும் இல்லை.

இரண்டாவது அறை.

வெறுமை.

மூன்றாவது அறை தட்டுமுட்டுச் சாமான்களால் மூச்சை அடைக்கிற அளவுக்கு நிரம்பியிருந்தது.

ஹாலின் கோடியில் இருந்த கடைசி அறைக்கு வந்தார்கள். வெளிப்பக்கம் தாழ் போட்டிருந்த கதவைத் திறக்க உள்ளே நீல நிற ஜீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் ஒரு கட்டிலும் கட்டிலின் மேல் யாரோ படுத்து இருப்பதும் தெரிந்தது.

நித்தியன் திகைப்பாய் முகுந்தனைப் பார்த்தான் "யார் அது?"

"தெரியலை... பக்கத்தில் போய் பார்ப்போம்."

மெதுவாய் நடைபோட்டுப் பக்கத்தில் போனார்கள்.

போர்வையால் போர்த்தப்பட்ட உருவம். அப்போது பெண் என்று தெரிய நித்தியன் ஆர்வம் தாங்காமல் குனிந்து அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தான்.

ஹாலின் வாசல் பக்கம் கதவு இப்போது இறுக்கமாய் சாத்தப்பட்டிருந்தது.

நித்தியனைப் பார்த்ததும் முகுந்தன் புகை கசியும் வாயோடு புன்னகைத்தான். சன்னமான குரலில் கேட்டான்.

"என்ன நித்தியன்... சாந்தா கண் முழிச்சுப் பார்க்க இன்னும் நாலு மணிநேரம் இருக்கு. இப்போ அவ உடம்பை நெருப்பே சுட்டாலும் சரி வலி தெரியாது. ஸெடட்டிவ் மருந்து நாலைஞ்சு டோஸ் உள்ளே போயிருக்கு."

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

முகுந்தன் பேசிக்கொண்டே போக அவனைப் பயமாய்ப் பார்த்தான் நித்தியன்.

பொலிஸ் ஸ்டேஷன். இன்ஸ்பெக்டர் குமரன் நிலைகொள்ளாமல் நடைபோட்டுக் கொண்டிருக்க எதிரே சப்-இன்ஸ்பெக்டர் ஜோசப். குமரன் புலம்பினார்.

"இந்த இராத்திரி நேரத்துல நித்தியன் யாரைப் பார்க்கறதுக்காக, காரை எடுத்துக்கிட்டு போனான்னு தெரியலையே! கையில துப்பாக்கியை வேற எடுத்துக்கிட்டு போயிருக்கான், நாளைக்கு பொழுது விடியும்போது என்ன ஷாக் நியூஸ் கிடைக்குமோ தெரியலை."

"ஸார்.... நித்தியன் பயணம் பண்ணினது மாருதி கார்தானே?"

"ஆமா"

"டிராஃபிக் கண்ட்ரோல்ஸுக்கு தகவல் கொடுத்தீங்களா ஸார்?"

"தகவல் கொடுத்தேன். பட், அவங்களால ட்ரேஸ் பண்ண முடியலை. கார் அதுக்குள்ள போக வேண்டிய இடம் போய் சேர்ந்து இருக்கணும்."

"இப்ப என்ன சார் பண்றது?"

"புரியலை... பட், ஒரு விஷயம் நிச்சயம். நாளைக்குக் காலையில் நான் ஸ்டேஷனுக்கு வரும்போது நமக்காக ஒரு மோசமான செய்தி டெலிஃபோன்ல காத்திட்டிருக்கும்!"

(பௌர்ணமி தொடரும்)

**நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்**

# என் கதை

ஒருநாள் என் மாமியார் என்னிடம், "நீ இல்லாதபோது இந்த மீனா ஏன் வீட்டுக்கு வர்றா? 'ஃபோன் பண்ணணும்'னு சொல்றா. இந்த மகாலிங்கபுரத்தில வேற எங்கேயும் ஃபோன் இல்லையா?" என்றார்.

"ஏம்மா, என்ன ப்ராப்ளம்?"

"ஒண்ணும் இல்ல... ஃபோன் பண்ணணும்னு வந்துட்டு, மாடியில போயி உக்காந்து மணிக்கணக்கா உன் புருஷனோட பேசறா. எனக்கு ஒண்ணுமே புரியல்ல!" என்றார்.

உடனே நான், "இங்க பாருங்க... முதல்ல அவர் உங்க பையன். உங்களுக்கு இல்லாத உரிமையா? அவங்க பேசிக்கிறத வச்சு தப்பா சொல்லமுடியாது; நான் சந்தேகிக்கவும் முடியாது. நான் கேட்கவும் மாட்டேன். உங்க பிள்ளை என்னை ஒரு மனைவியா மதிச்சே ரொம்ப நாளாச்சு. நீங்க வேணும்னா கேளுங்க. ஏன்னா இது உங்க வீடு. நீங்க உங்க பிள்ளைய கண்டிக்கலாம். அந்தப் பொண்ணு ஒரு ஆதரவும் இல்லாம பிள்ளையோட வந்து நிக்கிறா. ஒருவேளை நாம சந்தேகப்படற மாதிரி உறவு இல்லேன்னா, நான் அசிங்கப் பட்டுப்போயிடுவேன்!" என்றேன்.

"நான் கேட்கத்தான் போறேன்!" என்றார் என் மாமியார்.

நான் வழக்கம்போல படப்பிடிப்புக்குச் சென்று விட்டேன். மாமியார் மூலமாக உண்மை தெரியும் என்று காத்திருந்தேன். ஆனால் அதற்குப் பிறகு அதைப் பற்றி பேச்சே எழவில்லை. வீட்டில் எல்லோரும் மௌனமானார்கள்.

'எந்தவித ஆதாரமும் இல்லாமல் இந்தப் பெண்ணிடம் கேட்கக்கூடாது' என்ற முடிவில் இருந்த நான், படப்பிடிப்பில் பிஸியாக இருந்தேன். ஒருநாள் என் வீட்டு டிரஸ்ஸிங் டேபிளில் 'அதை'ப் பார்த்தேன். அவருக்குப் புகைப்படம் எடுப்பது ஹாபி. நான் பார்த்தது ஒரு ஃபிலிம் நெகட்டிவ் ரோல்.

அந்த ரோலில் ஒரு குழந்தை, ஒரு ஆண், பெண் மூவரும் பிக்னிக் போன படங்கள். என்னுடைய பென்ஸ்காரும் இருந்தது. அந்த ஆண் என் கணவர். அதிலிருந்த பெண் மீனா மாதிரி இருந்தது. ஆனால் என்னால்உறுதி செய்ய முடியவில்லை. அந்தக் குழந்தை நவீன் என்பது மட்டும் தெரிந்தது.

மேலும், ஒரு நெகட்டிவை வைத்துக் கொண்டு எதையும் எடைபோட முடியாது. மீனாவின் குழந்தை, லட்சுமியின் குழந்தை, எதிர்வீட்டில் இருந்த ஒரு மலையாளத் தயாரிப்பாளரின் குழந்தைகள் எல்லோரும் ஒன்றாகவே விளையாடுவார்கள். நான் படப்பிடிப்புக்கு போயிருந்த சமயத்தில் எல்லோரும் ஒன்றாக பிக்னிக்கூட போயிருக்கலாம. அதனால் யார் மீதும் சந்தேகப்படக்கூடாது என்கிற முடிவில் இருந்தேன்.

பார்ட்டி விஷயத்துக்கு வருகிறேன். அன்று வழக்கத்திற்கு மாறாக என் கணவர், தன் கையில் இருந்த காமிராவை என்னிடம் கொடுத்தார். மீனாவின் குழந்தை நவீனை பல விதமான போஸ்களில் படம் எடுக்கச் சொன்னார். எனக்கும் அந்தக் குழந்தையை மிகவும்பிடிக்கும். பலநாள் அந்தக் குழந்தையை பராமரித்திருக்கிறேன். அதனால் படமெடுத்தேன்.

பார்ட்டி முடிந்தது. எல்லோரும் விடை பெறுகிற நேரம். மீனா குழந்தையோடு கிளம்பத் தயாரானார். குழந்தை என் கணவரைக் காட்டி, "அங்கிள் இன்னிக்கு வீட்டுக்கு வர மாட்டாரா?" என்று கேட்டது. எனக்குத் தலை சுற்றியது. அது சினிமா காட்சி மாதிரியே இருந்தது. தெய்வத்துக்குச் சமமான குழந்தை என் சந்தேகத்தை தெளிவாக்கும் சாட்சியம் மாதிரிக் கேட்டது.

இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. அந்தப் பிஞ்சுக் குழந்தையின் 'பஞ்ச்'சான கேள்வி, ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. நிலைமையைப் புரிந்துகொண்ட அமலா, லட்சுமியின் தங்கை ப்ரியாவுடன் உள்ளே சென்றுவிட்டாள். நான் உடைந்து போனேன். எந்த நிமிடமும் அழுகிற சூழ்நிலை. நான் அப்படியே உட்கார்ந்தேன். யார் என்மௌனத்தைக் கலைப்பது என்பது புரியாத அமைதி.

வெகுளித்தனமாக லட்சமிதான் ஆரம்பித்தாள்.

"பாவம்க்கா, இந்த நவீனுக்குத்தான் உங்கள் மேலயும், ஜார்ஜ் அங்கிள் மேலயும் எவ்வளவு இஷ்டம். பேசாம நீங்க நவீனையே தத்தெடுத்துக்குங்களேன்!"

அவ்வளவுதான்.

எனக்கு என்ன ஆயிற்று என்று எனக்கே தெரியாது. உள்ளே தூங்கிக் கொண்டிருந்த எரிமலை வெடித்தது!

"இத்தனை நாள் நான் பேசாம இருந்தேன். ஏன்? மூணு வாட்டி நான் அபார்ஷன் பண்ணிக்கிட்டேன். யாருக்காக? அவரையே கேளுங்க.

யாருக்காக என் குழந்தைகளை எல்லாம் தியாகம் பண்ணினேன்? இவருக்காகத் தானே?". என வெடித்தேன். நான் இப்படிப் பேசுவேன் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

'தாய்மை' நிராகரிக்கப்பட்ட என் வேதனையைக் கொட்டித் தீர்த்தேன். எப்படி என் வீடுவந்து சேர்ந்தேன் என்பது எனக்கே தெரியாது. தாம்பத்ய வாழ்க்கையின் விரிசல் அந்த இரவில் துவங்கியது. பிரச் சனைக்குரிய அந்த இரவுக்குப்பின், அந்த தாம்பத்ய வாழ்க்கை விடியவேயில்லை.

வீட்டிற்கு வந்து, யோசித்துப் பார்த்த போதுதான், 'நானா இப்படிப் பேசினேன்?' என்கிற கேள்வி எனக்குள்ளேயே எழுந்தது. நான் என்ன பேசினேன். சுற்றிலும் யார் இருந்தார்கள் என்பதுகூட சில நிமிடங் கள் எனக்கு மறந்தே போனது.

'என்னால் தாய்மை அடைய முடியாது... என் இயலாமை என்கிற மாதிரி லட்சுமி சுட்டிக்காட்டிப் பேசினாள். அது வல்ல காரணம். நான் வறண்டவள் அல்ல. என்னாலும் வளமான கருவைத் தரிக்க முடியும். 'உருவானது; அது என் கணவனால் நசுக்கப்பட்டது, என்பதைச் சொல்லியாக வேண்டிய வெறியில் பேசினேன். அந்தக் கோபத்தில் என் கணவருக்கும், மீனா மேனனுக்கும் இருந்த உறவையும் சுட்டிக் காட்டிவிட்டுத்தான் வெளியே வந்தேன்.

"இந்தக் குழந்தையை தத்து எடுத்துக்கிட்டா பசுவையும், கன்றையும் சேத்துல்ல ஒட்டிக்கிட்டு வரணும்" என்றேன். நான் இப்படிப் பேசுவேன் என்பதை என் கணவர் ஜார்ஜ் எதிர்பார்க்கவில்லை. கோபத்தில் கொதித்தார். "நீயும் லட்சுமியும் சேர்ந்து திட்டமிட்டு என்னை அவமானப்படுத்துறீங்களா?" என்று ஆவேசமாகக் கூச்சல் போட்டார்.



**ஸ்ரீவித்யா**

"நான் அவமானப்படுத்த ப்ளான் பண்ணதாகவே வெச்சுக்குங்க. ஆனா, அந்தக் குழந்தை எப்படிங்க பொய் சொல்லும்? அதுக்கு ப்ளான் பண்ணத் தெரியுமா?" என்றும் அப்போது கொதித்தேன்.

நான் என் வீட்டில் என் படுக்கையறையில் இருக்கிறேன் என்பதை உணரவே வெகுநேரம் ஆயிற்று. சிறிது நேரத்தில் என் கணவரும் வந்தார். வந்தவுடனேயே ஆரம்பித்தார்... "எதற்காக என்னை அவமானப்படுத்தறே?" என்றார்.

"என் நோக்கம் அது இல்லை... இன்னைக்கு உங்கள நான் நேரடியாகவே கேக்கறேன்! உங்களுக்கும், மீனாவுக்கும் என்ன தொடர்பு? அந்தக் குழந்தை அந்த அளவுக்கு சுட்டிக் காட்டுதுன்னா, அதுல ஏதோ இருக்கு. என் வாழ்க்கையிலிருந்து எல்லாமே போயிடுச்சா? இன்னிக்காவது உண்மையைச் சொல்லுங்க. உங்களுக்காக என் ஜாதி, மதம், எங்க அப்பா, அம்மா, அம்மாவுடைய புகழ் எல்லாத்தையும் உதறித் தள்ளிவிட்டு உங்க பின்னாடி ஓடி வந்திருக்கேன். ஒரு முட்டாள் மாதிரி இனிமேலும் பணம் சம்பாதிச்சுக் கொடுக்கிற மிஷினா இருக்க நான் தயாராயில்லை...

நாம எப்படித் திருமணம் பண்ணிக்கிட்டோம்கிறத யோசிச்சுப் பாருங்க... அன்னிக்கு தேதியில உங்க கையில நாலாயிரம் ரூபாயும், எங்கிட்ட ஆயிரம் ரூபாயும்தான் இருந்தது. இந்தப் பணத்துலதான் நம்ம கல்யாணமே நடந்தது. அதுக்குப் பிறகு தான் கடவுள் இந்தப் பணத்தையும், எனக்கு சினிமாவுல மறுபடி புகழையும் கொடுத்தாரு. நீங்க அதை நல்லா பயன்படுத்திக்கிட்டீங்க. 'முதல் குழந்தையை அழிச்சிடாதீங்க'ன்னு உங்ககிட்ட எவ்ளோ தூரம் கால்ல விழுந்து கெஞ்சினேன்."

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மிச்சம்

## 26

கையிலிருந்த ட்ரேயால் கதவு திறந்தவனை 'மொடேர்' என்று அடித்தான். அவன் ஓரடி பின்வாங்க உள்ளே நுழைந்து, இரண்டு கைகளையும் பயன்படுத்தி அவனைத் தாக்கினான். இருவரும் கட்டிப் புரண்டு பூ ஜாடி, தண்ணீர் கூஜா, டேபிள் லாம்ப் எல்லாம் கவிழ்ந்து கைகலப்பு முடிவுக்கு வந்தபோது பேரர் ஜெயித்திருந்தான். அந்த ஆளை பெட்ஷீட் வைத்து கட்டினான்.

கட்டிலுக்கடியிலிருந்து அரவிந்தை விடுவித்து, "யார் சார் இது? பொலிஸைக் கூப்பிடுகிறேன்!" என்றான்.

அரவிந்த் தன் உடைகளை மேலாகச் சரி செய்து கொண்டான்.

"அமைச்சருக்கு ஹெலிகாப்டர் ஓட்ட நான் ஓட வேண்டும். உங்கள் ரூம் சர்வீஸிற்கு என் மனமார்ந்த நன்றிகள்...!" என்று பேரரிடம் நூறு ரூபாயைத் திணித்தான்.

"சார், உங்கள் லஸ்ஸி கொட்டி விட்டது!"

"பரவாயில்லை. அடுத்த முறை சாப்பிடுகிறேன். இந்த விஷயத்தைப் பெரிது படுத்தாமல் விட்டு விடு!" வெளியில் பாய்ந்து, காத்திருந்த காரில் சீறி தாமதமாக ஹெலிகாப்டரை அடைந்து...

ஆனால் அவன் எதிர்பாராத புதுத் திருப்பம். ஹேம்நாத்! ஹெலிகாப்டரை அவர் ஏன் கடத்த முயற்சி செய்தார்? எதிர்ப்பவர்கள் தலையை இரக்கமில்லாமல் சீவித் தள்ளுகிறவர் என்று பிரகாஷ்குப்தாவைப் பற்றி அவன் கேள்விப்பட்டது உண்மை தான் என்பது போல ஹேம்நாத்

"அரைமிருட்டும் பட்டாசு வெளிச்சங்களும் சதி செய்து உங்கள் ஆட்களை ஏமாற்றி விட்டன."

"இதோ பார் ஹெலிகாப்டரை கீழே இறக்கு... நாம் பேசி ஒரு சமரசத்திற்கு வருவோம். இடிக்கப்பட்ட வீடுகளுக்கு அதிகப்பணம் தரச் சொல்கிறேன். உனக்குக் கூடுதலாக பத்து இலட்சம் தருகிறேன்!" பிரகாஷ்குப்தா உலர்ந்த உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டார்.

"ஹெலிகாப்டரை இறக்குவதா? நான் ஏற்கனவே லேட். திறப்பு விழாவிற்கு முன்னதாகவே உங்களைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்பதுதான் எங்கள் திட்டம்... பாழாய்ப் போன பிளாக்அவுட் வந்து என்னைச் சாய்த்து விட்டது.

அரவிந்தை ஹோட்டலில் அடித்துப் போட்டு விட்டு, அவன் இடத்திற்கு நான் மாறுவதாக திட்டம். அவனை அடித்துப் போட்டாயிற்று என்று எனக்கு இண்டர்காமில் தகவல் வந்ததும் என் இரத்த ஓட்டம் வேகம் பிடித்தது. அதிகம் உணர்ச்சி வசப்பட்டதாலோ என்னவோ கதவுத் தாழ்ப்பாளில் என் கை வைத்த நேரம் 'கிர்ர்' என்று தலை சுற்றி நான் பிளாக்அவுட் ஆகிவிட்டேன்.

பதறினேன். என்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட பணியை என் அஜாக்கிரதையால் தவற விட்டதற்காக, தேவந்திரனிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டேன்.

வெளியே வந்து பார்த்தபோது பைலட்டை அழைத்துப் போக வேண்டிய கார் புறப்பட்டுப் போயிருந்தது. அதில் அரவிந்த் ஏறிப் போனான் என்று தகவல் கிடைத்தது. அரசாங்கக் காரில் வந்தவர்கள் அரவிந்தை அவன் அறையில் கண்டெடுத்து கூட்டிப் போயிருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

எல்லாம் என் கை மீறிப்போய்விட்டது என்று தேவேந்திரன் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கத்தான், ஒரு வாடகைக்கார் எடுத்து ஓடக்கரைக்கு வந்தேன். உங்கள் பேச்சைக் கேட்டபோது தான் நடுவானில் ஹேம்நாத் உங்களைக் கடத்த முற்பட்டதும், அரவிந்த் சுடப்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போனதும் தெரிந்தது... இதோ இன்னொரு கடைசி வாய்ப்பு தவற விடக்கூடாது என்று மறுபடியும் அரவிந்தாக பிரவேசித்தேன்.

அப்படியே மாட்டினாலும் அதிக பட்சம் உயிர்போகும். போகட்டுமே! இந்த மண்ணுக்காக என் உயிர் போகட்டுமே. நீங்கள் என்னடாவென்றால் கரன்ஸி காட்டி பேரம் பேசுகிறீர்கள்!"



"வேண்டாம்! வேண்டாம்!" என்று பதறினான் அரவிந்த்.

அரவிந்தைப் பொறுத்தவரை அவனை அடித்துப் போட்டவர்கள் விக்ரமின் ஆட்கள். விக்ரமை மறுபடி பொலிஸில் மாட்டி வேடிக்கை பார்க்க அரவிந்தின் மனம் இடம் தரவில்லை.

"சார்..!" என்று பேரர் கவலைப்பட்டான். "நீங்கள் என்ன இவனை சும்மா விட்டு விடச் சொல்கிறீர்களா?"

"இவன் வெறும் அம்பு! இவனை எய்தவன் டில்லியில் இருக்கிறான். இவன் என்ன செய்வான்? பாவம்... நான்தான் உங்கள் தயவால் தப்பி விட்டேனே... இவன் எனக்குத் தெரிந்தவன். இவனை பொலிஸில் ஒப்படைக்க வேண்டாம். ஆனால் நான் போன பின், நான்கு தர்ம அடி போட்டு அனுப்பிவிடுங்கள் போதும்."

பின் பெட்ஷீட்டால் கட்டப்பட்டுக் கீழே உருண்டு கிடந்தவனை கன்னத்தில் செல்லமாகத் தட்டினான்.

"போ... போய் விக்ரமிடம் சொல். குழந்தைத்தனமான இந்த விளையாட்டுக்கள் அபத்தமானவை என்று. எனக்கு இப்போதும் அவன் பேரில் கோபம் வரவில்லை என்று சொல்!"

பேசினாரே, எங்கே கடத்திப் போகப் பார்த்தார்? யாருக்காக? விடைகள் தெரியும் முன், அவன் ஆஸ்பத்திரியில்.

கண்கள் களைப்புடன் தாமதமாக மூடின. ஜ்யோதி மிதந்தாள்.

'அரவிந்த். கண்ணைத் திறடா. என்னைப் பாருடா. ஒரே ஒரு ஜில்ஜிட்டா. ப்ளீஸ்... உன் இந்த மூஞ்சி எவ்வளவு அழகாயிருக்கிறது தெரியுமா...? ஐ லவ் யூடா..." மேலே சுற்றுவது ஆஸ்பத்திரி விசிறியா? இல்லை ஹெலிகாப்டர் விசிறியா? 'அமைச்சர் சார், இதோ வந்துவிட்டேன். ஜ்யோதி கூப்பிடுகிறாள். ஒரே ஒரு ஜில்ஜிட்டா.' அரவிந்த் கனவுக்குள் கனவாக கரைந்து கொண்டிருந்த அதே தருணத்தில்...

ஹெலிகாப்டரின் சாக்பிட்டில் ஷிவா வியர்த்திருந்தான்.

"இப்போது பார்த்தால்தான் எனக்குத் தெரிகிறது. நீ அரவிந்த் இல்லை. தலைமுடி சற்று மாறியிருக்கிறது. கைகளின் நீளம் சற்று மாறியிருக்கிறது..." என்றார் பிரகாஷ் குப்தா.

"எப்படி ,செக்யூரிட்டி ஏற்பாடுகளைத் தாண்டி உன்னை அனுமதித்தார்கள்?" என்றார் கோபமாக.

"அது என் அதிஷ்டம்!" என்றான் ஷிவா.

**சுபா**

மறுபடி கண் விழித்தபோது நாற்பத்தைந்து நிமிடங்கள் கரைந்து போயிருந்தன.

"இதோ பார்!" பிரகாஷ் குப்தா கலங்கியிருந்தார்.

"உனக்கு வேண்டுமானால் உன் உயிர் பெரிதாகத் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு என் உயிர் வேண்டும். இந்தக் காவலர்களுக்கு, அவர்கள் உயிர் வேண்டும்."

"நீங்கள் நினைப்பது போல் இவர்களுக்கு ஆபத்து ஒன்றுமில்லை. இவர்கள் இருவரும் இப்போது வெளியே குதிக்கப் போகிறார்கள். பாரசூட்களை அணிந்து கொண்டு. நான் மிரட்டிக் குதிக்க வைத்ததாக சொல்லித் தப்பி விடுவார்கள். ஹெலிகாப்டரில் கடைசி வரை பயணம் செய்யப்போவது நானும் நீங்களும் மட்டும்தான்."

ஷிவா காவலர்களின் துப்பாக்கிகளைத் தூக்கி ஹெலிகாப்டருக்கு வெளியே எறிந்தான்.

பாரசூட் அணிந்து அவர்கள் குதிக்கத் தயாரானார்கள்.

பிரகாஷ்குப்தா கடைசி முயற்சியாக அவர்கள் மீது பாய்ந்தார். ஷிவா கையை வீசினான். அந்த வீச்சின் பின்னே அவனுடைய அத்தனை ஆற்றாமையும் இருந்தது.

பிரகாஷ்குப்தா மல்லாந்து விழுந்தார்.

காவலர்கள் பத்திரமாகக் குதித்தனர்.

ஷிவா ஹெலிகாப்டருக்கு வெளியே பார்த்தான்.

அமைச்சருக்காகக் கூடியிருந்த கூட்டம் இருட்டில் கலையத் துவங்கி விட்டது.

*அம்மா, இந்தக் கூட்டத்தில் நீ எங்கே இருக்கிறாய்? தாய்ப்பாலுடன், தர்மத்தையும், வீரத்தையும் சேர்த்து எனக்கு ஊட்டி வளர்த்தவளே, உனக்கு என் நமஸ்காரங்கள்.*

*நர்மதா என் செல்லக்குட்டி, நான் இங்கே இருப்பது உனக்குத் தெரியுமா?*

*காதலுடன் அன்பையும், பாசத்தையும் கலந்து கொடுத்தவளே, உனக்கு என் முத்தங்கள்.*

*தேவ், என் ஆருயிர் தேவ். நீ என்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறாயா?*

*நட்போடு சேர்த்து நாட்டுப் பற்றையும், தன்னலமற்ற துணிச்சலையும் எனக்குள் விதைத்தவனே, உனக்கு என் வந்தனங்கள்.*

*என் இனிய ஓடக்கரை மண்ணே, கருப்பையில் சுமந்த தாய் போல என்னைக் கருணையோடு சுமந்த பூமியே, உனக்கு என் உயிர் சமர்ப்பணம்.*

*இனி உன் ஒவ்வொரு மண் துளியிலும் என் மூச்சு எதிரொலிக்கட்டும்.*

மலைக் குகையை ஒட்டியிருந்த பாறைகளை நோக்கி, ஹெலிகாப்டரின் திசையைத் திருப்பினான் ஷிவா.

(ㅇ–முற்றும்–ㅇ)


**விரைவில் முரசில் அசத்தலான தொடர் ஆரம்பம்!**

**விபரங்கள் அடுத்த முரசில்**


---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

## 07

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கண்ணதாசன்~

'2'ங்களைப் பார்க்க அடிக்கடி வந்ததில்தான் அவனுக்குத் தைரியம் வந்துவிட்டது' என்று நளாயினி சொல்லவில்லை.

"நான் ஊரில் ஒரு பெரிய மனிதன், ஞாபகம் வைத்துக்கொள்!" என்றார் தங்கசாமி.

'பெரிய மனிதர்களின் வீடுகளிலே தான் சிறிய விஷயங்கள் நடைபெறும்' என்று நளாயினி சொல்லவில்லை.

திடீரென்று டெலி;போன் அடித்தது. கட்சி அலுவலகத்தில் இருந்து நிர்வாகி பேசினார்.

"நமது கட்சி செயற்குழுவைக் கூட்டும்படி நமது மாபெரும் தலைவர் சந்திர சூரியன் உத்திரவிட்டிருக்கிறார். துணைத் தலைவர் என்ற முறையில் அழைப்பிதழில் உங்கள் கையெழுத்து வேண்டும். நான் வந்து வாங்கிக்கொள்ளட்டுமா....?" என்று கேட்டார் நிர்வாகி.

"கையெழுத்தென்னய்யா, கையெழுத்து? எல்லாம் நாமே பொறுக்கிப் போட்ட பயல்கள்தானே? நீயே கையெழுத்துப் போடு!" என்றார் தங்கசாமி.

"உங்கள் கையெழுத்து மாதிரியா.....?" என்று கேட்டார் நிர்வாகி.

"இல்லையய்யா. உன் கையெழுத்துத்தான்!" என்றார் தங்கசாமி.

டெலி;போனைக் கீழே வைத்தார்.

மறுபடியும் மணியடித்தது.

"நான் மாதவி பேசுகிறேன், விமான நிலையத்தில் இருந்து. நான் பெங்களுருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அங்கே என் தோழி ஒருத்திக்குத் திருமணம். வெள்ளிக் கிழமை வந்து விடுவேன்!"-

பதிலே பேசவில்லை தங்கசாமி.

பழையபடியும் டெலி;போன் மணியடித்தது.

"என்ன பிரதர், என் லைசென்ஸ் விஷயம் என்னாச்சு?"

"லைசென்சு மண்ணாங்கட்டி! வைய்யா ;போனை கீழே!" என்று ரிசீவரை டக்கென்று வைத்த தங்கசாமி, பிறகு ரிசீவரை தனியாக எடுத்துக் கீழே வைத்தார்.

டெலி;போன் மீது ரிசீவர் இருந்தால் தானே மணியடிக்கும்?

தங்கசாமி கடவுள் நம்பிக்கை இல்லாதவர். 'எல்லாமே மனிதனாலே முடியும்' என்று நம்புவார்.

இப்போது அவருக்கு ஒரு உண்மை புரிந்தது. 'எல்லாமே மனிதனால் முடியும். மைத்துனியை அடக்குவதைத் தவிர!' என்பதே அது.

காலிங் பெல் அடித்தது.

கட்சிச் செயலாளர்களில் ஒருவர் மேலே வந்தார்.

மாபெரும் தலைவர் கையோடு அழைத்து வரச்சொன்னதாகச் சொன்னார்.

"என்னய்யா, மனிதன் கையில்லாமலா வருவான்...?" என்று எரிந்து விழுந்தார் தங்கசாமி.

சட்டையை எடுத்து மாட்டினார்.

மாபெரும் மக்கள் தலைவரும், அதிக பணம் வாங்கும் நடிகரும், தத்துவ ஞானியும், பாரி வள்ளல் போட்ட விதையிலே பாரில் அவதாரம் எடுத்தவருமான தலைவர் சந்திர சூரியன் இல்லத்தை நோக்கி விரைந்தார்.

நடிகர் சந்திரசூரியன் கர்நாடகத்தில் பிறந்தவர். ஏழு வயதிலேயே நாடக நடிகராகத் தமிழகத்தில் குடியேறியவர்.

அந்த நாளில் அவர் இளைஞராக இருந்தபோது ஆள் வாட்டசாட்டமாக அழகாக இருப்பார். பாய்ஸ் கம்பெனியில் கிருஷ்ணன் வேஷம் போட்டால் பார்க்க வந்திருப்பவர்களெல்லாம் கையெடுத்துக் கும்பிடுவார்கள்.

ஏழைத் தாய்க்கு மகனாகப் பிறந்த அவர், ஏழு வயதிலிருந்தே தான் சம்பாதித்து தாயைக் காப்பாற்ற வேண்டியவராக இருந்தார்.

அந்நாளில் நாடகங்கள் இரவு ஒரு மணி வரை நடக்கும்.

நடிக்கின்ற பையன்கள் படிக்கின்ற படிப்பே நாடக வசனம்தான்.

மாதம் பூராவும் கத்தி முடித்த பிறகு, கையில் கிடைக்கும் சம்பளம் ஐந்து ரூபாய்!

அளந்து போடும் சாப்பாடு; அதற்கு மேலே கிடையாது



சந்திரசூரியன் போடாத வேஷம்இல்லை. தர்மன் வேஷமும் போட்டிருக்கிறார்; துரியோதனன் வேஷமும் போட்டிருக்கிறார்; கிருஷ்ணன் வேஷமும் போட்டிருக்கிறார்.

ஆகவே இரட்டை வேஷம் போடுவதென்பது அவர் பின்னாளில் கற்றுக் கொண்டதல்ல; வளரும் போதே விழுந்த உரம்.

நாடகத்தில் இருந்து அவர் சினிமாவுக்குத் தாவியபோது படத்துக்கு நானூறு ரூபாய் என்றுதான் வாழ்க்கை ஆரம்பமாயிற்று.

அப்போது முண்டி முண்டிப் பார்த்தும் அவர் வாழ்க்கையில் முன்னேற முடியவில்லை.

கையிலே ஜெபமாலை, கழுத்திலே ருத்திராட்ச மாலை, நெற்றியில் விபூதி, குங்குமம்- இளம் பருவத்து பக்தகோடியாக அவர் காட்சியளித்தார்.

அப்போதும் மாதரார் ஆசை அவரை மயக்கி இழுக்கும். மனது பயந்து கை கால் நடுங்கும்.

ஆள் அழகாக இருந்தாலும் அந்நாளில் அவரை விரும்பிய பெண்கள் அதிகமாக இல்லை.

முகத்திலே பாவம் வராவிட்டாலும் நடிப்பிலே ஒரு துடிதுடிப்பிருக்கும்.

இருந்தும் பயன் என்ன?

தொழிலிலே முன்னேற முடியவில்லை.

அவர் சங்கீதக் களஞ்சியமாக இருந்தால், அவருக்கென்று ஒர் இரசிகர் கூட்டம் இருக்கும்.

இரண்டும் இல்லாத நடிப்புத் திறமை இருந்தால், ஏதாவது ஒரு கூட்டம் சேர்ந்து விடும்.

இரண்டும் இல்லாத காரணத்தால் தனக்கென்று ஒரு கூட்டத்தை அவரே தேடிப்பிடிக்க விரும்பினார்.

தான் பேசும் கூட்டத்துக்கு ஆள் வராவிட்டால், ஆள் இருக்கும் இடத்தில் மேடையைப் போட்டுக் கொள்ளும் அரசியல்வாதிகளை அவர் கூர்ந்து கவனித்தார்.

ஏதாவது ஒரு முத்திரையைப் போட்டுக் கொண்டால்தான் தன் எதிர்காலம் பத்திரமாக இருக்கும் என்று நம்பினார்.

அன்னை பராசக்தியின் அருளால் அவருக்கு அரசியலில் சில நண்பர்கள் கிடைத்தார்கள்.

கிடைத்த நண்பர்களோ இங்கர்சாலின் மாப்பிள்ளைகள்; கார்ல் மார்க்ஸின் பேரப்பிள்ளைகள்.

நடிகர் சந்திரசூரியனோ சிறந்த பக்திமான்.

தத்துவ ரீதியாக அவர்கள் உறவு ஒத்துவராதே?

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

விமானத்தில் வந்து இறங்கிய கோபிக்குச் சின்ன ஏமாற்றம். அகிலா ஏர்போர்ட்டுக்கு வரவில்லை.

டாக்ஸி பிடித்துக் கிளம்பினான். நேராய் அகிலாவின் வீட்டுக்குத்தான் போக வேண்டும்.

# அழகு



**தனபால்**

அகிலா பிரமாதமான அழகி. தூரத்துச் சொந்த மும்கூட. இருவருக்கும் காதல் மலர்ந்தபோது இரு குடும்பங்களிலும் எந்த எதிர்ப்புமில்லை. கோபி கம்பெனி பயிற்சிக்காக வெளிநாடு போனான். திரும்பி வந்ததும் திருமணம் என்று தீர்மானித்திருந்தார்கள்....

"ஹாய் அகிலா....!" உற்சாகமாய் குரல் கொடுத்தபடி வந்த கோபி திடுக்கிட்டான்.

'அகிலாவா இவள்? முகமெல்லாம் தீப்பட்ட தழும்புகளுடன்....'

"என்ன ஆச்சு அகிலா...?"

அகிலா கண்ணீருடன் விம்மினாள். "ஒரு நாள் கிச்சன்லே ஸ்டவ் வெடிச்சு...!" அழுகையுடன் தனக்கு நேர்ந்த விபத்தை விவரித்தாள்.

கோபி மௌனமாய்க் கேட்டுக் கொண்டான். அகிலா சொன்னாள்,

"கோபி, வரும் தைமாசமே நம்ம கல்யாணத்தை நடத்திடலாம்னு அப்பா சொல்லியிருக்கார்!"

"மன்னிக்கவும் என்னை அகிலா!" கோபி முகத்தைத் திருப்பிக் கொண்டான். "இவ்வளவு அவலட்சணமாகி விட்ட உன்னை நான் எப்படி கல்யாணம் செய்துக்க முடியும்? என்னை மறந்துடு!"

அகிலா முதலில் திகைத்துப் போனாள். பிறகு சுதாகரித்துக் கொண்டவளாய், "ப்ளீஸ் கோபி, கொஞ்ச நேரம் வெயிட் பண்ணுங்க!" என்றபடி உள்ளே போனாள். சில நிமிஷங்கள் கழித்து அகிலா திரும்பி வந்த போது-

கோபியால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அகிலா அழகான முகத்துடன் பழைய அகிலாவாய்....

"நீ... நீ...?" திணறினான்.

"எனக்கு விபத்து எதுவும் நடக்கலை கோபி. கல்லூரி ஆண்டு விழாவிலே நடந்த நாடகத்திலே, ஸ்டவ் வெடிச்சு இறக்கிற மருமகளா நடிச்சிட்டு, அதே மேக்கப்போட வீட்டுக்கு வந்தேன். உங்ககிட்டே சும்மா தமாஷ் செய்து பார்க்கலாமேன்னு அப்படிச் சொன்னேன். இப்பத்தான் உங்க சுயரூபம் வெளிப்பட்டிருக்கு. நீங்க என் அழகை மட்டும்தான் காதலிச்சிருக்கீங்க. இல்லையா? என்னைவிட அழகான பெண் கிடைப்பாள் உங்களுக்கு!" புறப்பட்டு விட்டாள். எங்கே? குணவானான கணவன் ஒருவனைத் தேட.

---

# செய்யாவினை

தபாற்கந்தோர் சந்தியில் நாலாபக்கமும் எவரையும் நகர விடாது பொலிஸ்காரர்கள் சுற்றிவளைத்து தடுத்து நிறுத்தியபோதே எனக்குப் புரிந்துவிட்டது.

'எப்படியும் இந்த சுற்றிவளைப்பு முடிய இரண்டு மூணு மணித்தியாலயங்களாவது போகலாம். மலிவு விலை என்பதற்காக வாங்கிய மீன் இன்றைக்கு நாசம்' என்ற கவலை மேலிட முறையாகவே வரிசையில் நின்று கொண்டேன். எதிரே நின்ற வரிசையில் இருந்தவன் "ஹலோ...." என்றதும் எனக்குள் ஏகப்பட்ட அதிர்ச்சிகள். இவன் எப்படி...?

ஐயோ கடவுளே! என்னுடன் கதைத்துக் கொண்டதை யாராவது பார்த்திருப்பார்களோ...! எண் திசைகளிலும் பார்வையினால் நோட்டமிட்டுக் கொண்டேன். தூர வீதியின் அருகிலிருந்த பெரிய நிழல்வாகை மரத்தின் கீழ் நின்ற பொலிஸ்காரன் எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டு, என்னையே முறைத்துப் பார்த்துக் கொண்டது எனக்குள் நடுக்கத்தை ஏற்படுத்தியது. மனசு பலமாகவே அடித்துக் கொண்டிருந்தது.



**தி.இளையவன்**

'ஆபத்து நேரத்தில் சிக்குண்டவர்களுக்கு ஆறுதலாக நாலு வார்த்தைகள் சொல்லி உற்சாகப்படுத்தக் கூடிய வலிமை இருந்தாலும் நமக்கென்று ஆபத்து வரும்போது நம்மை அறியாமலே கால்கள் தடுமாறுவதை நிறுத்துவது எப்படி...?'

'ச்சே! வீணாக அவன் ஏன் என்னுடன் கதைக்க முயற்சிக்கணும்' விளைவுகளைப் பற்றிக் கவலைபடாமல் முகத்துக்கு நேரே நல்லாக் கேட்டுவிட மனசு துடித்துக்கொண்டாலும், அதை யாராவது கவனித்து நான் அவனுடன் பேசிக் கொண்டிருந்ததாகவோ, அல்லது தெரிந்தவன் தான் என்பதாகவோ பின்னர் சொல்லி விட்டால்...?

எதிர் வரிசையில் அவன் வந்து கொண்டிருந்தான். எதற்கும் முண்டியடித்துக்கொண்டு முன்னதாகச் சென்று பரிசோதனையை முடித்துக் கொண்டு முதலில் அவ்விடத்தை விட்டு விலகியாக வேண்டுமென்ற வைராக்கியத்துடன் வேகத்தைத் துரிதப்படுத்த, எதிர் வந்த பொலிஸ்காரன் என்னைச் சந்தேகமாகப் பார்த்து பின்னர் முறைத்து, "அவதிப்படாமல் போ" என்று சிங்களத்தில் அதிகாரத்தில் சொன்னதும் நடுக்கம் மேலும் கூடியது.

இப்போ என்ன திட்டத்துடன் ஊருக்குள்ளாக வந்துள்ளானோ...! நிச்சயம் இங்கு எங்காவது ஓரிடத்தில் விபரீதம் நடந்தேயாகும். அவன் செயல்பற்றி எனக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

இயக்கத்திற்கு அவன் போய் எப்படியும் ஐந்து வருடங்களுக்கும் மேல் இருக்கும். ஒன்றாகப் படித்த பழைய சிநேகிதம். தற்போதைய சூழ்நிலையில் அவனை பார்ப்பது பயமாக இருந்தது. ஒருவேளை அவன் பிடிபட்டு அவனை நன்கு தெரிந்திருந்தும் அதுபற்றி எவ்விதமான தகவல்களும் படையினருக்கு சொல்லாமலிருந்த காரணத்திற்காக என்னைப் பிடித்துக் கொண்டால் எனக்கு உதவுபவர்கள் யார்...?

'கடவுளே எப்படியும் அவனைக் காப்பாற்று.'

நீண்ட வரிசைகளின் அளவுகள் குறைந்து கொண்டிருந்தன. பரிசோதித்துக் கொண்டிருந்த பொலிஸ்காரர்களை நெருங்க எனக்குள் நல்லாகவே வியர்த்துக் கொட்டியது. கட்டுப் படுத்திக்கொள்ள முடியாதளவிற்கு கால்கள் தடுமாறின. புலிகள் என்ற போர்வையினுள் பிடிபடுபவர்களை விட அவர்களை நன்கு தெரிந்திருந்தும் தகவல்கள் கொடுக்க மறுத்தவர்களுக்கான தண்டனைகள் அதிகமாகக் காணப்பட்டிருந்ததென்ற தகவல்களை அறிந்திருந்தமையினால், என்னையறியாமலேயே கண்கள் கலங்கிக் கண்ணீர்க் கோடிட்டன. என்ன சோதனைக் களம்...!

ஒருவேளை பிடிபடக்கூடாது என்ற உறுதியில் அவன் விபரீதமாக ஏதாவது செய்து அதனால வார வில்லங்கத்துல நான் ஏன் வீணே மாட்டிக்கொள்ள வேண்டும்...? அந்த இடத்தில் அப்போது நானாக நான் இல்லை. அந்த நேரத்துல சாவு கூட பெரிதாகத் தெரியவில்லை தண்டனைகளுக்கு முன்பாக.

எதிரே, பாரியளவான பரிசோதனைகளுக்குள் அவன். என்னோட கஷ்ட காலம் என்னைவிட்டு விலகுவதாக இல்லை. அவனைச் சோதித்துக் கொண்டிருக்கும் போதே கூடவே என் முறையும் வந்தது. எதிரெதிரே இருவரையும் சோதித்துக்கொண்டிருக்கும்போதே தூர மர நிழலிலிருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த பொலிஸ்காரன் பரபரப்பாகவே எம்மை நோக்கி வர என் மூச்சே நின்றுவிடுமாப்போலிருந்தது. அவன் என்னை முறைத்துக் கொண்டல்லவா வருகிறான்.

'ஒருவேளை, அவனைப் பற்றி நன்கறிந்திருக்கும் பொலிஸ்காரனாக இருந்தால்..?' விரைந்து வந்தவன் பரிசோதித்துக் கொண்டிருந்தவன் காதில் ஏதோ சொல்ல அவன் சற்று விலகி தூர நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீல பஸ்ஸை அவதானித்தான்.

அதனுள்ளிருந்த தலையாட்டி ஏதோ சமிக்கை கொடுத்தாப் போலிருந்தது.

என்ன கொடுமை. எப்படியும் இன்று அவன் சிக்கலில் மாட்டிக்கொண்டான் என்ற ஏக்கக் கவலையுடன் மீண்டுமொரு தடவையாக அவனை நோக்கினேன்.

தான் இயக்கக்காரன் என்ற துணிவைக் காட்ட அந்த வேளையிலும் என்னைப் பார்த்துப் புன்னகைத்தான்.

என்ன தைரியம்! அவன் புன்னகைப்பது என்னைப் பார்த்தல்ல என்பதைப் பலரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக என் பார்வையைத் திசைமாற்றிக் கொண்டேன்.

வீடு செல்வதற்கான அவசரத்தை துரிதப்படுத்திக் கொண்டே பரிசோதனைக்கு ஏதுவாக முந்திக்கொண்டு செயல்படத் தொடங்கினேன். மனசு பலமாகவே அடித்துக்கொண்டது. கடவுளே அவன் மாட்டிக்கொள்ளவே கூடாது.

கண் இமைக்கும் நேரத்திற்குள்ளாகவே எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

சந்தேகத்தின் பேரில் என்னைக் கைது செய்து பலவந்தமாக பஸ்ஸினுள் ஏற்றினார்கள். இயலாத நிலைமையில் பஸ்ஸினுள் ஒரு ஜன்னலோரமாக சோகமாய் நான் இருந்தபோது,

"ஹலோ..." வழக்கமான புன்னகையுடன் வெளியிலிருந்து அவன் அழைத்தான்.

"தகவலை வீட்டாரிடம் சொல்கிறேன்!" என்றவாறு அவன் விரைந்து கொண்டிருந்தான்.

---

# பாதை

இருபது பயணிகளை ஏற்றிய இயந்திரப் படகு சீரான கதியில் நீரைக்கிழித்துக் கொண்டு சென்றது.

வன்னியையும் தீவுப்பகுதியையும் இணைக்கும் கடற்பரப்பில் தனியாக அந்தப் படகு தீவுப்பகுதியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

பயணிகளில் ஒருவனாக இருந்த நந்தன் ஒரு வருடத்திற்குப் பின் சொந்த மண்ணில் கால் பதிக்கப் போகிறான். ஊரும் ஊரில் பரந்திருக்கும் சொந்த பந்தமும் அவன் நினைவுகளில் கலந்து போயிருந்தன.

வன்னியிலிருந்து யாழ் செல்வதற்கான இந்தக் கடற்பாதையை அரசு அங்கீகரிக்காதபோதும், படையினருக்குத் தெரிந்து இப்பாதைப் பயணங்கள் நடைபெறுவதனால் மக்கள் பயமின்றி இப்பாதை வழியே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

யாழிலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்தவர்களும், திருமலையில் கப்பலுக்குக் காத்திருந்தவர்களும் விமானப் பயணத்திற்கு காத்திருந்தவர்களும் நீண்டகால ஏமாற்றத்தின் பின் பொறுமையிழந்து இப்பாதையைத் தேடி வந்து பயணஞ் செய்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து கடைசியாக வந்தபோது இனி 'ஊரையும் உறவுகளையும் எந்தக்காலம் பார்ப்போமோ?' என்ற ஏக்கத்துடன் எல்லாவற்றையும் பிரியமனமில்லாது பிரிந்து வந்த நந்தன், திரும்ப ஊருக்குப்போக சந்தர்ப்பம் விரைவில் கிடைக்கும் என கனவில்கூட நினைக்கவில்லை.

'ஊர் செல்கிறேன்!' என்ற நினைப்பு அவனுக்கு இழந்துவிட்ட சுதந்திரத்தை மீளப்பெறப்போகின்ற உணர்வைக் கொடுத்தது. ஆனால் ஊரைவிட்டு வந்து இன்றுவரை பட்ட அசௌகரியங்கள் அவனால் மறக்க முடியாத வடுவாகவே அவனது மனதில் விழுந்திருந்தது.

படித்துக் கொண்டிருந்த நந்தனை வெளிநாட்டுக்கு அனுப்ப அவனது அண்ணா ஜேர்மனியிலிருந்து கடிதம் போட்டதனால் கொழும்புக்கு வந்தான். அவனுக்குப் பிறந்த பூமியை பிரிந்து வருவதில் துளிகூட விருப்பமில்லை. ஆனால் அவனது குடும்ப நிலை அவனைக் கொழும்புக்கு அனுப்பியது.



**மு. கலை**

ஊரிலிருந்தபோது அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தான். கொழும்பு வந்து அடையாள அட்டையைப் பெற்றுக் கடவுச்சீட்டை எடுத்தவுடன் வெளிநாடு செல்வதுதான் நந்தனது நோக்கம்.

ஆட்பதிவுத் திணைக்களத்திற்குச் சென்றபோது அடையாள அட்டை ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தகவல் சொன்னார்கள்.

அடையாள அட்டை இல்லாவிட்டால் அடுத்து எந்த நடவடிக்கையிலும் ஈடுபடமுடியாது. ஊர் போய் அதைப்பெற்று வருவதற்கும் நினைத்தவுடன் போய்வரக் கூடியவாறா இன்று யாழ்ப்பயணம் இருக்கிறது?

உலகின் எந்த நாட்டுக்கும் எப்போதும் நினைத்தவுடன் சென்று வர முடியும். ஆனால் யாழ் சென்று வருவதென்றால் சந்திரமண்டலம் போய் வருவது போலாகிவிட்டது. அதனால், அடையாள அட்டையைக் கிராம சேவகரிடம் பெற்று உடனடியாக அனுப்பி வைக்குமாறு வீட்டுக்குக் கடிதம் எழுதிவிட்டு கொழும்பிலேயே விடுதி வாழ்க்கைக்குள் நந்தன் மூழ்கி விட்டான்.

"கொழும்பில் விடுதிகள் என்ற பெயருடன் இயங்கிவரும் பல, இன்று சிறைச்சாலைகள் போலத் தானே இயங்குகின்றன." என முன்பு ஊரில் ஒருவர் சொன்னதை இன்றுதான் அனுபவத்தால், உணர்ந்தான்.

இளைஞர்கள் யுவதிகள் விடுதிகளில் தங்க வைப்பதானால் விடுதி ஊழியர்களால் சிறைச்சாலைகள் போல கடுமையான விசாரணைகள் இடம்பெறுகின்றன.

பணம் சம்பாதிப்பதை மட்டும் குறியாகக் கொண்ட விடுதிகளில் எத்தனைபேர் வந்தாலும் அவர்களுக்கு "இடமில்லை" எனக் கூற மாட்டார்கள். அனுமதிப்பார்கள். இதனால் நிரம்பி வழியும் விடுதி அறைகள் சிறைச்சாலைக் கூண்டுபோலவே காணப்படும்.

விடுதிச் சிறையிலிருந்த நந்தனை ஒரு தடவை பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்டு வெலிக்கடைச் சிறையில் வைத்துவிட்டார்கள்.

தெரிந்த ஊரவர் அங்கு நின்றமையால் ஒரு வாரத்தின் பின் அவனை வெளியே எடுத்துவிட்டார்.

அவனது மாமா திருமலையில் ஆசிரியராக இருந்தார். வெளிநாடு செல்லும்வரை மாமாவுடன் தங்கி நிற்பது என்ற எண்ணத்துடன் திருமலை வந்து மாமாவுடன் தங்கியிருந்தான்.

"கிராம சேவகரிடம் அடையாள அட்டை வந்து சேரவில்லை!" என இரண்டு, மூன்று கடிதங்கள் வந்த பின்பு ஒருநாள்,

"கிராம சேவகரிடம் உனது அடையாள அட்டை வந்து விட்டது. ஆனால் நீ இல்லாமல் தரமாட்டாராம். அதனால் நீ வந்துதான் அதை எடுத்துப்போக வேணும்." என ஒரு கடிதம் வீட்டிலிருந்து வந்தது.

விமானப் பயணத்துக்கு விண்ணப்பித்துவிட்டு, கப்பல் பயணத்துக்கும் விண்ணப்பித்திருந்தான். தினமும் திருமலைப் பிரதேச செயலகத்துக்குச் சென்று கப்பல் பயணத்தை உண்டா? இல்லையா? எனப் பார்த்து வருவதுதான் அவன் தினசரி வேலையாகியிருந்தது.

அவன் மட்டுமல்ல, அவனைப் போன்ற பலர் பிரதேச செயலகத்தில் காலை வந்து கூடினால் கப்பல் பயணம் நடைபெறும் என்ற செய்தி கிடைக்காத ஏமாற்றத்துடன் மாலை இருப்பிடம் திரும்புவார்கள். அந்த நேரம் தொடர்ச்சியாக பல மாதம் கப்பல் பயணம் தடைப்பட்டிருந்தது. ஊர் போகும் எண்ணம் அவன் நினைவில் கலந்தது தொடக்கம் ஒழுங்கான சாப்பாட்டையும் தூக்கத்தையும் இழந்து நந்தன் தவித்துக் கொண்டிருந்தான்.

ஏக்கம் அவனை வதைத்துக் கொண்டிருந்தபோது, பிரதேச செயலகத்தில் அறிமுகமான சிலர் இப்பாதை பற்றிக் கூறினர். அவர்களுடன் வந்து இப்போது யாழ் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தான்.

பிறந்த பூமியில் கால் பதிக்க சில நிமிடங்கள் கரைய வேண்டியிருப்பது, கரை தெரிந்தமையால் நந்தனால் உணர முடிந்தது.

கரையிலிருந்து கடலுக்குள் கொஞ்சதூரம்வரை கற்பாறைகள் வெளியே தலையை நீட்டிக்கொண்டிருந்தன. அதனால் கரைவரைக்கும் இயந்திரப் படகினைக் கொண்டு செல்ல முடியாதென படகோட்டிகள் தெரிவித்துவிட்டனர்.

மார்பளவுத் தண்ணீருக்குள்ளேயே எல்லோரும் இறக்கி விடப்பட்டனர்.

பயணிகளில் ஒரு மூதாட்டியும் அவரது மகளும் நந்தனின் துணையோடுதான் வந்தார்கள். தண்ணீருக்குள் நடக்கச் சிரமப்பட்ட மூதாட்டியைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு நந்தன் வந்தான்.

இடுப்புக்குக் கீழ் தண்ணீரில் வந்த நந்தன் திரும்பிப் பார்த்தான். எல்லோருக்கும் கடைசியாக மூதாட்டியின் மகள் மூன்று பயணப்பையைச் சுமக்க முடியாமல் வந்து ஓர் கற்பாறை மீது பைகளை வைத்துவிட்டு களைத்து நிற்பதைக் கண்ட நந்தன், "இனி நீங்க போவீங்கதானே அம்மா? நான் போய் உங்க மகளிடம் பாக்கை வாங்கிட்டு வாறன்!" என்ற நந்தன் கடலுக்குள் நடந்தான்.

குளிரில் நடுங்கிக்கொண்டு கரையைத் தொட்ட மூதாட்டி திரும்பிப் பார்த்தாள். திகைத்து நின்றாள்.

மறுகணம்,ஆணிவேரில்லாத மரமாக கடற்கரை மணலில் சரிந்து வீழ்ந்தாள்.

நந்தனையும் அவளது மகளையும் காணவில்லை!

கடலின் ஆழமான ஒரு குழியில் வீழ்ந்து இறந்து கொண்டிருந்தார்கள்...

இந்தப்பாதை நந்தனைச் சொந்த மண்ணுக்கல்ல, சொர்க்கத்துக்கு கொண்டு சென்றுவிட்டது.

---

# அம்மா பார்க்கிறா!

ரி.வி.

அக்கம் பக்கம் பார்த்துவிட்டு உள்ளே வந்தான் அவன்.

திவ்யா திடுக்கிட்டாலும், அவன் வந்தது அவளுக்கு சந்தோஷத்தையே கொடுத்தது.

அவளுக்கும், அந்த இளைஞன் அரவிந்துக்கும்தான் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது. முகூர்த்தம் கூட வைத்தாயிற்று. ஆனால் இரண்டு மாதம் தள்ளி.

அதுவரை பொறுக்க முடியாமல் அவளைத் தேடி வீட்டிற்கே வந்துவிட்டான்.

"வாங்க!" என்றாள் திவ்யா நாணிக் கோணி.

"உன்னைப் பார்த்துப் பேசிடணும்கிற ஆசையை என்னாலே அடக்க முடியலே திவ்யா... அதுதான் வந்துட்டேன்!" என்றான் அரவிந்த். அவளை நெருங்கினான்.

"அம்மா...! அம்மா....!"

என்று விலகினாள் திவ்யா.

அவனோ அவளை நெருங்கி, "இதோ பார் திவ்யா. நாம் இருவரும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர்கள்... முகூர்த்தம் கூட வைத்துப் பத்திரிகையும் அடித்துவிட்டார்கள்!" என்றான்.

மறுபடியும் "அம்மா...! அம்மா...!" என்று அவனை விட்டு நகர்ந்தாள் திவ்யா.

"அம்மா... அம்மான்னு சொல்லி நல்ல சந்தர்ப்பத்தை வீணடிச்சுடாதே திவ்யா!"

"அம்மா பார்க்கிறா! அம்மா பார்க்கிறா!" என்றாள் திவ்யா திரும்பத் திரும்ப.



**சரண்யா**

அரவிந்த் ரி.வி.யிடம் சென்றான். ரி.வி.யில் திவ்யாவின் அம்மா சந்திரவதனா செய்தி வாசித்துக் கொண்டிருந்தாள். ரி.வி.யைப் 'பட்'டென்று அணைத்து கையோடு திவ்யாவையும் அணைத்தான் அவன். அவள் விலகவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



கமலாவதி
தன் காதலனை நினைத்து
கர்வப்பட்டாள்!

சோழ மகளை
கைபிடித்தவன்
வேழ நிகர்வீரன்
என்று வாழ்த்தினர்!

காதல் கணவனை
வாழ்த்தும் ஒலி கேட்டால்
காதல் துணைவியின்
உள்ளம் துள்ளும்தானே!

நாட்டுப் பற்று
வீட்டுப் பற்று
காதல் குறும்பு
வீரத்தில் குன்று
ஒன்றாய்க் கலந்த
துணைவன் வாய்த்தான்!

சோழ மன்னன்
மட்டும்
அவர்கள் காதலுக்கு
முட்டும் பகையானான்!

"அவன் வீரனாக
இருக்கலாம்
ஆனால் குலம்
வேறாக இருக்கிறதே!
நாம் மன்னர் குலம்
அவன்...?"
முகம் சுளித்தான் மன்னன்.

"எல்லோருமே
மனித குலம்தான்!"
என்றாள் மகள்.

"எதிர்த்துப் பேச
என்ன துணிச்சல்?"
சோழன் விழிகள் சிவந்தன!

"ஆராய்ச்சி மணியடித்து
நீதி கேட்க
மக்களுக்குள்ள உரிமை
மன்னன் மகளுக்கு
இல்லையா மகாராஜா?"

தந்தையும், மகளும்
மோதிக் கொண்டதில்
மகளே ஜெயித்தாள்!

"மகளே இரண்டில்
ஒன்று
நீயே முடிவு செய்!

நானா? அவனா?
அரச வாழ்க்கையா?- அந்த
ஆண்டியுடன் வாழ்க்கையா?
கட்டில் மெத்தையா-? அவனுடன்
கட்டாந்தரையா?"

"அவர்தான் வேண்டும்- என்
காதல் வாழவேண்டும்!"

"வயது வேகம்-அதுதான்
துள்ளிப் பார்க்கிறாய்!
போ! நீ மட்டுமல்ல

# உ ள் க் க ம்

உன் சந்ததியே
ஆண்டிகளாய் அலைவீர்கள்!"

சோழன் கோபத்தில்
சாபமிட்டான்!

அந்தச் சாபம்தான்
அவளை
சண்டைக்கிழுத்தது!

"வாழ்ந்து காட்டுகிறோம்
தந்தையே!
உங்கள் கண்முன்னால்
ஜெயித்துக் காட்டுகிறோம்!

எங்களுக்கு
மலரும் பூக்கள்
குப்பைக் கூடையிலல்ல
கோபுரத்தில் அமருவதை
காணத்தான் போகிறீர்கள்!"

மகளின் உறுதி
மன்னனையே
புருவம் உயர்த்த வைத்தது!

காதல் என்பது
தடைகளை தகர்த்தல்!
காதல் என்பது
வாழ்ந்து காட்டுதல்!

வாழ்க்கையை ரசித்து
வாழ்ந்து காட்டுதல்!

காதல் என்பது
வாழ்க்கையின் நெம்புகோல்!

பூமியைக்கூட
காதல் புரட்டும்!

வானத்தைக்கூட
காதல் வளைக்கும்!

தடைகளைக் கண்டு
தம்மை அழிப்பவர்
காதல் மூடர்!

கரைகளில் மோதும்
அலைகளைப் போல
தடைகளை கரைத்து
பொங்கிப் புரள்வதே
உன்னதக் காதல்!

கமலாதேவி-தன்
காதலனை
கைபிடித்தாள்!

உறவுகள் துறந்து
தேடிய புது உறவு!

இதயங்கள் கலந்தன
இன்பத்தில் விழுந்தன!

"உன்னில் தடுக்கி
உனக்குள் வீழ்ந்தேன்!"
என்றவன் கூறி
அவளுக்குள் கலந்தான்!

வாரி, வருடி
தேடி, திருடி
கூடிக் கலந்த
கோடி சுகத்தில்
மனம் மட்டுமா நிரம்பியது?
மடியும் நிறைந்தது!

ஒன்றும், ஒன்றும்
இணைந்தால் மூன்று!

காதலில்
ஒன்றும் ஒன்றும்
சேர்ந்தால்
ஒன்றுதான்

காமத்தில்
ஒன்றும் ஒன்றும்
சேர்ந்தால்
மூன்றுதான்!

இன்பக் கணக்குகள்
எந்த கணக்கு
விதிகளுக்கும் பொருந்தாது!

# இலக்கிய நயம்

கருவிலே இருப்பது
ஆண் உரு!

நாடி பிடித்து
மருத்துவர் கூறிவிட்டார்!

காத்திருந்தனர்
புதிய வரவுக்காக!

அந்த நாளும்
வந்து சேர்ந்தது!

பிரசவவலி
முதல் அனுபவம்
தலைப் பிள்ளையல்லவா!

கமலாதேவி
துடித்துப் போனாள்!

"இன்னும் ஒரு
நாழிகையில்
கையில் ஒரு பூங்கொத்து!"
மருத்துவர் கணித்தார்.

அந்த நேரம்
ஜோசியர் புகுந்தார்!

"அம்மா! கமலாதேவி
மேலும் இரண்டு நாழிகை
பொறுத்துப் பிறந்தால்
பிறக்கும் பிள்ளை
நாட்டையாள்வான்!"

எப்படி தாமதிப்பது?
கருவறையை
அடைக்கவா முடியும்?

அந்த வலியிலும்
கமலா தேவி
யோசனை கூறினாள்.

கேட்டவர் பதறினர்
மருத்துவரே பயந்தார்.

"என்னைத் தூக்கி
தலைகீழாய் கட்டுங்கள்
இரண்டு நாழிகையின் பின்னர்
இறக்கி விடுங்கள்!"

அப்படியே ஆனது
ஜோசியர் கணித்த
நேரத்தில் பிரசவம்
சுகமாய் நடந்தது!

செய்தி அறிந்த
சோழன்
துடித்து போனான்!

பிடிவாதம் தளர்ந்தது
கோபம் தணிந்தது!

"உன் மகன்தான்
நாளை மன்னன்!
என் பேரன்தான்
நாளை பேரரசன்!

உன் ஊக்கம்
மெச்சினேன்!
ஊக்கத்தால் உலகை
வென்று காட்டலாம்!
நினைப்பதை எல்லாம்
நடத்தியும் காட்டலாம்!"
என்று போற்றினான்.

"அப்பா!
ஊக்கம் இன்றேல்
மகிழ்ச்சி இல்லை!
ஊக்கம் இன்றேல்
வலிமை இல்லை!
ஊக்கம் இன்றேல்
உயர்ச்சி இல்லை!"
என்றாள் கமலாதேவி.

"உள்ளம் இல்லாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு."

அதிகாரம்: 60- குறள்: 598

தருவது ரசிகன்

# சிந்தியா பதில்கள்

★ தேர்தல் முடிவுகள் எதனைக் காட்டுகின்றன?

எம். கோவிந்த், கொழும்பு.

ஐ.தே.கட்சி 17 வருடங்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்தது! பொ.ஐ.மு. ஐந்து வருடங்களில் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது!

★ வடமேல் மாகாணசபைத் தேர்தல் போன்று ஐந்து மாகாண சபைத் தேர்தலில் வன்முறைகள் இல்லைத்தானே?

கா. ஆ. ப்தீன், கண்டி.

பாரியளவில் இல்லைதான்! இதற்கு காரணம் யார் தெரியுமா? தேர்தல் கண்காணிப்புக் குழுதான்! கடந்த முறை- முறைகேடுகள் அம்பலமானதால், இம்முறை ஜாக்கிரதையாக நடந்துகொண்டனர்! இரண்டாவது காரணம் யாதெனில்: ஒரே மாகாணம் என்றால் கட்சிகளது குண்டர் படைகளை ஒன்று குவிக்கலாம்! ஐந்து மாகாணங்களில் சாத்தியமில்லையே!

★ தாய்லாந்து இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று கூறியுள்ளதே?

பி. தினேஷ், கொழும்பு-15.

"வழங்கமாட்டோம்!" என்று கூறமுடியாதுதானே!

★ ஜே.வி.பி. பெற்றுள்ள வெற்றி பற்றி உமது கருத்து யாது?

கே. சுஜீவன், கொழும்பு-07.

"ஜே.வி.பி. என்றால் கிராமங்களில்தான் செல்வாக்கு!" என்று கூறப்பட்டு வந்தது. அதுவும் பொய்யாகியுள்ளது! தலைநகரிலேயே எட்டு ஆசனங்களைப் பிடித்திருக்கிறார்கள்!

★ எதிரியின் பலத்தை எப்படிப் பலவீனமாக மாற்றுவது?

சி. காராளசிங்கம், வவுனியா.

இராமாயணப் போர் நடக்கிறது. இராவணன் படைகள் எல்லாம் இராமரால் அழிக்கப்பட்டுவிட்டன.



'பெரியண்ணா' படத்தில் விஜயகாந்த்–சூர்யா–மானஸா

போர்க்களத்திலிருந்து ஒருவன் தப்பிச் சென்று இராவணனிடம் தகவல் கூறுகிறான்:

"பிரபு! நமது படைகள் அழிந்துபோயின. இராமரது பாணத்தால் அனைவரும் மாண்டு போனார்கள்!" என்று கூறினான்.

இராவணன் அவனைப் பார்த்து: "அப்படியானால் நீ மட்டும் எப்படித் தப்பித்தாய்?" என்று கேட்டான்.

"என் புத்திசாலித்தனத்தால் தப்பித்தேன்!" என்றான்.

"அப்படி என்ன புத்திசாலித்தனம்?" என்று கேட்டான் இராவணன்.

அதற்கு அவன் சொன்னான்:

"பிரபு! இராமருக்கு ஒரு சொல். ஒரு இல். ஒருவில் என்று பெயர். சீதையைத் தவிர வேறு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். அதனால் நான் பெண்ணுடை உடுத்திக்கொண்டு தப்பி வந்தேன். இராமர் என் பக்கம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை!"

★ 'படையப்பா' பாடல்கள் எப்படி?

வி. கோமதி, மாத்தளை.

'என் பேரு படையப்பா' சிறுவர் வாயிலும் அமரும் பாடல்! 'மின்சாரக் கண்ணா'வும் நன்று! ஏ.ஆர்.ரகுமான் தன் பாணியில் இருந்து சற்று நழுவி ரஜினி இரசிகர்களையும், ரஜினியின் வேகத்தையும் மனதில் வைத்து இசையமைத்துள்ளது மாதிரித் தெரிகிறது!

★ தமிழ்நாட்டில் ஜெயலலிதாவை கன்னிமரியாளாகக் காட்டியதுபோலத்தானே, இங்கு ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரை மடு தேவாலய சுவரொட்டியில் காண்பித்தனர்? இது முறையா?

எம். ஜோசப், நீர்கொழும்பு.

மடு தேவாலயத்தை தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்தியது தவறுதான்! ஆனால் ஜெயலலிதா விவகாரம் வேறு விதமானது! ஜெயலலிதாவை கன்னிமரியாளாகவே வரைந்திருந்தனர்! அதாவது மரியாளின் முகத்துக்குப் பதிலாக ஜெயலலிதா முகம்! இங்கு அப்படிச் செய்யவில்லை! ஆனால் மடுமாதாவின் பக்தர்களுக்கே ஜனாதிபதியும், படையினரும் மாதாவைத் தரிசிக்க வரம் கொடுத்தனர் என்று வாசகம் அமைத்திருந்தனர்!

★ விஜயகாந்த் 'கள்ளழக'ரில் வயதானவர் போலத் தெரிகிறாரே?

கு. இரவீந்திரன், மட்டக்களப்பு.

வயதாகிக் கொண்டிருப்பதும் உண்மைதானே! அதற்கேற்ற பாத்திரங்களைத் தெரிவு செய்தால் சிறப்பாக இருக்கும்.

★ சிந்தியா! மடு மாதா தேவாலயத்தை கைப்பற்றியதாக பிரசாரம் செய்தது கிறிஸ்தவ மதத்தினரிடம் ஆதரவைப் பெற்றிருக்கும் என்கிறீரா?

டி. லிங்கேஸ், உடப்பு.

மறுதலையான விளைவே ஏற்பட்டுள்ளது. நீர்கொழும்பில் பொ.ஐ.முன்னணி தோல்வியைத் தழுவியதற்கு அதுவும் ஒரு காரணம்!

★ சித்திரைப் புத்தாண்டுக்கு வெளியாகும் படங்கள் எவையென்று கூறுங்கள்?

எஸ். நித்தியா, கொழும்பு-06.

'படையப்பா', 'மோனிசா என்



'படையப்பா'வில் ரஜினி–ரம்யா கிருஷ்ணன்

மோனலிசா', 'பெரியண்ணா', 'ராஜஸ்தான்'.

★ 'கடி ஜோக்' ஒன்றை எடுத்து விடுங்களேன்?

ச. கோமளராஜன், மட்டக்களப்பு.

"ஒரு முட்டாளை எப்படி எப்படித் தவிர்த்து விடுவது தெரியுமா?"

"தெரியாதே! எப்படி?"

"நாளைக்குச் சொல்கிறேன்!"

★ 'சக்தி'- 'பாட்டுப் பாடவா' நிகழ்ச்சி எப்படியிருக்கிறது?

எம். நூர்தீன், மருதானை.

தொகுத்து வழங்குபவருக்கு இசையில் ஈடுபாடு காணாது என்பதால், விறு விறுப்பு போதவில்லை! 'சன்' 'சப்தஸ்வரங்கள்' பிரபலமானதற்கு ரமணனின் தொகுத்து வழங்கும் ஆற்றலே காரணம்! அதுபோல பாட்டுக்குப் பாட்டு பிரபலமானதுக்கு அப்துல் ஹமீத் தான் காரணம்!

★ காதலிக்கும்போது சுறுசுறுப்பாக இருக்கும் சிலர் கல்யாணத்தின் பின்னர் சோம்பேறிகளாகி விடுகிறார்களே, ஏன்?

ஆர். விஜயலட்சுமி, நுவரெலியா.

காட்டிற்கு வேட்டையாடப் போன ஆசாமி ஒருவர் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்தார். ஒருநாள் இரவு நேரத்தில் இளம் பெண் ஒருத்தி தனியாக வந்தாள்.

அவளைத் தடுத்து நிறுத்தி "இரவு வேளையில் காட்டுப் பாதையில் செல்வது நல்லதல்ல, திரும்பிப்போய்விடு!" என்று கூறினார்.

"திரும்பி என் ஊருக்குச் செல்ல ஐந்து மணிநேரமாகும்!" என்றாள்.

"சரி, என் கூடாரத்தில் தங்கிக்கொள். காலையில் உன் பயணத்தைத் தொடரலாம்." என்று யோசனை கூறினார் ஆசாமி.

அவளும் அந்தக் கூடாரத்தில் தங்கினாள். ஒரே ஒரு கட்டில் மட்டும்தான் இருந்தது. அந்தப் பெண் கட்டிலில் படுத்திருந்தார். ஆசாமி கீழே படுத்துக்கொண்டார்.

சற்று நேரத்தின்பின்னர் அந்தப் பெண் எழுந்து, "உங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. நீங்களும் என்னுடன் கட்டிலில் வந்து படுத்துக்கொள்ளுங்கள்!" என்று கூறினார்.

ஆசாமியும் கட்டிலில் அவள் பக்கத்தில் படுத்துக்கொண்டார். சிறிது நேரத்தில் அவளிடம் கேட்டார்: "நாம் கல்யாணம் செய்தவர்கள் மாதிரி படுத்துக்கொள்ளலாமா? அல்லது கல்யாணமாகாதவர்கள் மாதிரி படுத்துக்கொள்ளலாமா?"

அந்தப் பெண் ஒருமாதிரியாகச் சிரித்துவிட்டு, "கல்யாணமானவர்கள் போலவே படுத்துக் கொள்ளலாம்!" என்றாள்.

உடனே ஆசாமி "சரி, அப்படியானால் நீ அந்தப் பக்கம் திரும்பிப் படுத்துக்கொள்!" என்று கூறிவிட்டு, அவளுக்கு முதுகைக் காட்டியபடி எதிர்ப்பக்கம் திரும்பிப் படுத்து தூங்கத் தொடங்கிவிட்டார்!

ஸ்போர்ட்ஸ்

# 60 ஓவர் போட்டிகள்

முதலாவது உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் 1975ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இப்போட்டிகள் யாவும் இங்கிலாந்தில் நடைபெற்றன. அப்போது போட்டிகள் யாவும் 60 ஓவர்கள் கொண்டதாக இருந்தன.



முதல் உலகக் கோப்பை போட்டியின் முதலாவது போட்டி 1975ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் திகதி இங்கிலாந்திற்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்றது. இங்கிலாந்து அணிக்கு டென்னிஸும், இந்திய அணிக்கு எஸ்.வெங்கட்ராகவனும் (தற்போது அம்பயராக இருப்பவர்) தலைமை தாங்கினர்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 334 ஓட்டங்களைக் குவித்தது. இந்தியா 60 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 132 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. இதனால் 202 ஓட்ட வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இன்றுவரை ஒருநாள் போட்டிகளில் இவ்வளவு ஓட்ட வித்தியாசத்தில் எந்த அணியும் வென்றதில்லை. இது ஓர் உலக சாதனை.

இப்போட்டியில் இந்தியா சார்பாகவும் ஓர் உலக சாதனை நிகழ்த்தப்பட்டது. இந்தியாவின் துவக்க ஆட்டக்காரர் சுனில் கவாஸ்கர் முதல் பந்தில் இருந்து கடைசிப் பந்துவரை 60 ஓவர்களும் விளையாடி ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களைப் பெற்றார்.

இன்றுவரை ஒருநாள் போட்டிகளில் முதல் ஓவரின் முதல் பந்திலிருந்து 60வது ஓவரின் கடைசி பந்துவரை எந்தவொரு வீரரும் விளையாடியதில்லை. அத்துடன் அதிகநேரம் விக்கெட்டுக்கு முன் நின்று இவ்வளவு குறைந்த ஓட்டங்களைப் பெற்றதுமில்லை.

இத்தொடரின் முதல் போட்டியில் அதிக ஓட்ட வித்தியாசத்தில் இந்தியா தோற்றாலும் கிழக்காபிரிக்காவுடன் நடைபெற்ற போட்டியில் 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிழக்காபிரிக்கா 55.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் பிஷன் சிங் பேடி ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். எனினும் உலகசாதனை படைத்தார். இப்போட்டியில் 12 ஓவர்கள் பந்து வீசினார். இதில் ஓட்டமில்லாத (மெய்டன்) 8 ஓவர்கள் வீசினார். 6 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

இதுவரை இந்தப் பந்து வீச்சுச் சாதனையும் முறியடிக்கப்படவில்லை.

# உலகக் கோப்பை

ஏழாவது உலகக் கோப்பைப் போட்டியில் பங்குபற்றும் 15 பேர் கொண்ட அணிகளின் பட்டியலை எல்லா நாடுகளும் அறிவித்துவருகின்றன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய 3 நாடுகளின் உலகக் கோப்பை வீரர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

### இலங்கை அணி விவரம்:

அர்ஜுன ரணதுங்க (தலைவர்), அரவிந்த டி சில்வா (உபதலைவர்), சனத் ஜயசூரிய, ரொமேஷ் கலுவித்தாரன, மார்வன் அத்தபத்து, ரொஷான் மகாநாம, மகேல ஜயவர்த்தன, ஹஷான் திலகரட்ன, சமிந்த வாஸ், பிரமோதய விக்கிரமசிங்க, எரிக் உபசாந்த, சந்திக்க ஹத்துருசிங்க, நுவான் கல்பகே, உபுல் சந்தன, முத்தையா முரளீதரன்.

### இந்திய அணி விவரம்:

முகமட் அஸாருதீன் (தலைவர்) அஜய் ஜடேஜா (உபதலைவர்), சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி, ராகுல் ட்ராவிட், சடகோபன் ரமேஷ், அமே குரேஸியா, ரொபின் சிங், நயான் மொங்கியா, அஜித் அகார்கர், நிகில் சோப்ரா, ஜவகல் ஸ்ரீநாத், வெங்கடேஷ் பிரசாத், அனில் கும்பளே, தேபஷிஷ் மொஹந்தி.

### பாகிஸ்தான் அணி விபரம்:

வாஸிம் அக்ரம் (தலைவர்), சயிட் அன்வர், ஷஹிட் அஃப்றிடி, வஜகத்துல்லா வஸ்தி, இஜாஸ் அஹமட், இன்சமாம்-உல்-ஹக், யூசுப் யுஹானா, சலீம் மாலிக், மொயின் கான, அஸார் மெஹ்மூத், ஷோயிப் அக்தர், சக்லெய்ன் முஷ்டாக், அப்துல் ரஸாக், வக்கார் யூனுஸ், முஷ்டாக் அஹமட்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 57

"ஆண்டவர், அரசி எஸ்தருடைய வேண்டுகோளைக் கேட்டார். தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சமுதாயம் படும் துயரங்களை ஆண்டவர் உணராமலில்லை. மக்கள், ஆண்டவரால் வகுக்கப்பட்ட வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடிக்காமல் தான்தோன்றித்தனமாக நடக்க முற்படும் போதெல்லாம், அவர்களுக்குத் தண்டனை வழங்கினார்; அவர்களை வெறுத்தொதுக்குவதற்காக அத்தண்டனைகள் அமைவதில்லை.

## எஸ்தர் அளித்த விருந்து

அவர்கள், தாம் செய்த தவறுகளை- இறைவனுக்கு விரோதமான செயல்களைக் கடைப்பிடிப்பதிலிருந்து- பாதை மாறித் தம்மிடம் திரும்பிவர வேண்டும் என்பதற்காகவே தண்டனைகளை வழங்கினார்.

பெற்றார் தம் பிள்ளைகளை நல் வழிப்படுத்துவதற்காகத் தண்டனை தருவதுபோல- நல்லாசிரியர் மாணாக்கர்களைத் திருத்துவதற்காக கண்டிப்பது போல- இறைவனும் மக்கள் வழி தவறும் போதெல்லாம் தண்டனை வழங்கி ஆற்றுப்படுத்துகிறார்.



தாம் செய்த குற்றங்களை உணர்ந்து, மக்கள் மன்னிப்புக் கோரும் போது, இறைவனும்- பெற்றாரைப் போல, நல்லாசானைப்போல- மன்னிப்பளித்து அரவணைத்துக் கொள்ளுகிறார்.

சதிகாரனான ஆமான், யூதா மக்கள் சமுதாயத்தைப் பூண்டோடு ஒழித்துக்கட்டத் திட்டமிட்டமையினால், மொர்தக்காய் மனம் வருந்தியவராக இறைவனிடம் மன்றாடினார். தனது வளர்ப்பு மகளும் பட்டத்தரசியுமான எஸ்தரிடம் தகவல் அனுப்பினார். எப்படியாவது மன்னரைக் கண்டு, ஆமானின் சூழ்ச்சிகளை அம்பலப் படுத்தி, யூதா இனம் பேரழிவிலிருந்து காப்பாற்றப்பட வழி தேடுமாறு கேட்டுக்கொண்டார்.

### கட்டுப்பாடுகள்

அரண்மனையில் பல கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. மன்னரை எவரும் மனது விருப்பப்படியெல்லாம் போய்க் காணவோ, கருத்துக்களைப் பரிமாறவோ முடியாது. பட்டத்து அரசியானாலும் அரசரின் முன் திடீரெனப் போய் நிற்க முடியாது. மன்னர் அழைத்தால் மட்டுமே அரசியும் அரசரிடம் போகலாம். இதனை மீறினாலும் அரச தண்டனை கிடைக்கும்.

இத்தகைய கட்டுப்பாடு இருக்கும்போது, அரசரிடம் போய்- தன் இனத்துக்கு நேர்ந்துள்ள துயரைக் களையவேண்டி எவ்வாறு முறையிடுவது, என்று எஸ்தர் தயங்கினார்.

'திக்கற்ற மக்களுக்குத் தெய்வம் துணைபுரியும்' என்பதை எஸ்தர் உணர்ந்தார். உடனடியாகவே தனது அரசபோகப் படாடோப ஆடை ஆபரணங்களைக் களைந்து, சாதாரண உடைகளை அணிந்து கொண்டார். பிரார்த்தனைக்குரிய மண்டபத்தை அடைந்து, இடையறாமல் பிரார்த்தித்தார்.

சூசா நகரிலிருந்த யூதர்கள் அனைவருக்கும் அரசி எஸ்தர் தகவல் அனுப்பினார். அவர்கள் அனைவரும் மூன்று நாட்கள் உண்ணாமல், உறங்காமல் நோன்பிருந்து இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அரசி எஸ்தர் தொடர்ந்து மூன்று நாட்கள் உண்ணாமல் உறங்காமல் நோன்பு நோற்றார். மூன்று நாட்களின் பின்னர் தன்னைச் சுத்திகரித்துக் கொண்டு, பட்டாடைகளாலும் பல வகை ஆபரணங்களாலும் அலங்கரித்துக் கொண்டு, ஒப்பனைகளையும் செய்தவராக மன்னரின் அரண்மனை நோக்கிப் புறப்பட்டார். துணைக்கு இரு தாதிப் பெண்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

அரியணையில் கம்பீரமாக அரசர் வீற்றிருந்தார். மந்திரிப் பிரதானிகள் அனைவரும் சூழ்ந்திருந்தனர். எதிர்பாராத வகையில் அரசவைக்குள் யாரோ- அனுமதியின்றி வருவதைக் கண்ட மன்னர் அர்தக்சஸ்தாவின் கண்களில் தீப்பொறி கிளம்பியது. அரசரின் கோபக் கனலைச் சகிக்க முடியாத அரசி எஸ்தரின் தலை சுற்றியது. தடுமாறிக் கீழே விழப்போனவரை இரு தாதியர்களும் தாங்கிப்பிடித்தனர்.

நேராக உற்றுப் பார்த்ததில், தன்னை நோக்கி வந்துகொண்டிருந்தவர் பட்டத்தரசி எஸ்தர்தான் என்பதை மன்னர் கண்டு கொண்டார். ஆண்டவரும் மன்னரின் உள்ளத்தை இழகவைத்தார். அரியணையிலிருந்து எழுந்தோடி வந்து எஸ்தரைத் தனது கரங்களில் பற்றிக்கொண்டார். அவையிலிருந்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்று அடுத்து என்ன நடைபெறுமோ என்று அஞ்சி நடுங்கியவர்களாகக் காணப்பட்டனர்.

மன்னர் எஸ்தரின் நிலை கண்டு பெரும் வேதனை அடைந்தார். தனது வலது கையில் அரசியின் உடலைத் தாங்கிய வண்ணம்,

"என் அன்பு எஸ்தர்...! உனக்கு என்ன நடந்து விட்டது? கண்களைத் திறந்து என்னைப் பார்! உன் அன்புக்குரியவன் தான் உன்னருகில் நிற்கிறேன்..!" என்று தலையைத் தடவினார். அருகிலிருந்த ஓர் ஆசனத்தில் அமர்த்தி ஆசுவாசப்படுத்தினார்.

எஸ்தர் கண்களைத் திறந்து பார்த்தார். தான் சற்று முன்னர் பார்க்கும்போது தீப்பந்தங்கள்போல் காட்சி அளித்த மன்னவரின் கண்களில் கருணை வெள்ளம் கரைபுரண்

**இராஜகுமாரன்**

டோடியதைக் கண்டார்; எழுந்து நின்றார். ஆனால் மீண்டும் தடுமாறி கீழே விழவிருந்தார். மன்னர் தாங்கியவாறு இருக்கையில் அமர்த்தினார். எஸ்தரின் மயக்கம் தெளிவதற்கான உதவிகளைச் செய்தார்.

மயக்கம் நீங்கியதும், "எஸ்தர்...! என் அன்புக்குரியவளே! உனக்கு என்ன நேர்ந்தது? உனக்கு என்ன வேண்டும்? நீ எதைக் கேட்டாலும் நான் இப்போதே தரத் தயாராக இருக்கிறேன்? சொல்! உன் தடுமாற்றத்துக்கான காரணம்தான் என்ன...?" என்று மிக மென்மையான குரலில் கேட்டார்.

### விருந்துக்கு அழைப்பு

ஆண்டவர் தன்னுடைய பிரார்த்தனைக்குச் செவி மடுத்துவிட்டார், என்பதை அரசி எஸ்தர் உணர்ந்துகொண்டார். இருப்பினும் மன்னரிடம் உடனடியாகத் தன் கோரிக்கையை முன்வைப்பது நல்லதல்ல என்பதனை அறிந்தவரானார்.

"மாமன்னவரே! தங்களைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தமையினாலேயே தங்களை நாடிவந்தேன். ஆனால் தங்களை நேடியாகக் கண்டதுமே சற்று அச்சங்கொண்டு தடுமாறிவிட்டேன். என்னை மன்னியுங்கள். இன்றிரவு நான் தங்களுக்கு ஒரு விருந்தளிக்க எண்ணியுள்ளேன். தயவு செய்து தாங்கள் இந்த விருந்தில் கலந்துகொண்டு எனக்குப் பெருமை அளிக்க வேண்டும். தங்களுடன் என் விருந்துக்கு ஆமானையும் அழைத்து வாருங்கள்!"

இவ்வாறு எஸ்தர் கூறியதும் மன்னர் தெளிவு பெற்றார். எஸ்தருக்கு ஏதோ விபரீதம் ஏற்பட்டு விட்டதே... என்றுதான் மன்னர் அதுவரை கருதினார். தன்னை விருந்துக்கு அழைக்கவே எஸ்தர் வந்திருக்கிறார், என்பதை அறிந்ததும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். கட்டாயம் வருவதாகவும் ஒப்புக்கொண்டார்.

எஸ்தரின் அந்தப்புரத்தில் மன்னவருக்கும் ஆமானுக்கும் வெகு விமரிசையாக விருந்து நடைபெற்றது. வகைவகையான உணவுப் பண்டங்களையும் விசேடமான திராட்சை இரசத்தையும் இருவருக்கும் அரசி எஸ்தர் பரிமாறினார். மன்னரும் உண்டு குடித்து உவகையுற்றார். விருந்து முடிந்ததும், மன்னர் ஆமானுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு எஸ்தரை தன்னருகில் அழைத்தார். எஸ்தருக்கு எது வேண்டுமானாலும் தரலாம் என்று திரும்பத் திரும்பக் கூறினார். ஆனால் அப்போதும் தன் உள்ளக்கிடக்கையை மன்னரிடம் கூறவில்லை. தான் மறுநாள் இரவும் விருந்து வைக்கப் போவதாகவும் கூறி, மன்னர், ஆமானுடன் வந்து கலந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மன்னர் எஸ்தரின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

### ஆமானின் திட்டம்

ஆமான், எஸ்தர் அளித்த விருந்துண்டு மகிழ்ந்து தனது இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டான். இடையில் ஓரிடத்தில் மொர்தக்காய் அமர்ந்திருப்பதைக் கண்டான். அவர்மீது அவனுக்கிருந்த வெறுப்பு பன்மடங்காகியது. தனதில்லம் சென்றதும், தனது தோழர்களையும் மனைவியையும் அழைத்து, அரசி எஸ்தர் அளித்த விருந்தைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினான். இடைக்கிடையே மொர்தக்காயின் உருவம் ஆமானின் மனக்கண்முன் தோன்றி அவனுடைய உள்ளத்தை ஆட்டிப் படைத்தது.

தன்னுடன் இருந்தவர்களிடம் தான் மொர்தக்காயை அடியோடு வெறுப்பதைப் பற்றியும் கூறினான். மன்னர் அர்த்தக்சஸ்தாவிடம் தனக்கிருக்கும் செல்வாக்கை எடைபோட்டுப் பார்த்தான். மொர்த்தக்காயை தூக்கிலிட்டுக் கொன்றாலும் மன்னர் தன்னை எவ்வகையிலும் குற்றம் காணமாட்டார், என்று கருதிவிட்டான். தன்னுடைய வீட்டின் முன்புறத்திலேயே ஐம்பது முழம் கொண்ட தூக்குமரம் ஒன்றை நிறுவி, அதில் யூதரான மொர்தக்காயைத் தொங்க விடப்போவதாக தன்னைச் சூழ்ந்தவர்களிடம் கூறினான். உடனடியாகவே ஒரு தூக்கு மரத்தை அமைக்குமாறு ஏவலாளர்களிடம் கூறினான்.

அரசவையிலும் அரண்மனையிலும், நாட்டிலும் நடைபெறும் முக்கியமான சம்பவங்களைப் பதித்து வைக்கும் பழக்கம் அப்போதே நடைமுறையிலிருந்தது. விருந்து முடிந்து தனது அரண்மனை திரும்பிய மன்னருக்கு அன்று தூக்கம் வரவில்லை. இதுவும் ஆண்டவருடைய செயல்தான். அமைச்சர்களில் ஒருவரை அழைத்து, முக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்து வைத்திருக்கும் ஏடுகளைக் கொண்டு வருமாறு பணித்தார். அவற்றைப் படிக்கும் படியும் சொன்னார்.

அரசரைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டிய இரு ஏவலாளர்களை மொர்தெக்காய் பிடித்துக் கொடுத்த நிகழ்வினைப் பற்றிய கட்டம் வந்த போது, மன்னர் அவ்விடத்தில் படிப்பதை நிறுத்தச் சொன்னார். அமைச்சரைப் பார்த்து,

"அமைச்சரே! மன்னரின் உயிரைப் பறிக்கச் சதித்திட்டம் தீட்டியவர்களை மொர்தெக்காய் கையும் களவுமாகப் பிடித்தாரல்லவா? அவருக்கு நாம் இதுவரை எவ்வித மதிப்பும் மரியாதையும் தரவில்லை. ஆகவே அவரை நாளைக் காலையிலேயே அழைத்து, அவருக்கு மதிப்பும் மரியாதையும் தந்து வெகுமதிகளையும் அளிக்கவேண்டும்!" என்றார். அமைச்சரும் அதனை ஆமோதித்தார்.

இதேவேளை காவலன் ஒருவன் மன்னரிடம் வந்து, ஆமான்- மன்னரை மிக அவசரமாகப் பார்க்க வந்துள்ளார் என்ற தகவலைக் கூறினான்.

(தொடர்ந்து வரும்)

திருமறை 55க்கான சரியான விடையும் பரிசு பெற்றோர் விவரமும் அடுத்த வாரம் இடம்பெறும் என்பதனை வாசகர்களுக்கு அறிந்தருகிறோம்.

**திருமறை 57** வினா:- எஸ்தர் அளித்த விருந்தில் யார் யார் கலந்து கொண்டார்கள்?

ஏப். 24க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 57— தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**




காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/40/NEWS/99)
www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:

105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# ரோபோட்



படத்தில் காணப்படுவதும் ஒரு ரோபோ தான். பிள்ளைகள் விளையாடப் பயன் படுத்தும் பிளாஸ்டிக் கட்டுமானத்துண்டு களைக் கொண்டே உருவாக்கப்பட்ட- 'சுயமாகச் சிந்தித்து' இயங்கும் ரோபோ இது. வீட்டு உபயோகத் துக்காகப் பயன் படுத்தும் கணனி (கொம்பியூட்டர்) யைக்கொண்டே இதையியக்க முடியு மாம்.

'ரோபோ' எனப்படும் இயந்திர மனிதர்களின் சாதனைகள் இன்று உலகளாவிய ரீதியில் பிரசித்தமாகி விட்டன. மனிதனால் உருவாக்கப்பட்டாலும் தானாகவே இயங்கி மனிதனால் செய்ய முடியாத பல காரியங்களை இந்த ரோபோக்கள் செய்கின்றன.



அமெரிக்காவின் மசாச்சு செட்ஸ் தொழில் நுட்ட நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் பாப்பேட் என்பவரின் அனுசரணையுடன், லெகோ என்பவர் கடந்த 1998ம் ஆண்டு-ஜனவரி மாதம், இந்த ரோபோவை இயக்கிக் காண்பித்தார். இதனை உருவாக்க லெகோவுக்கு எத்தனை ஆண்டுகள் பிடித்தன தெரியுமா? 10 ஆண்டுகள்.

லெகோவுக்குத் தாகம் எடுத்தபோது, ரோபோ, அவருக்குப் பிடித்தமான குளிர்பான டப்பாவைத் தூக்கிக் கொண்டு அவரை நோக்கிச் செல்கிறது. இக்காட்சி அதன் சிந்திக்கும் ஆற்றலுக்கு சாட்சி. கின்னஸில் உலக சாதனை ரோபோவாக இதனை பதிவு செய்துள்ளனர்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# வினோதம்

தென்னாபிரிக்காவில் மொஸாம்பிக், ஸிம்பாப்வே, பொட்ஸ்வானா மற்றும் சுவாஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே குருகர் தேசியவனம் அமைந்து இருக்கிறது.



உலகில் வேறு எந்தப்பகுதியிலுமே காண முடியாத உயிரினங்களை- அவற்றின் இயல்பான சுற்றுச்சூழலில் குருகர் வனத்தில் பார்க்கலாம்.

இங்கு காணப்படும் சாம்பல் வர்ண லௌரிப் பறவை குருகர் வனத்தில் மட்டுமே காணப்படும் ரகம். பழுப்பு நிறம், சாம்பல், கறுப்பு ஆகிய வர்ணங்களைக் கொண்ட இக் குருவியின் தலையில் கோபுரம் போல் ஒரு கொண்டையும் காணப்படும். இதன் வாலும் மிக நீளமானது.

பழவகைகள் மட்டும்தான் இதன் உணவு. எப்போதும் கூட்டமாகவே வாழும்.இப் பறவை பறப்பதுகுறைவு ஒரு கொப்பி லிருந்து மற்றுமொரு கொப்புக் குப் பாய்ந்து தாவும். ஆற்றங் கரையில் கனவேக மாக ஓடவும் கூடியது.

# மாற்றம்





➡ இவை பயங்கரமான மேக்-அப் என்றா நினைக் கிறீர்கள். மேக்-அப் போடாமலேயே முகங்கள் இப்படி மாறும். இதைப்படியுங்கள் புரியும்.


விமானிகள்-அதற்கான தகுதியை அடைவதற்கு முன்னர் தொடர்ச்சியான-மிகக்கடுமையான பயிற்சி களுக்குட்பட்டாக வேண்டும். சாதாரண விமானிகளைப் பார்க்கிலும் போர்விமானங்களை ஓட்டுபவர்களுக்குத் தான் பலதரப்பட்ட பயிற்சிகள் தரப்படுகின்றன.

⬆ சாதாரணமான வேகத்தில் செலுத்தப்படும் விமா னத்தை, ஒரு நொடியில் கன வேகத்தில் செலுத்த வேண் டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அவ்வேளையில் வேக அழுக்கத்தில் அந்த விமானியின் முகபாவத்தில் ஏற்படும் மாற்றங்களை இப்படங்கள் மூன்றும் காட்டுகின்றன.

அமெரிக்காவின் ஃபிலடெல்ஃபியா மாநிலத்திலுள்ள அமெரிக்கக் கடற்படை விமானப்பிரிவுக்கான மையத்தில் பயிற்சியிலிடுபட்ட விமானியின் தோற்றங்களே இவை.

440 கிலோ மீட்டர் (275 மைல்) வேகத்தில் செலுத்தப் பட்ட விமானம் திடீரென்று 560 கிலோ மீட்டர் (350 மைல்) வேகத்தைத் தொட்டது. அந்த வேக அழுக்கத்தத்தில் இரண்டாவது, மூன்றாவது நொடிகளில் அந்த விமானியின் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையே துல்லியமாகப் படம் பிடித்துள்ளனர்.

# கப்டன்



⬅ பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு இது யோக காலம். வாசிம் அக்ரம் மீண்டும் கப்டனான பின்னர் அணி புகுந்து தூள் கிளப்புகிறது.

கப்டன் வாசிம் அக்ரமுக்கும் இது யோக காலம்தான். டெஸ்ட் போட்டிகளில் அடுத்தடுத்து 'ஹாட்ரிக்' ஒரு நாள் போட்டிகளிலும் தொடர் வெற்றிகள்.

துடுப்பாட்டத்திலும் வாசிம் அக்ரம் பிரகாசித்திருக்கிறார். சமீபத்திய பெப்சி கிண்ண ஒரு நாள் போட்டிகளில் சிக்ஸர்கள் பறந்தன. பெப்சி கிண்ணத்தை பாகிஸ்தான் அணி பெற்றுக் கொண்டது.

உலகக் கிண்ணப் போட்டி நடப்பதற்கு இன்னமும் ஒரு மாதமே இருப்பதால், பெப்சி கிண்ணம் பாகிஸ்தான் அணிக்கு உற்சாக மாத்திரை.

'இம்முறை உலகக் கிண்ணத்தை வென்றே தீருவோம்' என்று சூளுரைத் துள்ளார் அக்ரம். பாகிஸ்தான் மறுபடி எழுந்துள்ள வேகத்தைப் பார்த்தால் அக்ரம் கூறுவதை அலட்சியம் பண்ண முடியாது.

சென்ற உலகக் கிண்ணப் போட்டியில் அணியிடம் ஒரு தளர்ச்சி காணப்பட்டது. இம்முறை உற்சாகம் பீறிடுகிறது.

துடுப்பாட்ட வரிசையும், பந்துவீச்சு வரிசையும் இம்முறை கெட்டியாக இருக்கிறது. சம்பத்திய வெற்றிகள் கொடுத்த தெம்பும் அணிக்கு ஆயிரம் மடங்கு பலம்.

பாகிஸ்தான் அணி தோற்பதானால்கூட போராடித்தான் தோற்கும். இறுதிவரை வெற்றிக்காக முயற்சிக்கும். இத்தகைய மனோநிலை இந்திய அணியிடம் காணப்படுவதில்லை.

1992இல் உலகக் கோப்பையை பாகிஸ்தான் வென்றபோது இம்ரான்கான் கப்டன். 22 ரன்களால் வெற்றிபெற்றது பாகிஸ்தான். அப்போது 'மேன் ஒஃப்த மேட்ச்' விருது பெற்றவர் வாசிம் அக்ரம்.

கடந்த ஆண்டு பாகிஸ்தான் அணியில் வாசிம் அக்ரமுக்கு பல பிரச்சனைகள். அணியும் தடுமாறியது. சிம்பாப்வே அணியிடம் பாகிஸ்தானிலேயே மண்கவ்வியது.

அதன் பின்னர்தான் வாசிம் அக்ரம் மறுபடி கப்டனாக்கப்பட்டார். அணி தொடர்ந்து பல வெற்றிகளை குவித்து ஏறுமுகம் கண்டது.

இம்ரான்கானின் சீடரான அக்ரம், இம்ரான்கானுக்கு பின்னர் பாகிஸ்தான் அணிக்கு கிடைத்த வெற்றிகரமான கப்டன் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தியாவுக்கு சார்பாக சில ஆட்டங்களை முடிக்க பணம் வாங்கினார் என்றெல்லாம் பாகிஸ்தான் அணியில் சிலர் புகார் கூறினார்கள். அதனால் மன முடைந்தபோதும், இப்போது அதையெல்லாம் மறந்துவிட்டு கருமமே கண்ணாயிருக்கிறார்.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



21.03.1999

காரைநகரைச் சேர்ந்த கதிர்காமநாதன்-தனலட்சுமி தம்பதியினரின் அருந்தவப் புதல்வி மாதங்கி தனது இரண்டாவது பிறந்தநாளை சுவிஸ்-சூரிச்சில் மிகவும் விமரிசையாக (21.03.1999) அன்று ஞாயிற்றுக்கிழமை கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார்கள், மாமிமார்கள், பெரியம்மாமார்கள், பெரியப்பாமார்கள், சித்திமார்கள், சித்தப்பாமார்கள், மச்சான்- மச்சாள்மார்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் செல்வி மாதங்கியை அடிள்வில் (ADILVIL) முருகன் துணையுடன் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

செல்வி க. மாதங்கி (K. MATHANGHI)


படிப்பகம்